Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்



மில்க்வைற் தயாரிப்புகளின்
மேலுறைகளைச் சேகரித்து
அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை-யாழ்ப்பாணம்

மலர் 12 | சௌமிய பங்குனி 24 | முஹர்ரம் 28 | (6-4-70) | திங்கட்கிழமை | இதழ் 55

# தமிழரசுக்கட்சியில் சிங்கள மக்களும் அங்கம் வகிக்கலாம்

## அமைப்பு விதிகளில் மாற்றம்?

(நமது சிறப்பு நிருபர்)

சிங்களமக்களும் அங்கம்வகிக்கக்கூடிய முறையில் தமிழ் அரசுக்கட்சியின் அமைப்புவிதிகளில் மாற்றம் செய்யப்படலாம். கண்டியமக்களில் சிலர்இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிஅமைப்பு வேண்டுமெனக்கோருவதால் இங்கு சமஷ்டிஆட்சியை ஏற்படுத்துவதற்குச் சிங்களமக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டியது அவசியமெனத் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலர்கருதுவதாகவும் இதைத் தலைவர்கள் சிலர் ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தை மட்டும் கொண்டதாக இல்லாமல் கண்டிப் பகுதியையும் கொண்ட மாகாண சுயாட்சியுடைய சமஷ்டிஅரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு கண்டிப் பகுதிமக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்குஅகிலஇலங்கை ரீதியில் பரந்தஅளவில் தமிழரசுக்கட்சியைப் புனரமைப்புச் செய்யவேண்டுமென்றும் இதன்மூலம் தமிழரசுக்கட்சியைப்பற்றி சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தவறான கருத்தை நீக்கிவிடலாமென்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்கள் கருதுகிறார்கள்.

## கரவெட்டியில் துப்பாக்கிக்கு இளைஞர் பலி

(உடுப்பிட்டி, புலோலி நிருபர்கள்)

**கரவெட்டியில் நேற்று முன்தினம் நள்ளிரவு துப்பாக்கி இளைஞர் ஒருவரது உயிரைப் பலியெடுத்தது. ஸ்தலத்திலேயே அவர் துடிதுடித்து மாண்டார்.**

வீதியில் நடந்த கலவரமொன்றை அடுத்தே இக்கோரச் சம்பவம் நடந்ததாக பொலிஸ் புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இருபத்தேழு வயது இளைஞரான வேலுப்பிள்ளை ராகவன் அல்லது ஆனந்தம் என்ற இவரின் கொலை சம்பந்தமாக பாலசுப்பிரமணியம், வன்னியசிங்கம் ஆகிய இருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் தேடுகின்றனர்.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. சில்வா, இன்ஸ்பெக்டர் பெர்னாண்டோ ஆகியோர்ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார்கள்.

## அதிபர்கள் விசேடதர ஆசிரியர்கள் நியமனம்

(நமது நிருபர்)

முதல்தர அதிபர், 1-ம் விசேட ஆசிரியர் பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட தமிழர் முஸ்லிம்கள் வருமாறு:

திரு. என். சபாரத்தினம் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), திரு. சபாநாயகம் (டிறிபேக் கல்லூரி), வட்டாரக் கல்விஅதிகாரி திரு. பி, எஸ் குமாரசாமி, திரு ஈ கே சண்முகதாஸன் (கிறிஸ்தவக் கல்லூரி கோப்பாய்) செல்வி எம் ஆறுமுகம் (பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி). ஜனாப் ஏ இ பெற் ஒமர்தீன் (ஸாகிராக்கல்லூரி கம்பளை), ஜனாபா எம் எம் பி ஸாலி (முஸ்லிம் மகளிர் கல்லூரி) ஆகியோர் முதல்தர அதிபர்களாகவும், திருவாளர்கள் ஏ நடராசா, ஏ ராமசாமி, எஸ் வைத்தியநாதன், திருமதி ஏ ராஜரத்தினம், ஜனாப் ஜே எம் எம் அப்துல் காதர் ஆகியோர் முதலாந்தர விசேட ஆசிரியர் பதவிகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்; இவர்களுக்கு அரசாங்கசேவைக் கமிஷனால் நியமனங்கள் வழங்கப்படும்.

அதிகாரிகள் தரத்தில் அல்லாத

## இ. போ. ச. ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

கோட்டை, சனி

இலங்கைப் போக்குவரத்துச்சபையில் அதிகாரிகள் தரத்தில் அல்லாத சகலஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கிடைத்துள்ளது. புதிய சம்பளஉயர்வில் நாணய மதிப்புக் குறைப்புப் படிகளும் கிடைக்கும்.

பெப்ரவரிமாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த சம்பளஉயர்வு அமுலுக்குவரும். பெப்ரவரி மார்ச் மாத நிலுவைப்பணம் மே மாதத்திற்குள் ஊழியர்களுக்கு கிடைக்கவுள்ளது.

## ரவிசங்கர் இலங்கை வருகிறார்

(நமது நிருபர்)

இந்தியாவின் புகழ்பெற்ற சித்தார் வாத்தியநிபுணரும், இசைவல்லுனருமான திரு ரவிசங்கர் இம்மாதம் 16ம் திகதி இலங்கைக்கு விஜயஞ்செய்வார்.

இவருடன் புகழ்பெற்ற பாடகர் கோஷ்டியொன்றும் சேர்ந்து இலங்கைக்கு வருகின்றது.

இவரை இலங்கை கல்வி கலாசார அமைச்சர் இரியகொல்லையும், இந்தியத் தூதுவரும் கட்டுநாயக்காவிமான நிலையத்தில் வரவேற்பார்கள். கொழும்பு றோயல்கல்லூரியில் இவரது இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

# சோவியத் அரசாங்கத்தில் மாறுதல் ஏற்படலாம்

## தலைவர்கள் சுகவீனம் பிரஸ்னேவ் மாஸ்கோ திரும்புகிறார்

மாஸ்கோ, ஏப் 5

சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் உடல்நலம்குன்றி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் சோவியத் தலைவர் பொட்கர்ணியும் சுகவீனமுற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது சோவியத் தலைவர் திரு பொட்கர்ணி சுகவீனமுற்றிருப்பதால் அவர் மேற்கொள்ளவிருந்த ஜப்பான் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது

ஹங்கேரி நாட்டில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பிரஸ்னேவ் மாஸ்கோ திரும்பிக்கொண்டிருக்கிறார்

நாட்டின் பொருளாதாரப் பிரச்னையை எப்படித் தீர்த்துவைப்பது என்பது பற்றி தலைவர்களிடையே சர்ச்சை ஏற்பட்டிருந்த இச்சமயத்தில், தலைவர்கள் சுகவீனமுற்றிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் சோவியத் அரசாங்கத்திலும், கட்சியிலும் பெரும் மாறுதல்கள் ஏற்படலாமென நம்பப்படுகிறது.

## யாத்திரிகர்

கோட்டை. சனி

கடந்த வார இறுதியிலும் போயாதினத்தின்போதும் சுமார் ஒரு லட்சம் யாத்திரிகர்கள் சிவனொளிபாத மலை ஏறியுள்ளார்கள்.

உடுப்பிட்டித்தொகுதிப் பிரச்னை

## கம்யூனிஸ்ட்டுடன் மோதுகிறார் சமசமாஜக்கட்சி பிரமுகர்

(பருத்தித்துறைநிருபர்)

"சென்ற தேர்தலில் எக்கட்சி ஒரு தொகுதியில் போட்டியிட்டதோ அக்கட்சிக்கே இத்தேர்தலிலும் போட்டியிட உரிமையுண்டு, என்ற கூட்டுக்கட்சிகளின் ஒழுங்குக்கமைய உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் உரிமை சமசமாஜக் கட்சி வேட்பாளராகிய எனக்கன்றி கம்யூனிஸ்ட் கட்சிக்கல்ல."

இவ்வாறு குறிப்பிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் வெளியிட்டுள்ளார்.

மேலும் இப்பிரசுரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் இடதுசாரி இயக்கத்திற்கு செய்த தவறுகளையும், மார்க்சிய-லெனினிச தத்துவங்களுக்கு முரணாக நடந்துகொண்டதையும் திரு. தர்மரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# டட்லியின் சவாலை ஏற்று மாஜி பிரதம நீதியரசர் அரங்கத்துக்கு வருவாரா?

## தொகுதிகள் தோறும் பகிரங்க விவாதம்

தென் னிலங்கையிலும் சரி வட இலங்கையிலும் சரி தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. அரசியல் குட்டையைக் கலக்கி அரசியல்வாதிகள் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் எதையாவது பூசிக்கொள்ளட்டும் அப்பாவி மக்கள் மீது தார் பூசாமல் இருந்தால்போதும்.

இலங்கையின் பிரதம நீதியரசராகப் பதவிவகித்தவர் திரு. ஹேமாபஸநாயக்கா இன்று தமிழ்த் துவேஷத்தைக் கக்குவதில் அவர்தான் முன்னணியில் நிற்கிருர் அடுத்ததேர்தலின் பின்மீண்டும் திரு. டட்லியின் தலைமையில் யு. என். பி. ஆட்சிக்குவந்தால் இன்னும் சிலவருடங்களில் இங்கு சிங்கள இனமோ சிங்கள மொழியோ பௌத்தமோ இருக்கமாட்டாதென்று அவர் பூச்சாண்டி காட்டுகிருர். தம்பதெனியா ஆர். ஜி. யை விட இந்த முன்னுள் பிரதம நீதியரசர் வகுப்புவாதப் பேச்சுப்பேசுகிருர். இவர் புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்து வந்தார். பின்னர் என்னகாரணமோ அந்தயோசனையைக் கைவிட்டுவிட்டார்.

சமயநம்பிக்கையில்லா மார்க்ஸீய வாதிகளுடன் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுச்சேர்ந்து விட்டதால் அந்தக் கட்சியினுல் சிங்களபௌத்த மக்களுக்குத் திங்கு நேருமென்பதாலும் டட்லியின் தலைமையிலுள்ள யு.என்.பி. சமஷ்டியினருடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதால் தமிழர்களுக்கு சிங்கள மக்கள் அடிமையாகி விடுவார்களென்பதாலும் சிங்கள இனத்தையும், சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் பாதுகாப்பதற்கு திரு: ஹேமாபஸநாயகாவைத்தவிர வேறுயார் இருக்கின்றனர்? இப்படி ஓர் எண்ணம் அவர்மனதில் உதித்தது. அவரதுபெயரை நேரடியாகச் சொல்லாமல் புதிய கட்சியொன்று சரியான ஒருவரின் தலைமையில் உருவாகவேண்டுமென்று சுயாதீனப்பத்திரிகாசமாஜத்தின் ஆங்கிலதினசரியான 'சன்' பத்திரிகையில் ஒருவர் எழுதியிருந்தார். ஆர். ஜி: சேனநாயக்காவும் இந்த நோக்கங்களையும் கொள்கைகளையும் அடிப்படையாக வைத்துப் புதியகட்சி ஆரம்பித்திருப்பதால் ஓர் ஊரில் இரண்டு பைத்தியக்காரர்களா என்று நினைத்து புதிய கட்சி ஆரம்பிக்கும் திட்டத்தை ஹேமாபஸநாயகா கைவிட்டிருக்கக்கூடும்.

1965-ம் ஆண்டுத் தேர்தல் முடிந்ததும் தமிழ் அரசுக்கட்சிக்கும் யு. என்.பிக்குமிடையில் உடன்பாடு ஏற்படுத்துவதில் முன்னுள் பிரதம நீதியரசர் ஹேமாபஸநாயகாவும் முக்கிய பங்கு வகித்தவர். பின்னர் ஏன் யு. என் பி. ஆட்சிமீது அவருக்கு வெறுப்பேற்பட்டது? பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. ராணி மாளிகைக்குள் வாசம் செய்யும் வாய்ப்புக்கிடைக்காதது தான் முக்கியகாரணமென்றும் சொல்லப்பட்டது. ஜுருக்கலாம்.

''மறைந்து நின்றுகணை தொக்காதீர் நேருக்குநேர் வாருமே'' என்றுஇந்த முன்னுள் பிரதம நீதியரசரை பிரதமர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அழைப்பு விடுத்திருக்கிருர். அரங்கத்துக்கு வந்தால் பல விஷயங்கள் அம்பலத்துக்கு வரக்கூடும்.

''எரிகிற கொள்ளியில் எந்தக்கொள்ளி நல்ல கொள்ளி'' தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் யு.என். பி. யும் சரி தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும சரி தான் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் அவர்களின் கோரிக்கைகளை மறுப்பதிலும் இந்த இரண்டு கட்சிகளும் போட்டிபோட்டுக் காரியம் பார்த்துவந்திருக்கின்றன. தமிழர்களின் உரிமைகளை மறுப்பதிலும் அவர்களை நசுக்குவதிலும் யார் சமர்த்தர் என்பதில் இரு கட்சிகளும் போட்டிபோடுகின்றன,

### தந்திரமா ராஜதந்திரமா?

இதேசமயம் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவர்களுக்கு நன்மை செய்வதிலும் நாங்கள்தான் முன்னணியில் நிற்கிருேம் என்று இரண்டு கட்சியினரும் பெருமைப்பட்டுக் கொள்கிருர்கள். முஸ்லிம்மக்களையும் தமிழ் மக்களையும் பிரித்துவைக்கும் தந்திரமா அல்லது முஸ்லிம் மக்களின் ராஜதந்திரமா?

### பகிரங்க விவாதம்

சென்றவாரம் ஊர்காவற்றுறைத் தொகுதியில் புளியங்கூடல் என்னுமிடத்தில் தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு: வ. நவரத்தினமும் தமிழ் அரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ, அமிர்தலிங்கமும் பகிரங்க விவாதத்தில் பங்குபற்றினர். அடையாள அட்டை மசோதா, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஆகிய இரு முக்கிய விஷயங்கள் பற்றி இந்த விவாதம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் இந்த விவாதத்தைக்கவனித்தனர். மிக அமைதியாக இந்த விவாதம்நடைபெற்று முடிந்தது. பொலிசார் தகுந்த ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர் கட்சித் தலைவர்களும் அபேட்சகர்களும் தொகுதிகள் தோறும் இப்படி ஒரே மேடையில் நின்று தங்கள் தங்கள்கொள்கைகள் இலட்சியங்கள்நோக்கங்கள் திட்டங்கள் ஆகியவற்றை எடுத்து விளக்கிக் கூறி மக்கள் சிந்தித்துச் செயல்பட வழிகாட்டினுல் அபேட்சகர்கள் வீடுவீடாகச்சென்று வாக்குத் தேடவோ. அவர்களுக்குப் பின்னுல் ஒருசிலர் 'கொடி' பிடித்துச் செல்லவோ அவசியமிராது. 1965-ம் ஆண்

(15-ம் பக்கம் பார்கக)

## உலக மேடை

# ஆசியாவில் தோல்வியடைந்த இரு அரசியல் கொலை முயற்சி

இந்திய மார்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் மேற்கு வங்காளத்தில் முதன் மந்திரி பதவி வகித்தவரை உண்ணுவிரதமிருக்கச் செய்தவரும் மேற்கு வங்கத்தின் முன்னுள் உதவி முதன் மந்திரியுமான திரு. ஜோதிபாசுவைக் கொலை செய்ய நடந்த முயற்சி பலிக்கவில்லை. கொலை முயற்சி பற்றிய செய்தி கிடைத்ததுமே மேற்கு வங்கத்தில் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைச் செயல்களும் அதிகரித்து அல்லோலகல்லோலப்பட்டது. துப்பாக்கிக்குண்டுபட்டு ஜோதிபாசு மாண்டிருந்தால் நிலைமை எப்படியிருந்திருக்கும்.

இந்தக் கொலை முயற்சி பற்றிக் கேள்விப்பட்டதும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி முதல் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கவலையும் கண்டனமும் தெரிவித்தனர். மேற்கு வங்கத்தின் முன்னுள் முதல் அமைச்சரான திரு. அஜோய் முக்கர்ஜி கண்டனம் தெரிவித்ததுமட்டுமல்ல, 'ஆளை முடித்துக்கட்டுவதால் அரசியல் கருத்துவேறுபாடுகளுக்கு முடிவுகட்ட முடியாது' என்றும் தெரிவித்தார்.

அஜோய் முக்கர்ஜி தலைமையில் மேற்கு வங்கத்தில் கூட்டணி மந்திரிசபை அமைக்கப்பட்டபோது அதில் உதவி முதன் மந்திரியாகவும் பொலிஸ் மந்திரியாகவும் ஜோதிபாசு பதவியேற்ருர். சட்டசபைக்குள் கூடப் பொலிசார் புகுந்து தாக்குதல் நடத்துமளவுக்கு அங்கு சம்பவங்கள் நிகழ்ந்தன. முதன் மந்திரிகூடச் சிலரால் தாக்கப்பட்டபோது பொலிசார் தலையிடவில்லை. அங்கு வன்முறைச் செயல்கள் அதிகரித்தன. அதிகாரமிருந்தும் அதை உபயோகிக்க முடியாத நிலையிலிருந்த அஜோய் முக்கர்ஜி உண்ணுவிரதமிருந்தார். ஆயினும் பயன் கிட்டவில்லை. முதன் மந்திரி பதவிக்கே மதிப்பில்லாமல் போய்விட்டது.

ஜோதிபாசு எதையும் விட்டுக்கொடுக்கவில்லை. வேறு வழியில்லாமல் அஜோய் முக்கர்ஜி பதவி துறந்தார். ஆட்சி கவிழ்ந்தது. மாற்று மந்திரி சபை அமைக்க நடந்த முயற்சியும் பலிக்கவில்லை, ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. சட்டசபையைக் கலைத்து உடனடியாக இடைத்தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று ஜோதிபாசு டில்லியைக் கேட்டார். இது தகுந்த சமயமல்லவென்று டில்லி கைவிரித்துவிட்டது. டில்லிக்கு வந்த ஜோதிபாசு பீகாருக்குப் போனுர். அங்கு பாட்ன ரயில்வே நிலையத்தில் அவரை வரவேற்கப் பெருந்திரளானேர் திரண்டிருந்தனர். கூட்டத்துடன் கூட்டமாக நின்ற ஒருவன் ஜோதிபாசுவை நோக்கிச் சுட்டான். அவன் வைத்த குறிதப்பி அருகே நின்ற ஒருவரின் உயிரைக் குடித்தது. சுட்டவன் தப்பிவிட்டான். ரயில்வே நிலையத்துக்கு வெளியே மேற்குவங்க இலக்கம் பொறித்த கார் ஒன்றும் நின்றதாம். சுட்டவனைப் பொலிசார் ஏன் பிடிக்கவில்லையென்று ஜோதிபாசு கூறுகிருர். இது திட்டமிட்ட முயற்சியென்றும் சொல்கிருர். இச்கொலை முயற்சிபற்றி விசாரணை நடைபெறுகிறது.

இதேசமயம் மேற்கு வங்கத்தில் ஒரு கிடங்கில் மூன்று நான்கு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதுபற்றியும் அங்கு நடந்த கொலைகள்பற்றியும் பகிரங்க விசாரணை நடைபெறவேண்டுமென்றும் கோரிக்கை வலுப்பெற்றுவருகிறது.

எஸ். எம். ஜி.

### புட்டோமீதும் கொலை முயற்சி

பாகிஸ்தானின் முன்னுள் வெளிவிவகார அமைச்சரும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமான ஜனுப் ஸில்புகார் அலி புட்டோவைக் கொலைசெய்ய சென்ற வாரம் நடந்த முயற்சியும் தோல்வியடைந்திருக்கிறது. புட்டோவுக்காக மற்ருெருவர் உயிர்ப்பலி கொடுத்திருக்கிருர். பதினேராண்டு கால இராணுவ ஆட்சியின் பின் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படவிருக்கிறது. இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் அங்கு பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தேர்தல் முடிந்து தேசியசபை கூடியதும் 120 தினங்களுக்குள் தேசியசபை அங்கத்தவர்கள் புதிய அரசியல்

(15-ம் பக்கம் பார்க்க)

புதுவருட பண்டிகையை முன்னிட்டு
றொலறம்ஸ் ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை
உங்களுக்குத் தேவையான
★ சேட்டுகள் ★ கால்சட்டைகள்
★ பிளவுஸ்கள் ★ கவுண்கள்
★ சேலைகள் 10 வீதம் கழிவு
இன்னும் அநேக தினுசுகள்
அத்துடன் உங்கள் விருப்பத்திற்கு
ஏற்றமுறையில் தைக்கக்கூடிய இடம்
றொலறம்ஸ்
46, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
போன்: 7099

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்மூடி விழிப்பதற்குள் தனித்து நின்று கனகாரியஞ் செய்தவர்

## சைவ அநாதசாலை இராசரத்தினத்தின் நினைவுச் சின்னம்

### — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்றால், அது திரு. சு. இராசரத்தினம் அவர்களேயாம் என்பது அரசாங்கம் உட்பட அறிய வேண்டியவர்கள் அனைவரும் அறிந்தது.

கன எலி மண்ணெடுப்ப தரிது: தனி மனிதன் செய்து முடிக்கும் வேலையைச் சங்கம் கூடிச் செய்வதில்லை.

சங்கத்தைச் சாட்டுக்கு வைத்துக்கொண்டு, தனி மனிதரான திரு. இராசரத்தினம் அவர்கள், நினைக்கவும் எட்டாத எத்தனையோ காரியங்களைக் கண்மூடி விழிப்பதற்கு முன் செய்துமுடித்தவர்கள்.

பறங்கியரும் ஒல்லாந்தரும் சைவக்கோயில்களையெல்லாம் தரைமட்டஞ் செய்து சென்றனர்: ஆங்கிலேயர் வந்ததும் பார்க்குமிடமெல்லாம் சைவக் கோயில்கள் தோன்றின, அவ்வாறே திரு. இராசரத்தினம் அவர்கள் தலை நிமிர்ந்ததும் காணுமிடமெல்லாம் சைவப் பாடசாலைகள் காட்சியளித்தன.

ஒருமுறை கல்கியாசிரியர் யாழ்ப்பாணத்தில் யாரும் தடக்கி விழ நேர்ந்தால், யாராவது ஒரு சைவ உபாத்தியாயர் மேலேதான் விழ நேரும்' என்று எழுதினார். அவர் அவ்வாறு வருணிக்கத்தக்கவகையில் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை மூலம் சைவாசிரியர்களை மலியச்செய்தவர் திரு. இராசரத்தினம் அவர்களே.

1500க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் சைவாசிரிய கலாசாலை உதவியிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலே சைவ கோயில்களுக்கும் சைவப் பாடசாலைகளுக்கும் குறைவேயில்லை. சைவசமய புனருத்தாரணரான ஆறுமுகநாவலர் அவர்கள், எந்த ஒரு கோயிலையோ எந்த ஒரு பாடசாலையையோ எவ்வளவு தூரம் அங்கீகரிப்பர் என்பது சிந்தனைக்குரியது!

பாடசாலையும் கோயிலும் ஒருமையுற்றுக் கிராமந்தோறும் பல வேறுபட்ட வாழ்க்கைத் துறைகளுக்கும் ஆன்மீக நெறிக்கும் வழிகாட்டவேண்டுமென்பதே நாவலர் திட்டம். நாவலர் திட்டம்பற்றிக் காரைதீவிலுதித்த அருணாசலம் என்ற ஒரு மகான் சிந்தித்ததுண்டு. சிந்தனையளவில் அது நின்றுவிட்டது அந்த மகானுடன் கூடிச் சிந்திப்பாரில்லை.

திரு இராசரத்தினம் அவர்களுக்கு அந்த அருணாசலத்தின் தொடர்பு இருந்து வந்தது. அருணாசலம் தம் வாழ்க்கை முழுவதையும் சைவாசிரியர்களை உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்துக்கே அர்ப்பணித்தவர்; அதில் வெற்றியுங் கண்டவர். அருணாசலத்தின் பைத்தியம், சட்டசபைக்கு என்று திரு. சு. இராசரத்தினம் கால்தூக்கி வைத்தாரோ அன்றே அவரை அது பற்றிக்கொண்டது.

திரு. இராசரத்தினம் அவர்கள் தம் சுகத்தையோ குடும்பச் செல்வாக்கையோ பொருள் செய்ததில்லை. வாழ்க்கை முழுவதையும் பாடசாலை தாபித்தற்கே அர்ப்பணஞ் செய்தார்கள். காடுகள் நாடுகள் மூலைகள் முடக்குக்கள் எங்கும் சைவவித்தியா விருத்திச்சங்க பாடசாலைகள் காட்சியளித்தன பாடசாலைகள் யௌவனதசையைக் கடக்குஞ்சமயத்தில் அரசாங்கம் சுபளீகரஞ் செய்துவிட்டது இப்பொழுது உன்னத கல்லூரிகளோ வெறும் கட்டடங்களாய்க் காட்சியளிக்கின்றன. மாணவர் ஆசிரியர் தொகைக்குக் குறைவில்லை. ஒரு விஷயம் என்னவென்றால் கல்வி குடிபோய்விட்டது. இனிப் பாடசாலைகள் பற்றியோ பல்கலைக்கழகம் பற்றியோ பேசுவதிற் பயனில்லை. அந்த ஒப்பாரியை நிறுத்திவிட்டு, அத்தியாவசியம் சிந்திக்கவேண்டியதைச் சிந்திப்போம்: அது தான் சைவ அநாதசாலை.

0 0 0

சைவாசிரிய பயிற்சிக்கலாசாலையும் பாடசாலைகளும் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் உடம்பானால் அவர்களின் உயிர்ப்பு,

'சைவ அநாதசாலை'

இறப்பதற்கு முதனாளுக்கு முதல்நாள் (10-3-70) சாயந்தரம் கூடச் சைவ அநாத சாலைக்கு வந்து, காரில் இருந்தபடி, அநாதசாலைக்கு வேண்டியவைகளை விசாரித்து, பின் இறங்கி உள்ளே போய் மேற்பார்வையிட்டுஞ் சென்றவர்கள் திரு. சு. இராசரத்தினம் அவர்கள்.

ஓர் அநாதைக் குழந்தைக்கு உணவு இல்லையென்றால் திரு. இராசரத்தினம் அவர்களின் உயிர் துடிக்கும். அநாதைக் குழந்தை ஒன்றின் சரீரத்தில் உபாத்தியாயர் ஒருவரின் பிரம்பு தீண்டியதென்று கேள்விப்பட்டாலோ அந்த உபாத்தியாயருக்கு அரிசிபோட வேண்டியதில்லை. ஒன்றும் விசாரியாமலே அந்த உபாத்தியாயருக்கு அந்தமான் தீவுக்கு மாற்றம் வந்துவிடும். அதுபற்றிக் கேட்டால் சீறிப்பாய்வார் திரு. இராசரத்தினம்.

திரு. இராசரத்தினம் அவர்களுக்குப் பெற்ற பிள்ளைகள் மாத்திரம் பிள்ளைகள் அல்லா, அநாதப் பிள்ளைகளும் அவர் பிள்ளைகளே.

நாற்பது வருடகாலம் அநாதசாலைக்கருகே அதனோடு கலந்தும் கலவாமலுமிருந்து நான் கண்ட உண்மை இது.

°°

திரு. சு. இராசரத்தினம் அவர்களுக்கு ஒன்று செய்வதானால், அது அவர்கள் ஸ்தாபித்த அநாதசாலையைப் பலமுகமாக அபிவிருத்தி செய்து வைப்பதேயாம். அதுவே அவர்களுக்கு நாம் நாட்டும் வச்சிரஞாபகத் தம்பம். குடிபோன கல்வித்துறைகளைக் குடியிருத்தற்கும் இது வழி.

I. அநாதசாலை பற்றி முதன்முதல் சிந்தித்தவர்கள் ஆறுமுகநாவலர் அவர்கள்,

நாவலர் நான்காம் பாலபாடத்தில் வரும் 'தருமம்' என்ற பாடத்தின் 12-ம் பிரிவின் முதல் வசனம், 'அநாதப் பிள்ளைகளை வளர்த்துக்கல்வி கற்பித்தல் வேண்டும்' என்பது நாவலர் அவர்கள் அநாதசாலை என்ற பெயரால் ஒரு தாபனம் ஸ்தாபித்திலரேனும், அவர்களின் ஆன்மசக்தி வழியாக யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் உள்ள பாடசாலைகளின் சார்பில், அநாதசாலை நடந்து வந்திருக்கின்றது. அதற்கு நானே நல்ல உதாரணம். பத்துவருடகாலம் என் வளர்ச்சியனைத்தும் வண்ணை நாவலர் வித்தியாசாலைச் சார்பில் நடந்திருக்கிறது. வித்துவான் சுப்பையாபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்பவர்களும் என் போன்று நாவலர் வித்தியாசாலைச் சார்பில் வளர்ச்சியுற்றவர்களே. எங்களுக்குமுன் அவ்வாறு வளர்ச்சியுற்றோர் பலர்.

II. 1915-ம்ஆண்டு தொடக்கம் 1920-ம் ஆண்டுவரை திருநீறு பூசிக்கொண்டு, தமிழ் உபாத்தியாயர் என்று வந்தவர்கள் அனைவரும் காரைதீவு அருணாசலம் என்ற மகான் நிழலில் வளர்ந்த அநாதர்களேயாவர். காரைதீவில் உள்ள பாரிய வர்த்தகராயிருந்த ஆறுமுகம்பிள்ளை என்ற வள்ளல் திரு. அருணாசலம் விரும்பியவாறு அநாதர்களுக்கு அள்ளியள்ளி வழங்கினார்.

III. அநாதர் விஷயத்தில் மூன்றாவது வள்ளல் திரு. சு. இராசரத்தினம் அவர்களே 'சைவ அநாதசாலை என்ற பெயரில் திருநெல்வேலியில் அந்தத் தாபனத்தை ஸ்தாபித்த சீமான். நாற்பது வருடங்களுக்குமுன் இந்த அநாத சாலை ஆண்பிள்ளைகளுக்கே உரியதாய் ஆண் அநாத சாலையாக இருந்தது.


பின்பு இருகைகளும் வெட்டுண்டு இழந்த ஒரு சைவப்பெண்பிள்ளை கத்தோலிக்க அநாத சாலையில் சேரவேண்டி நேர்ந்ததையிட்டுச் சைவப்பெண் அநாதசாலையும் ஆவசியகம் என்ற உணர்ச்சி எழுந்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பாரிய கூட்டம் கூட்டப்பட்டது. சேர் துரைசாமி முதலிய பிரமுகர்கள் சமுகமாயிருந்தார்கள். கலைப்புலவர் நவரத்தினமும் நானும் சைவபரிபாலன சபையே சைவப்பெண் அநாதசாலையை ஸ்தாபிக்க வேண்டுமென்று கதறினோம். பேராரவாரத்துடன் பிரேரணை நிறைவேறியது: திரு.

(14-ம் பக்கம் பார்க்க)

# "எதிர்காலப் பிரஜைகள் இன்றைய குழந்தைகளே!

## அவர்களை நன்கு பேணவேண்டும்"

"எதிர்கால உலகத்தை நிர்மாணிக்கும் சிற்பிகளாக வளரவேண்டியவர்கள் இன்று மதலைகளாக உள்ள குழந்தைகளே. குழந்தைகளை வளர்ப்பதும், குழந்தைகளுக்கு உண்டாகின்ற நோய்நொடிகளைப் பற்றிய அக்கறையும் பெற்றோருக்கு அவசியம் வேண்டும். சிறுவயதில் குழந்தைகளை நோயிற்கிடவாமல் பாதுகாக்கவேண்டும். அடிக்கடி சுகவீனப்படும் குழந்தை தன் ஆரோக்கியத்தை இழந்துவிடுகிறது. வளர்ச்சி பாதிப்புற்று நாளை சக்தி இழந்த மனிதனாக மாறிவிடுகிறது."



குழந்தைகள் சுகத்தைப் பற்றியும், பெண்களுக்குரிய வியாதிகள் பற்றியும் பிரித்தானியாவிலுள்ள கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பயிற்சிபெற்றுத்திரும்பியுள்ள டாக்டர் எஸ். எஸ். சேனாதிராஜா இவ்வாறுதெரிவிக்கின்றார்.

வைத்தியத்தை மதிக்கின்றபண்பு நம்மக்களிடையே வளர வேண்டும். வைத்தியர்கள் மீது நம்பிக்கை ஏற்படவேண்டும்.

முறையான வைத்தியத்தின் மூலம்ஆரோக்கியத்தை எல்லோருமே பெற்றுக்கொள்ளலாம். டாக்டரின் கருத்துக்கள் நமது சமுகத்துக்குத் தேவையானவையாக உள்ளன: எனவே அவருடன் யாம் கேட்ட கேள்விகள் சிலவற்றுக்குப் பயனுள்ள பதில்கள்கிடைத்தன.

கே: குழந்தைகள் சுகம், பெண்கள்வியாதி என்பவற்றில் உங்களுக்குஈடுபாடு ஏற்படக் காரணம் என்ன?

பதில்: பெண்களும், குழந்தைகளுமே சமுதாயத்தின் ஆணிவேர் போன்றவர்கள். இவ்விரு சாராருக்கும் சிகிச்சை தருவதனால் சிறந்த பிரிவினருக்கு சேவை செய்கிறோம் என்ற நிறைவு கிடைக்கின்றது.

கேள்வி: நமது ஆஸ்பத்திரியில் பணிபுரிவதற்கும் ஐக்கிய இராச்சியத்தில் பணிபுரிவதற்குமுரிய வித்தியாசமென்ன?

## வெளிநாட்டில் பயிற்சி பெற்ற டாக்டர் எஸ். சேனாதிராஜா கருத்து

பதில்: பல விதத்திலுள்ளன. அங்கே வைத்தியர்களை நன்கு மதிக்கிறார்கள். வைத்திய பணியாளர்கள் நோயாளிகளை அக்கறையோடு கவனிக்கிறார்கள். குறிப்பிட்டகாலத்தில் வைத்தியருடன் நோயாளி தொடர்புகொள்கின்றார். நோயாளிகுறித்த நேரத்தில் வருகை தரத்தவறினால் அந்த நோயாளிக்குஏற்பட்ட அசௌகரியங்கள் என்ன என்பதை நேரடியாகச் சென்று அவ்வவ் ஆஸ்பத்திரியிலுள்ள தாதிமார்கள் விசாரித்து நோயாளிக்கும் டாக்டருக்கும் தொடர்புண்டாக்குகின்றார்கள். இதனால் டாக்டரின் பணியைச் சரியாகச்செய்யமுடிகிறது. உண்மையில் டாக்டர்கள் பயிற்சியை சரியான வழியில் பெறவும் தொழில் செய்யவும் வசதிகள் அதிகம் அங்குள்ளன.

இங்கே ஒரு நோயாளிக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமானால் முக்கியமாக இரத்த வங்கியில் போதிய இரத்தமிருக்கிறதா என்பதை முதலில் தீர அறிந்துகொண்டே சத்திரசிகிச்சைக்கு டாக்டர் இறங்க வேண்டும். ஆனால் லண்டனில் இந்தநிலையில்லை. யாவும் அங்கு தாராளமாகவுள்ளன. இரத்த வங்கியில் எந்தவகை இரத்தமும் போதியளவுள்ளன.

பேட்டி:

**இ. நாகராஜன்**

கேள்வி: இந்த விசேடமான முறைகளுக்கு அடிப்படை என்ன என்று கருதுகின்றீர்கள்?

பதில்: வைத்தியத்துறையில் விஞ்ஞானஅடிப்படைக் கருவிகளுடன் முன்னேறியவர்கள் மேற்குநாட்டவர்கள். அரசாங்கம் முற்றும் அக்கறை காட்டுகின்றது. வைத்தியரிடம் மக்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். இரத்ததானம் செய்வதற்கு அங்கு பிரசாரம் செய்யவேண்டிய தேவையில்லை. மக்கள் தாமாகவே பிறருக்கு உதவுவதற்கு எப்போதுமே தயாராக இருக்கின்ற பண்பாடு மிக்கவர்கள்.

கேள்வி ஆறு வருடங்களும் இலங்கையை மறந்து அங்கே வாழ்ந்த நீங்கள் தொடர்ந்து வசதிகள் நிறைந்த அந்த இடத்தை ஏன் மறந்து இலங்கைக்கு வந்தீர்கள்?

பதில்: என்னதான் வசதியும் வாய்ப்பும் கிடைத்தாலும் அது எனது தாயகமல்ல. பெற்றார், உற்றார்,

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோமியோபதி வைத்திய முறையும் அதன் மகிமையும்

**ஹோமியோபதி வைத்தியமுறையின் தந்தையென்று போற்றப்படும் டாக்டர் ஹானிமன் அவர்களின் பிறந்த நாள் இம் மாதம் 10-ம் திகதி வருகின்றது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. இக்கட்டுரையை எழுதியுள்ள திரு. சிவராசா 'விஞ்ஞானக்கட்டுரைகள்' என்ற நூலின் ஆசிரியர்.**

மு. சிவராசா [எம் எச் எச்]

ஆண்டவன் மனிதனை ஆரோக்கியமாகவே படைத்தார். மனிதன், தன் தீய எண்ணங்களாலும் தீய நடத்தைகளாலும் வியாதிகளை வருவித்துக்கொண்டான். இவ்வியாதிகளை நீக்க பற்பல தேசங்களிலும் பற்பல அறிவாளிகள் பல வைத்திய முறைகளை வகுத்தனர். பழைய காலத்து வைத்திய முறைகளான ஆயுர்வேதமும் சித்தமும் முகமதியர்களின் யூனானி வைத்தியமும், அலோபதி என்று அழைக்கப்படும் மேல்நாட்டு வைத்தியமுறையும்தோன்றி பிற்காலத்தில் பலரின் அபிப்பிராயங்களுக்கு உட்பட்டு பல மாறுதல்களை அடைந்து இன்றும் நம்மிடையே இருந்துவருகின்றன.

உலகிற் பல சாஸ்திரங்கள் உள்ளன அவற்றுள் வைத்திய சாஸ்திரம் ஒன்றில் தான் குருட்டு நம்பிக்கைகளும், கற்பனைகளும் மலிந்து இருகின்றன. மனிதனுக்கு இவ்வுலகிலுள்ள எல்லாப்பொருளிலும் மேலான உயிரைக்காப்பாற்றிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றிருப்பது வைத்திய சாஸ்திரம். இந்த சாஸ்திரம் உண்மையை அடிப்படையாகக்கொள்ளவேண்டும். அவ்வாறு உண்மையை அடிப்படையாகக் கொண்டதுதான் ஹோமியோபதி வைத்திய சாஸ்திரம்.


### ஆராய்ச்சி

ஹோமியோபதி வைத்திய முறையை உலகுக்கு அறிமுகம் செய்தவர் டாக்டர் ஹானிமன் அவர்களே. அவர் ஒவ்வொரு வியாதிக்கும் ஏனைய வைத்தியமுறைகளில் எவ்வாறு மருந்துநிர்ணயிக்கப்பட்டது என்பதை ஆராய்ந்தார்.

சுரத்துக்குச் சுக்கைக் கொடுக்கலாமென்று யோசித்து சுரமுள்ள சில நோயாளிகளுக்கு சுக்கை ஒரு டாக்டர் கொடுப்பார். அதனுல் பெரும்பாலாரின் சுரம் நீங்கிவிட்டால் அந்த டாக்டர் சுரத்துக்குச் சுக்குத்தான் மருந்து என்று விளம்பரப்படுத்துவார். சிலகாலம் கழித்துவேருெருவர் மிளகை மேற்கண்டவிதம் கொடுத்து அதேபோல்பலனையும் கண்டுவிட்டால், சுரத்துக்குச் சுக்குத்தான் மருந்து என்பது போய் எல்லோரும் சுரத்துக்கு மிளகுதான் மருந்து என்று மிளகின்மகிமையைப் பாடத் தொடங்குவார்கள்.

இவ்வாராய்ச்சியிலிருந்து வியாதிக்கு மருந்துகொடுப்பது வைத்தியர்களின் அபிப்பிராயங்களைஒட்டியதாகவே இருந்துவந்ததென்ற உண்மையை டாக்டர் ஹானிமன் அவர்கள் கண்டுபிடித்தார்.

மனிதர்களின் அபிப்பிராயங்கள் அடிக்கடி மாறக்கூடியவை. ஆதலால் என்றைக்கும் மாருத ஓர் உண்மையை அடிப்படையாக வைத்துச்செய்யப்படும் சிகிச்சையே உண்மை வைத்தியமாகும். உயிரைக் காப்பாற்றும் மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வைத்தியமுறை மனிதர்களின் ஸ்திரமற்ற அபிப்பிராயங்களுக்குத் தக்கபடி மாருமல் உண்மையான சாஸ்திரம் அதாவது ஆதாரத்துக்குக் கட்டுப்பட்டிருந்தால்தான் அதன்படி செய்யப்படும் சிகிச்சையினுல் நிச்சயமானபலன்எப்பொழுதும் கிடைக்கும் என்ற முடிவிற்கு டாக்டர் ஹானிமன் வந்தார். இக்கோட்பாட்டிற்கு அமைவதே ஹோமியோபதி வைத்தியமுறை.



### ஓர் உதாரணம்

ஹோமியோபதி வைத்திய முறையில் எவ்வாறு ஒரு வியாதிக்கு மருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளதுஎன்பதை ஹானிமனின் ஆராய்ச்சியிலிருந்து ஓர் உதாரணத்தை சற்றுக் கவனிப்போம்.

குளிருடன் வரும் முறைச்சுரத்துக்குக் 'கொயினு' நல்ல மருந்து என்று ஆங்கில வைத்தியம் கூறுகின்றது. டாக்டர் ஹானிமன் அவர்கள் 'கொயினு' எவ்வாறு சுரத்தைப் போக்குகிறது என்பதை ஆராய்ந்தார். ஒரு நாள் தானே 'கொயினு' வைச் சாப்பிட்டுப் பார்த்தார். ஒன்றிரண்டு நாட்களில் அவருக்கு குளிர் நடுங்கலுடன் சுரம் ஏற்பட்டது. அச்சுரம் 'கொயினு' சாப்பிட்டதனுல்தான் ஏற்பட்டதா அல்லது சாதாரணமாகத் தோன்றியதா என்றசந்தேகத்தினுல், அவர் தன் நண்பர்கள் சிலருக்கு இபோல் 'கொயினு' வைக் கொடுத்து அவர்களுக்கும் சுரம் ஏற்பட்ட பின்னரே 'கொயினு'வை நிரம்ப உட்கொண்டால் குளிர்முறைச் சுரம் ஏற்படும் என்பதை நம்பினுர். இவ்விதமாகப் பல மருந்துகளைக்கொண்டு பல வருடங்கள் ஆராய்ச்சி செய்தபின்னரே ஹானிமன் அவர்கள் பின்வரும் உண்மையைவெளியிட்டார்.

### ஹோமியோபதி தத்துவம்

ஒவ்வொருமருந்தும் மனித உடலில் ஒவ்வொரு விதமான வியாதிக்குறிகளை உண்டாக்குகிறது மருந்தின்பலம் அதிகமாய் இருந்தால் அதனுல் உண்டாக்கப்படும் வியாதிக் குறிகளும் கடுமையாய் இருக்கும். "ஒரு வியாதியில் தென்படும் குறிகளைப் போன்ற குறிகளை உண்டாக்கும் வன்மையுள்ள மருந்தை உபயோகித்தால் வியாதி நீங்கும்." இதுவே ஹோமியோபதி வைத்தியமுறையின் தத்துவம்.

# ஏன்?

— திருமலை. அ சந்திரன்

எனக்கேன் இத்தனை வரவேற்பு
அடடா எத்தனை பரபரப்பு
கனைத்தேன் என்ருல் பரிகரிப்பு
களைத்தேன் ஆயின் பதைபதைப்பு

எனக்கேன் இத்தனை வரவேற்பு-அவர்கள்
என்மீ(து) எத்தனை பெருமதிப்பு.

பார்க்கும் முகமெலாம் பல்லிளிப்பு
புதுமனை திறந்திடப் பல்லழைப்பு
கேட்கும் முன்னரே உதவிகளை
விரைந்து செய்வதில் பெருவிருப்பு.

என்மேல் அவர்க்கு பேரன்பு-அட
ஏன்தான் என்ருல் பெருவியப்பு.

புதுப்புது உறவுகள் முளைத்துவரும்
விதவித உணவுகள் அழைத்துத்தரும்
நிதம்நிதம் வாசலைத் தேடிவரும்
நேயர்கள் தயவோ கோடிபெறும்

என்னைக் காண்பதில் பெருவிருப்பு-அவர்க்கு
ஏனென்று அறிய வரும்சிரிப்பு.

நல்லார் இவரென நவின்றிடுவார்
'வள்ளல்' பெரும்பெயர் தந்திடுவார்
இல்லா அறிவெலாம் உண்டென்று
உயர்த்தி உயர்த்திப் பேசிடுவார்

இத்தனை மதிப்பு எனக்குண்டு-அது
ஏன்தான் என்ருல் கசப்புண்டு!

ஆலோசனை வந்து கேட்டிடுவார்
அடிபணிந்தே அதை ஏற்றிடுவார்
மேலான மனிதன் நீரென்று
மேன்மைகள் தருவார் சீர்கொண்டு

ஏனிந்த மதிப்புத் தெரியாதா-அதை
எடுத்துச் சொன்னுல் புரியாதா?

பேயாய் மனதை அலைத்திடுமாம்
பெட்டியில் உறங்கிக் கிடந்திடுமாம்
வாயே இல்லாப் பணத்திற்கே
அத்தனை மதிப்பும் கிடைத்ததுவாம்!

எப்படி இருக்குது உலகமப்பா-அட
இதனுல் தானே கலகமப்பா!

# உங்கள் இராசி பலன்

ஜோதிஷமணி மேல்கரவை
காவ. சிவப்பிரகாசன்
*(6—4—70——13—4—70)*

**மேடம்:**

மேட இராசியில் புதன், சனி, வெள்ளி ஆயகிகோள்கள் அண்மித்தபர்கையில் சஞ்சரிக்கின்றன. தொழில்வகை முன்னேற்றம், வியாபாரப் பெருக்கு உண்டெனினும் பணமுடை, சுகவீனம் தோன்ற இடமுண்டு சமாதானம், பொதுப்பணி ஈடுபாடு காணும். 2 எண் அதிர்ஷ்டம் கொடுக்கும்.

**இடபம்:**

குற்றவாளியாகிக்கூண்டிலடைபடவேண்டிய காலம். குடும்பத்தொல்லை அவஸ்தை கொடுக்கும். தனிவழி ஆபத்துண்டு. கடல் பிரயாணம் தீது. விபத்து உண்டு. தீயவழியில் மனதை இட்டுச் செல்லவேண்டாம். பிறருடன் இக்கட்டான நிலையில் மாட்டிக் கொள்வீர். 9 இவ்வார அதிர்ஷ்ட எண்.

**மிதுனம்:**

புத்திரப்பெருக்கு உண்டு. படிப்புவகையில் பிறருக்கு உதவி புரிவீர். சமுதாய வகையில் நீவிர் எடுக்கும் தீவிரமுயற்சி தீமையில் முடியும். விபத்து உண்டு. பிரயாணம் தவிர்க்கவும். குடும்பத்தாரிடை மறைவு உண்டு. குடும்பப்பிணக்கு. அற்பவிஷயங்களுக்கும் தர்க்கம் புரிவீர். 5 எண் நன்மைகொடுக்கும்.

**கடகம்:**

வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. பிரிந்தவர் கூடுவர். மன எழுச்சி உண்டு. நினைத்ததைச் சாதிப்பீர். வாகனங்களால் நட்டம் காண்பீர். கமத்தொழில் வருமானம் அதிகரிக்கும். பிறரால் கௌரவிக்கப்படுவீர். அதிர்ஷ்டம் பெற 3 எண் வாய்ப்பளிக்கும்.

**சிங்கம்:**

வருமானம்செலவினம் சமநிலை காணும். வியாபாரிகட்குத் திடீரெனப் பணமுடக்கம் ஏற்படும். ஒருசாரார் [illegible] தீயவழிகளில் இறங்குவர், பிறதேச சஞ்சாரம் பிரயாணம் உண்டாகும். பெரியார் மறைவு நிகழலாம். இவ்வார அதிர்ஷ்டஎண் 6

**கன்னி:**

மனம்போன போக்கில் சண்டையும் பிடிக்க நேரும். தர்க்கம் உண்டு சிறிது அலைச்சல். உமக்கெதிராகச் சதியும் உண்டு. தொழிலிடத்தில் சிக்கல். பிறர்பொருள் கையாடல் ஆகிய நிகழலாம். வியாபாரத்தால் நஷ்டம் உண்டு. 8 எண் கொண்டு அதிர்ஷ்டம் பெறுக.

**துலாம்;**

துலா இராசியில் குருவக்கிர சஞ்சாரம் செய்கின்ருர். கரந்துறைவதும் இராகுவின் சுவாதி நட்சத்திரத்திலாகும். காலம் மிகக் கெடுதலானது. சினேகிதர் சூழ்ச்சியில் அகப்படுவீர். அரசியல் ஈடுபாடு உண்டு. மாதாவழி நாட்டம் உண்டாகும். இவ்வார அதிர்ஷ்டஎண் 1

**விருச்சிகம்;**

அமைதியின்மை. இரகசியமாய்ச் சினேகிதருக்கெதிரான நடவடிக்கையில் இறங்குவீர். தற்கொலை புரியும் பான்மை காணும். படிப்பு மேன்மை உண்டெனினும் கலைத்துறைநாட்டம்குறைவுபடும் 4எண் அதிர்ஷ்டம் கொடுக்கும்.

**தனு:**

நடனம், நாடகம், சினிமா ஆகிய துறைகளில் நாட்டம் காணும். தீயினுல் விபத்து ஏற்படலாம். பெண்வழி சினேகம், உல்லாசப் பிரயாணம் உண்டெனினும் ஒரு சிலர்க்குத் தீராநோய் தோன்றி அன்றிப் பெருகி அவ்வழி அவஸ்தை மிகும். 7 எண் அதிர்ஷ்டம் கொடுக்கும்.

**மகரம்:**

தொழில் தலைமைப் பீடத்தோர்க்கு வெகு உன்னத காலம். வியாபாரிகள் புதிய முதவீடுகள் செய்யலாம். பிரயாணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. சோதரர் வழி செலவு நிகழும். நீரினுல் அழிவு நிகழலாம். பலராலும் கௌரவிக்கப்படுவீர். இவ்வார அதிர்ஷ்ட எண் 6.

**கும்பம்:**

அட்டமத்தில் யுரேனஸ் புளுட்டோ ஆகிய கோள்கள் சஞ்சரிக்கின்றன. திடீர் மரணம் விபத்து நிகழலாம். அரசியல்வகை ஈடுபாடு காண்பீர். சமுதாயப் பிணக்குகள் தலையெடுக்கும். அன்ருடதொழில் அதிகரிக்கும். அதிஷ்டஎண் 4.

**மீனம்:**

பெரியார் சேர்க்கை உண்டு. மனஅமைதிகுறைவுபடும். எதிரிகள் தொல்லை அதிகரிக்கலாம். பெண்களால் கஷ்டம் தோன்றும் செலவினம் விறுவிறுப்புக் காணும். யாத்திரை போவீரெனின் பலவித கஷ்டங்களும் குறைவுபடும். தெய்வசிந்தனை புனிதவாழ்விற்கு வழிவகுக்கும். உங்கள் இவ்வார அதிர்ஷ்டஎண் 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

[பாராட்டுக்கதை]

# சந்நிதி கோவில் சாப்பாடு

— உடுவை தில்லை நடராஜா —

''அரோகரா...அரோகரா...''

செல்வச்சந்நிதி முருகன் கோவிலின் முன்னால் பக்தி வெள்ளத்தில் தத்தளித்து நின்ற அடியார்களின், ''அரோகரா...'' ஒலி கோவிலை அதிர செய்துகொண்டிருந்தது. மூலஸ்தானத்தை மூடியிருந்த திரை விலகியதும், ஐயர் வேல்முருகனுக்குத் தீபாராதனைசெய்யும் காட்சியைக் கண்ட பக்தர்கள் தம்மை மறந்துபக்தி பரவசத்தில் கத்திக்கொண்டிருந்தார்கள்.

''கந்தனுக்கு அரோகரா...''

''முருகனுக்குஅரோகரா...''

''வேலனுக்கு அரோகரா...''

''முருகா...முருகா...''

அடியார்களின்ஓசையோடு ஆலயமணியின் ஓசையும் சேர்ந்துகொண்டது.

பூசை நல்லபடியாக நடந்துவிட்டதாக எண்ணியவர்கள், தங்கள் கைகளைத் தட்டிக்கொண்டார்கள்.

சிறிது நேரத்துக்கு முன்பு எழுந்த ''முருகனுக்கு அரோகரா' பேரொலி அடங்கிவிட்டது; ''டாங்...டாங்...'' என்றொலித்த பெரியமணியும் உறங்கிவிட்டது. நாதஸ்வரம், மேளம் வாசித்தவர்களும் எங்கோ சென்றுவிட்டார்கள். சங்குகூட நந்தியின் கால்களுக்கிடையில் அடைக்கலம் புகுந்துகொண்டது. எண்ணெய் விளக்குகள் எரிந்துகொண்டுதான் இருந்தன. அவற்றில் பூசையின்போதிருந்த பிரகாசம் இல்லை. சாம்பிராணி, ஊதுபத்தி முதலியவற்றின் மணமும் சிறிதுசிறிதாகக் குறைந்துகொண்டே சென்றது

மூலஸ்தானத்தை விட்டிறங்கிய ஐயர், தனது கையிலுள்ள தட்டத்திலிருந்து வீபூதியை எடுத்து சனங்களுக்கு விநியோகம் செய்துகொண்டு வந்தார்.

''முருகா...'' என்றுசொல்லிய வண்ணம் சனங்கள் வீபூதியை வாங்கி நெற்றியிலும் கைகளிலும் பூசிக்கொண்டார்கள். ஒரு சிலர் ஐயரின் கால்களில் வீழ்ந்து வணங்கும்போது, ஐயர் அவர்களின் தலைகளில்வீபூதியைத் தூவி ஆசிர்வாதம் செய்தார்.

வீபூதி விநியோகத்தைத் தொடர்ந்து சந்தனம், குங்குமம் மலர்கள் ஆகியவையும் அங்கு நின்றவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட பின், ஐயர் தீர்த்தச்செம்புடன் வருகிறார்.

இரண்டு கரங்களாலும் தீர்த்தத்தை வாங்கி வாயிலும் ஊற்றித்தலையிலும் தெளித்தபின்பு, ஈரக்கைகளை கண்களிலும் தடவிக்கொண்டார்கள் பலர்.

''என்ர ராசா... ஐயா விட்டை தீர்த்தம் வாங்கிக் குடியுங்கோ''- எவளோ ஒரு தாய் தன் மகனுக்குக் கட்டளை பிறப்பித்ததும்,

''ஐயா தீர்த்தம்'' என்று இரண்டு கைகளையும் நீட்டி தீர்த்தததை வாங்கி ஒரு மடக்கில்குடித்ததுகுழந்தை. தீர்த்தம் தேன்போல இனித்ததோ அல்லது மருந்து மாதிரி கசத்ததோ குழந்தையைத்தான்கேட்கவேண்டும்.

மகன் தீர்த்தம் பருகிவிட்டதைக்கண்டு மனமகிழ்ந்த தாய், குழந்தைக்கு மற்றுமொரு கட்டளையை இட்டாள். ''ராசா... கையைக் கண்ணிலை துடையுங்கோ...

''ஏனம்மா?'' என்று கேட்டுவிட்டு பதிலுக்காகக் காத்திராமல் ஈரக்கைகளால் கண்களைத் தடவினான்.

குழந்தையின்கேள்விக்கு—

''தீர்த்தம் கண்ணிலை பட்டால் நோய் துன்பங்கள் வராது. கண்குருடாகாது''- என்று மறுமொழி சொன்னார், கந்தசாமி.

பிள்ளையார் வாசலின் முன்னுள்ள கேணிக்குப் பக்கத்தில் நின்ற குருடனின் மேல் குழந்தையின் கவனம் சென்றது.

'தீர்த்தம் படாதபடியாலோ அந்த மாமாவுக்குக் கண்தெரியாமல் போனது?''-குழந்தை, கந்தசாமியைப் பார்த்துக்கேட்டது.

''ஓம்...கடவுளைக் கும்பிடவேணும். திருநீறு வாங்கிப் பூசவேணும். பொட்டு வைக்கவேணும். வில்வம் வேண்டி காதிலை வைக்கவேணும். தீர்த்தம்வாங்கிக் குடிக்கவேணும். இல்லையெண்டால் கண் குருடாய் போயிடும்'' - கண்டிப்பான குரலில் சொல்லிக்கொண்டு வந்த கந்தசாமி குரலைச் சிறிது மாற்றிக் கொண்டு ''மகனைக் கவனமாக வளருங்கோ. நல்ல கெட்டிக்காரனாக வருவான்'' என்ருர்.

''அவன் உப்பிடித்தான் அண்ணை. எதுக்கெடுத்தாலும் ஒவ்வொண்டு சொல்லாமல் இருக்கமாட்டான். ஐயோ... தகப்பனைப்படுத்திறபாடு... தங்கச்சியாக்கள் மத்தியானம் செல்லையாமடத்திலை அன்னதானம் குடுக்கினம். அண்ணை... அப்ப நாங்கள் வரப்போறம் கூடமாட ஏதும் செய்து குடுக்கவேணும்'' சொல்லிவிட்டு குழந்தையையும் கூட்டிக் கொண்டுசென்ருள் தாய்.

முருக பக்தர்கள் கோவிலின் நான்கு வாசல்களாலும் வெளியேறிக்கொண்டிருக்க- ஒரு சிலர் மாத்திரம் ஆறுமுகசுவாமி வாசலின் முன்னால் பக்திப்பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள். தாயும் மகனும் சென்ற பின்னர் கந்தசாமி தனது இடுப்பிலிருந்த பட்டுச்சால்வையை அவிழ்த்து நன்ருக இறுக்கிக் கட்டிக்கொண்டு பக்திப்பாடல்கள் பாடுவோரோடு சேர்ந்துகொண்டார்.

அருணகிரிநாதரின் திருப்புகழும் பித்துக்குளி முருகதாஸின் பாடல்களும் பாடுவோர் வாயிலிருந்து தேனுக ஒழுகியது. அவர்களோடு சேர்ந்துகொண்ட கந்தசாமி பக்தியுணர்ச்சியோடு பாடியதாகத் தெரியவில்லை. ஏதோ கடமைக்காகவாயைமட்டும் அசைத்தவண்ணமிருந்தார். மனம் மத்தியானஉணவைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கியிருந்தது.

''சீ...நான் அவளோடு செல்லையா மடத்துக்குப் போய் உதவியள் செய்து கொடுத்தால் மத்தியானம் நல்ல வடிவாகச் சாப்பிடலாம், இண்டைக்கு வெள்ளிக்கிழமை தானே. எல்லா மடத்திலையும் சோறுகுடுப்பினம்-இருந்தாலும் தெரிஞ்ச ஆக்கள் தாறதைப்போல வராது...''

''அ...இதிலை இவங்களோடை பாடிக்கொண்டிருந்து என்ன புண்ணியம்? ஒருதேத்தண்ணிகூடக்கிடையாது''

''மடத்துக்கும்போகலாம் தான்...தற்செயலாக ஆரும் பார்த்தால் ஏதும் நினைப்பாங்கள். ஒவ்வொரு கிழமையும் மடங்களில்போய்உதவி செய்திருந்தால் பரவாயில்லை. இண்டைக்குப்போகசா...''

அலைபாய்ந்த எண்ணங்களை ஒருவாருக அடக்கிக் கொண்டு ''பாடிமுடிஞ்ச உடனே போவம்'' என்ற முடிவுக்கு வந்தார்.

அன்னதானச்சோறு சாப்பிடுவதற்கு ஆசைப்படுபவர்களை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். பலர் பஞ்சத்தில் அடியுண்டு சாப்பிடுவதற்கு ஒன்றுமேயில்லாததால் அன்னதானச் சோற்றுக்காக அடிபடுகிருர்கள். இரண்டாவது வகையினர் 'மடங்களில் வழங்கப்படும் தானச்சோறு கடவுளின் சோறு; கோவில் சோற்றில் கொஞ்சமாவதுசாப்பிட வேண்டும்' என்பதற்காகச் சாப்பிடுவர்கள், இதில் கந்தசாமி முதலாவதுவகையைச் சேர்ந்தவர்.

கந்தசாமியை முதன்முதலாகப் பார்ப்பவர்கள், ''அவர் வறுமையில் வாடுகிருர்'' என்று சொன்னுல் நம்பமாட்டார்கள்தான்.

''அவருக்கென்ன? நல்ல தோற்றம். பட்டுவேட்டி சால்வையெல்லாம் கட்டியிருக்கிருர். கையிலே மணிக்கூடு, இடுப்பில் பளபளக்கும் பட்டுச்சால்வைக்கூடே பெரியதோல் மணிபேர்ஸ் தலையை நீட்டிப் பார்க்கிறது: அதற்குள் எப்படியும் ஐந்து பத்து ரூபாவென்ருலும் இருக்கும். அவரிடம் காசில்லையென்று சொன்னுல் நான் நம்பவேமாட்டேன்'' என்று சொல்பவர்களுக்கு அவருடைய உண்மையான வாழ்க்கையைப்பற்றி ஒன்றுமே தெரியாது,

பலவருடங்களுக்கு முன்கொழும்பிலுள்ளகொம்பனியொன்றில் வேலைபார்த்தபோது வாங்கின கைக்கடிகாரமும், பட்டுவேட்டிசால்வையும்மணிபேர்ஸும்தான் கந்தசாமியைப் பணக்காரரென்றுபலபேருக்கு அறிமுகம்செய்துகொண்டிருந்தன.

ஒரேயொரு மகளுக்கு கல்யாணத்தை நடத்தி வைத்த சந்தோஷத்தில் கண்ணைமூடிவிட்டாள் கந்தசாமியின் மனைவி: ஈமக்கிரிகைகள் முடிந்த ஒரு சில நாட்களுக்குள் மகளும் மருமகனும். வீடு காணியெல்லாவற்றையும் 'சீதனம்' என்ற பெயரால் அபகரித்துகொண்டு கந்தசாமியோடு கோபம் என்று சொல்லி கதையாமல் விட்டுவிட்டார்கள். தனது தங்கையின் குடும்பத்தோடு ஒட்டிக்கொண்ட கந்தசாமியைக் கொம்பனி வேலையும் வெறுத்து ஒதுக்கிவிட்டது.

இல்லாளை இல்லாளும் வெறுத்து ஈன்றெடுத்ததாய் கூட வேண்டாத நிலை உலகத்தில் நிலவும்போது-கூடப்பிறந்தவள் எப்படிக் கூட்டிவைத்திருப்பாள்? - இரவுப்பொழுதை நித்திரையில் கழிப்பதற்காக மாத்திரம் தங்கையின்வீட்டுக்குச் செல்வார் கந்தசாமி.

வெள்ளிக்கிழமைகளில் சந்நிதி கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் வல்லிபுரக் கோவிலிலும் ஆளைக் காணலாம். மற்றும்படி அந்தச்சுற்றுவட்டாரத்தில் திருவிழாக்கள் இல்லாத நாட்களில் வாசிகசாலையிலோ அல்லதுபுளியமர நிழலிலோ தனது பொழுதைப் போக்கிக்கொண்டிருப்பார்.

வருமானமில்லாத நிலையிலும் கந்தசாமிபட்டுவேட்டியுடன் கோவிலுக்குப் போவதையிட்டு தவருக எதுவும் சொல்லமுடியாது, அவரிடம் கிழியாத வேட்டி என்ற பெயரோடு இருப்பது அந்த பட்டுவேட்டி ஒன்றுதான் இடுப்பில் செருகியிருக்கும் மணிபேர்ஸில் இருபதுசதம் தான் இருக்கிறது. கையில் கட்டியிருக்கும் மணிக்கூடு மாத்திரம் ஒழுங்காக நேரத்தைக் காட்டிக்கொண்டிருந்தது.

எது எப்படியிருப்பினும் கந்தசாமியிடம் ஒரு தனிக் கவர்ச்சியிருக்கிறது 'பேர்சனல்டி' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே; அந்தக் கவர்ச்சியாக இருக்கலாம். யாராயிருந்தாலும் சரி, முதல் சந்திப்பிலேயே சிநேகிதம் கொள்ளும் அளவுக்கு நடந்துவிடுவார்.

'என்ன கந்தசாமியண்ணை ...கடுமையாகக் கனக்க யோசிக்கிறியள்?' அவருக்குப் பக்கத்திலிருந்தவர் கேட்டபோதுதான் நினைவலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார் கந்தசாமி.

'ஒண்டுமில்லை...' என்று சொல்லி முடிப்பதற்கும் பக்திப்பாடல் குழுவுக்குத் தலைமை தாங்கியவர் 'நமப் பார்பதி பதே' சொல்வதற்கும் சரியாக இருந்தது.

கச்சேரி முடிகிறதே என்ற மகிழ்ச்சியில் தங்கள் சத்தத்தைப் பெரிதாக்கிக் கொண்டார்கள். ஹர ஹர மகா தேவா!'

'தென்னுடைய சிவனே போற்றி' தலைமை தாங்கியவரின் குரலைத் தொடர்ந்து எல்லோருடைய குரல்களும் ஒரேநேரத்தில் எதிரொலித்தன.

'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!'

பக்திப்பாடல்களைப் பாடியவர்களும் ஒவ்வொருவராக எழுந்து சென்றனர். கந்தசாமி கைக்கடிகாரத்தைப் பார்த்து 'பத்தே முக்கால் மணி' என்று தனக்குள் சொல்லிவிட்டு அங்கும்

(12-ம் பக்கம் பார்க்க)

ஈழத்தின் பண்பை நாட்ட 'ஈழநாடு'
தமிழக தனத்தை ஈட்ட 'தம்பி அன்கோ'
தம்பி அன் கோ
நவீன சேமிப்பிற் சேர்ந்து
கீழ்குறித்த பலனை அடையுங்கள்
முதலாவது திட்டம்:-
மாதம் 200 ரூபா வீதம் கட்டினுல் 15 மாதத்திற்குப் பின்
3100 ரூபா எடுக்கலாம்
சேர்ந்து 4 மாதத்தின்பின்
ஒவ்வொரு மாதமும் அதிட்டசாலி ஒருவருக்கு
கட்டிய பணத்துடன் 200 ரூபா
இனமாகக் கொடுக்கப்படும்.
இரண்டாவது திட்டம்:
மாதம் 75 ரூபாவீதம் கட்டினுல் 20 மாதத்திற்குப்பின்
1600 ரூபா எடுக்கலாம்
சேர்ந்து 4 மாதத்தின்பின்
ஒவ்வொரு மாதமும் அதிட்டசாலி ஒருவருக்கு
கட்டிய பணத்துடன் 100 ரூபா
இனமாகக் கொடுக்கப்படும்
முக்கிய அறிவிப்பு:
நவீன சேமிப்பில்
எப்பொழுதும் சேரலாம் எப்பொழுதும் விலகலாம்!
மறுவிபரங்கட்கு:
தம்பி அன் கோ
திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை வித்துவான்

# தெட்சணாமூர்த்தி ஒரு தவில் மேதை

## சேதுராமன் சகோதரர்கள் புகழ்மாலை

"தெட்சணாமூர்த்தி அவர்கள் ஒரு மேதை! எதிர்காலத்திலே அவரைப் போன்ற ஒரு மேதை தோன்றுவது அரிது என்பதே எமது அபிப்பிராயம்"

**'தில்லானா மோகனம்பாள்' சினிமாவில் நாதஸ்வரம் வாசித்து பெரும் புகழ் பெற்றுள்ளவர்களும் அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்தவர்களுமான சேதுராமன் சகோதரர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.**


யார்க்கரைப்பிள்ளையார் கோவில்திருவிழாவில் நாதஸ்வர வித்துவான்கள் சேதுராமன் சகோதரர்கள் இசை விருந்தளிக்க சில தினங்களுக்குமுன் யாழ்ப்பாணம் வந்திருந்தது நேயர்கள் அறிவார்கள். இசையுலகில் தமக்கென ஓர் இடத்தை வகித்துவரும் அக்கலைஞர்களின் நாதஸ்வர ஓசை நயம் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் "தில்லானா மோகனம்பாள்" படத்தில் இனிக்கிறது.

சிவந்த மேனி, எடுப்பான மூக்கு. உயர்ந்த தோற்றம். பரந்த ஏறு நெற்றி- அதில் தளதளக்கும் சாந்துப் பொட்டு - இவ்வாறு காட்சியளிக்கிறார் சேதுராமன். மினுமினுப்பான கரியநிறம், ஜொலிக்கும் அகன்ற கண்கள், நடுத்தர உயரம், நெற்றியில் சாந்துப் பொட்டு இத்தனையும் கொண்டவர் பொன்னுச்சாமி. சேதுராமன் மூத்தவர்.

ஒளி வீசும் அவர்களது தோற்றத்திலும் அன்புச் சுவையூறும் பேச்சிலும் கவரப்பெற்று நேரம் செல்வது தெரியாது பேசிக்கொண்டிருந்தேன். திடீரென்று இரைந்துகொண்டு சோனாவாரியாகப் பெய்த மழை நிற்க நீண்டநேரமாகிவிட்டது. "வெய்யில் வெக்கையில் சற்று முன்புவரை நாம் தவித்தோம். இந்த வேளையில் இத்தகைய ஒரு பெரிய மழையை எதிர்பார்க்கவில்லை. நீங்கள் கான மழை பொழிய வானமார்க்கமாக (விமானத்தில்) வந்ததை வானம் அறிந்து உங்கள் கானமழைக்கு முன்பு வானமழை பொழிகிறது போலும்" என்றேன். அங்கு அந்நேரம் வந்த ஒருவர் "நல்லவர் போகும் இடத்தில் மழைபெய்யும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு" என்றார். அப்போது பொன்னுச்சாமி அவர்கள் பேச்சை வேறு பக்கம் திருப்பினார். கலைஞர்களிடையே போட்டியிருக்கலாம், பொறாமையிருக்கக்கூடாது; எல்லாமே எனக்குத் தெரியும் என்ற ஆணவம் இருக்கக்கூடாது.

ஒரு சாதாரண வித்துவானிடம்கூட ரசிக்கத்தக்க ஏதோ ஓர் அம்சம் இருப்பதை நாம் சில இடங்களில் காணலாம். எனவே சிறுதுரும்பென்றாலும் ஒதுக்கித் தள்ளாத பண்பு கலையுலகில் இருக்கவேண்டும். நல்ல கலைக்குத் தடை இருக்கக் கூடாது. இந்தியக் கலைஞர் இலங்கைக்கும் இலங்கைக் கலைஞர் இந்தியாவிற்கும் போய்வர எத்தனையோ முட்டுக்கட்டைகள் இருப்பது வருந்தத்தக்கது என்றார் அவர்.

நாதஸ்வர மேதையாக விளங்கிய பொன்னுச்சாமி பிள்ளை அவர்களின் பேரர்களான சேதுராமன் சகோதரர்கள் மதுரையில் 'வித்துவான்தெரு'வில் தாம் இருப்பதாகக் குறிப்பிட்டதும் "யார் அந்த வித்துவான்" என்று கேட்டேன். எமது பேரனார் பொன்னுச்சாமியின் பெயரையே அவ்வீதிக்கு குறிப்பிட 'வித்துவான் தெரு' எனப் பெயரிட்டிருக்கிறார்கள் என பொன்னுச்சாமி குறிப்பிட்டார்.



## தில்லானாமோகனம்பாள் படத்தில் மறக்கமுடியாத சம்பவம்

எத்தனையோ 'நாவலர்' இருந்தாலும் 'நாவலர்' என்றசொல் எமது ஆறுமுக நாவலரைக் குறிப்பிடுவதைப்போல வித்துவான் என்றசொல்லும் அன்றைய பொன்னுச்சாமி அவர்களைக் குறிப்பிடுவதை வியந்தேன். இதுபோன்ற எத்தனையோ விடயங்களைச் சேதுராமன் சகோதரர்களுடன் பேசியபோது அறியமுடிந்தது. நான் கேட்ட கேள்விக்கு அவர்கள் இருவரும் அளித்த பதில் வருமாறு:—

### திமிரியும் பாரியும்

கே: இப்போது திமிரி நாதஸ்வரம், பாரி நாதஸ்வரம் ஆகியன கையாளப் படுகின்றன. இது பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நாதஸ்வரம் வாசிப்பதற்கு நல்ல திறமையுள்ள வித்துவானே பாரி நாதஸ்வரத்தை வாசிக்கமுடியும். திமிரி நாதஸ்வரத்தை எல்லோரும் நன்றாக வாசிக்கலாம்.

கே: நாதஸ்வரத்தில் இந்துஸ்தான் பாணியில் வாசிப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா அல்லதுசுத்தகர்நாடக இசையைப் புதிய மெருகுடன் வாசிப்பதை விரும்புகிறீர்களா?

ப: சுத்த கர்நாடகபாணியில் வாசிக்கவேண்டும் என்பதுதான் எமது ஆசை. ஆனால் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இந்துஸ்தான் பாணியில் வாசிக்கவேண்டியிருக்கிறது.

கே: தலைசிறந்த நாதஸ்வரவித்துவான்கள் எனப் போற்றப்படும் தங்களது பேரனால் மதுரை பொன்

பேட்டி:
**நவாலியூர் நடேசன்**

னுச்சாமிப்பிள்ளை, திருவாவடுதுறை ரி. என். இராஜரத்தினம்பிள்ளை ஆகியோர் [illegible] பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: எமது பேரனார் பொன்னுச்சாமிப்பிள்ளையின்காலம் இராஜரத்தினம் பிள்ளைக்கு முற்பட்டது. இருவித்துவான்களும் தமது காலங்களில் எவ்வளவோ அரும்பெரும் புரட்சிகளைச் செய்துள்ளார்கள். இவையெல்லாம்நமக்கு நடக்குமா என்று எண்ணக் கூடியதாக இருக்கிறது. எமது பேரனார் "பூர்வீகசங்கீத உண்மை" என்ற நூலை எழுதியுள்ளார். இவரைத் தவிர நாதஸ்வரவித்துவான் ஒருவர் நூல் எழுதியதாகத் தெரியவில்லை.

கே: உங்களுக்கு அதிகம் பிடித்த பழைய நாதஸ்வர வித்துவான் யார்?

ப: இராஜரத்தினம்பிள்ளை காருகுறிச்சி அருணாசலம் அவர்களையும் மறக்கமுடியாது.

கே: உங்களுடைய குரு யார்?

ப: எமது தந்தை நடேச பிள்ளை.

கே: தங்களிடம் இசை பயில இளம் வித்துவான்கள் வருகிறார்களா? அப்படியானால் இதுவரை தங்களிடம் பயின்றவர்களில் சிறந்து விளங்குபவர் யார்?

ப: எம்மிடம் பயிற்சிபெற பலர் வருகிறார்கள். சிறந்து விளங்குபவர்களாக குறிப்பாக நாம்சொல்லமுடியாது. சிறந்துவிளங்குவது அவரவர்களைப் பொறுத்தது

கே. வேற்றுநாட்டு இசைகள் இப்போது ஆதிக்கம் பெற்றுவருகின்றன. குறிப்பாக திரைப்படங்கள்மூலம் இவ்விசைகள் பெரும்பாலான சாதாரண மக்களைக் கவர்கின்றன என்றுசொல்லலாம். இக்காரணத்தால் ஒரு காலத்தில் இவ்விசைகள் தமிழகத்தின் பழம் பெருமைவாய்ந்தநாதஸ்வர இசையிலும் அதிகமாகப் புகுந்துவிடும் என்று கருதுகிறீர்களா?

ப: அப்படி நினைக்கவில்லை. அப்படிப்புகுந்தாலும் ரசிக்க முடியாது.

### இலங்கை வித்துவான்

கே: இலங்கையைத் தாய்நாடாகக்கொண்ட குபேர லயஞானபூபதி தட்சணாமூர்த்தி அவர்களின் தவில் வாசிப்பை முதன்முதல் நீங்கள் எந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டீர்கள். கேட்டபோது தங்களது மனதிலே எத்தகைய அபிப்பிராயம் தோன்றியது?

ப: மதுரையில் காருகுறிச்சி அருணாசலத்துடன் தட்சணாமூர்த்தி நிகழ்த்திய ஒரு கச்சேரியின்போது தான் இவரின் தவில்வாசிப்பைக்கேட்டோம். அவர் ஒரு தவில்மேதை. அவரைப் போல ஒரு வித்துவானை எதிர்காலத்திலே காண்பது அரிதாக இருக்கும் என்பதே எமது அபிப்பிராயம்.

### மறக்க முடியாதது

கே: 'தில்லானா மோகனம்பாள்' படத்திற்கு தாங்கள் நாதஸ்வரம் வாசித்தபோது ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம்?

ப: எனக்கு வயிற்றில் சத்திரசிகிச்சை செய்யவேண்டி ஏற்பட்டது. படத்தில் நாதஸ்வரம் சம்பந்தப்பட்ட பணிகளையெல்லாம் ஒத்திப் போட்டு எனது சத்திரசிகிச்சை முடிந்தபின்பு தொடங்குவதெனகலைஞர் நாகராஜனிடம் கூறினார். ஆனால் நான் நாதஸ்வரம் சம்பந்தப்பட்ட பணிகளை முடித்துக்கொண்டே சத்திர சிகிச்சை செய்வேனெனக்கூறி எனது பணியினைச் செய்து முடித்த பின்பே சத்திர சிகிச்சை செய்துகொண்டேன். நான் இப்படிச் செய்துகொண்டதற்குக் காரணம் சத்திரசிகிச்சையின்போது நான் இறந்துவிட்டால் நான் ஒப்புக்கொண்ட கடமையைச் செய்ய முடியாது போய்விடுமே என்ற எண்ணம்தான். எனது சத்திர சிகிச்சைக்கு கலைஞர் நாகராஜன் எவ்வளவோ செலவழித்தார். சிவாஜி பாலையா போன்றோர் எவ்வளவோ ஒத்தாசைகள் புரிந்தனர். இதையெல்லாம் மறக்கமுடியாது.

கே: சிவாஜி கணேசன், ஏ வி எம் ராஜன், பாலையா' சாரங்கபாணி ஆகியோர் நாதஸ்வர, தவில் வித்துவான்களாக அப்படத்தில்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகை ஜெயலலிதா 'மார்க்கெட்' சரிகிறது!

## நிரந்தர 'நாயகி' பதவியிலிருந்து எம்.ஜி.ஆர். 'கல்தா' கொடுத்தார்!

'கன்னடத்துப் பைங்கிளி', 'கைப்படாதரோஜா' என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டு, ரசிகப்பெருமக்களின் 'கனவுலகக்கன்னி'யாக ஒரு காலத்தில் பவனிவந்த நடிகை சரோஜாதேவிக்கு தனது நிரந்தரநாயகிப் பதவிலிருந்து எம். ஜி. ஆர். 'கல்தா' கொடுத்தபின்னர், புரட்சிநடிகரின் நிரந்தர நாயகியாக பல படங்களில் சக்கைப்போடு போட்ட நடிகை ஜெயலலிதாவின் மார்க்கெட் இப்போது சரியத்தொடங்கியுள்ளது.

### முக்கிய காரணம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடிக்கும் படங்களிலெல்லாம் நாயகியாக நடித்துக் கொண்டுவந்த ஜெயலலிதாவுக்கும், எம். ஜி. ஆருக்குமிடையில் ஏற்பட்டுள்ளதாகக்கூறப்படும்ஒரு'லடா'யே அவரது 'மார்க்கெட்'சரிந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது.

எம். ஜி. ஆருடன் புது நடிகையான 'மஞ்சுளா' என்பவர் இப்போது சில படங்களில் ஜோடி சேர்ந்து நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

தன்னுடன் நாயகியாக படத்தில் நடிப்பவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மற்ற நடிகர்களைப்போல டைரக்டரையோ, தயாரிப்பாளரையோ பொறுத்ததாக எம். ஜி. ஆர். விஷயத்தில் இருப்பதில்லை.

### இப்போது மஞ்சுளா

அவர் படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டால், அவரே தனதுநாயகியாகச் சொல்லிவிடுவார். ஒரு காலத்தில் சரோஜாதேவியாகஇருந்து, பின்னர் ஜெயலலிதாவாக மாறி இப்போது 'மஞ்சுளா' என்ற நிலைக்கு வந்துவிட்டது.

எம். ஜி. ஆர். ஜெயலலிதாவுக்குக் 'கல்தா' கொடுத்ததைத் தொடர்ந்து, ஜெயலலிதாவை வேறு நடிகர்களுடன் ஜோடி சேர்த்து நடிக்க வைத்து படத்தை ஒட்ட முடியாது என்ற நிலையை படத்தயாரிப்பாளர்கள் உணர்ந்து, அவரைத் தங்கள் படங்களில் நடிக்க வைக்கத் தயங்குகிறார்களாம்,

### ஜெயலலிதா தாக்கு

''நான் சுதந்திரப்பறவையாக இருந்து நடிப்பேன். எனக்கு யார் தயவும்தேவையில்லை'' என்று மறைமுகமாக எம். ஜி. ஆரைத் தாக்கும் விதத்தில் ஜெயலலிதா சமீபத்தில் ஒரு பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ளார்.

ஜெயலலிதா-எம். ஜி. ஆர். இடையே ஏற்பட்டுள்ள 'லடாய்' தென்னிந்திய சினிமா வட்டாரத்துக்குள் பெருத்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எந்த வைபவத்துக்குச் சென்றாலும், பக்கத்தே பக்கத்தே அமர்ந்துகொள்ளும் ஜெயலலிதாவும், எம். ஜி. ஆரும், சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு வைபவத்தில் திக்குத்திக்காக அமர்ந்திருந்ததையும் பத்திரிகைக்காரர் கவனிக்காமல்இருந்துவிடவில்லை.

இருவருக்குமிடையில் ஏற்பட்டுள்ள 'லடாய்' ரகசியம் தெரியாமலா போகப்போகிறது?

—சினிமாநிருபர் 'ஜேசன்'

## போலிக் கௌரவத்துக்கு ஒரு சாட்டை!

''இது கதையுமல்ல; காவியமுமல்ல; கற்பனைக் கெட்டாத கருத்துமல்ல. நமது அன்றாட வாழ்க்கையிலே நாம் காணும் போலிக் கௌவரத்திற்கு ஒரு சாட்டையடி!'' என்று ஆரம்பத்திலேயே திரைமறைவில் ஒலிக்கும் ஓர் எளிமைமிகு அறிமுகத்துடன் ஆரம்பமாகின்றது சதுரங்கம்! இந்தப் புதுமையான அறிமுகத்தின் பின்னும் அந்த நாடகத்திலே நாம் ஒரு பெரிய கதையைக் காரியத்தை எதிர்பார்த்தால் யார் குற்றவாளிகள்?

**நாடக விமர்சனம்**

**சதுரங்கம்**

இந்தநாடகத்தின் கருத்து அப்படியொன்றும் பெரியதல்ல' புதுமையானதல்ல: புரட்சிகரமானதல்ல. அதிகமான நாடகங்களிலே எடுத்தாளப்பட்ட கருத்தென்றே கூறலாம். ஆனால் அக்கருத்துக்கு ஒரு புதுமெருகூட்டி மேடையேற்றியிருக்கும் திறன் பாராட்டுக்குரியது.

போலிகௌரவத்திலே அமிழ்ந்து வாழும் ஒரு முதலியார் நாட்டின் விவசாயத் திட்டத்தைப்பற்றி. விவசாய ஆக்கவூக்கத்தைப்பற்றிப் பேசுவதில் முன்னிற்பவர். ஆனால் தனது மக்களுக்கு ஒரு விவசாய பி. எஸ். ஸி. மாப்பிள்ளையையே கட்டிவைக்க இவருக்கு இஷ்டமில்லை. இங்கிலாந்து 'டாக்டர்' என்று பாய்ந்து இறுதியில் அவன் 'கொம்பவுண்டர்' என்றதும் கீழே விழுந்து அதே நேரத்தில் அந்த விவசாய பி. எஸ். ஸி. அரசாங்கத்தினரால் மதிக்கக்கூடிய அளவில் உயர்ந்துவிட்டான் என்பதையறிந்ததும் திரும்பவும் அவனையே பேசப்போக, அதற்கிடையில் அவனுக்கு விவசாயத்தை மதிக்கும் நல்லதொரு குடும்பத்தில் விவாகம் நிச்சயமாகிவிட கடைசியாக எப்படியான மாப்பிள்ளை என்றாலும் பரவாயில்லை ,முதலில் மகளின் கலியாணம் முடியட்டும் என்ற நிலையில் தனது போலிக் கௌரவத்தைக் காற்றில் பறக்கவிட்டுவிடுகிறார்முதலியார்.

இதுதான் மகாஜனக்கல்லூரியின் பெற்றார்-ஆசிரியர் சங்க விழாவில் கல்லூரியின் உயர்தர மாணவர்கள் மேடையேற்றிய சதுரங்கம் என்னும் நகைச்சுவை நாடகத்தின் கதை. 'நகைச்சுவை விருந்து' என்று அறிவித்திருந்தார்கள். ஆனால் நகைச்சுவையைவிடத் தத்துவங்கள், படிப்பினைகள் அதிகமாகக் காணப்பட்டன.

இந்தநாடகத்திலே பெண் பாத்திரம் உலவினாலும். அவளை உருவகித்துமேடைக் கிழுக்காமல் அவளை மேடைக்குவெளியேவைத்து கதைத்து அனுப்பிவிடுகின்ற அந்த நாடக உத்தி இருக்கின்றதே அது முதல்தரம். தனது மனைவியாகிய அப்பெண் பாத்திரத்துடன் கதைக்கும் முதலியார்வீட்டு வேலைக்காரன் முனியனாகத் தோன்றி நடித்த சொ. சந்திரலிங்கனின் ஒப்பனை நன்றாகக் காணப்பட்டது. அவரது நடிப்பு நயம்பட இருந்தாலும் தனது வசனங்களைச் சிறிது வேகமாகப் பேசியிருக்கலாம்.

முதலியாராகவேஷமேற்ற எஸ். எஸ். சுப்பிரமணியனும் பாத்திரத்தை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார். தோற்றம்தான் ஓரளவு போதாதென்றாலும் அவரது நடிப்பிலே குறை தென்பட்டதாகத் தெரியவில்லை, கண்டிப்பு, கோபம், சந்தோஷம், சிரிப்பு அத்தனையும் மாறிமாறி அவர் நடிப்பில் பளிச்சிடுகின்றன. அவர் மகனாக நடித்த எம். எம். முகமட் ஜமீலின் தோற்றம், நடை, உடை, பாவனை எல்லாமே மேல்நாட்டில் படித்த நம்நாட்டு இளைஞனையே நகலெடுக்கின்றன. ஏற்ற பாத்திரம் சிறிதென்றாலும் அதில் நிறைவு கண்டிருக்கிறார்.

மொத்தத்தில்முதல்காட்சியின் நீளத்தையும், உடையார், முதலியார் சம்பாஷணைகளில் சிலவற்றையும் குறைத்தால், 35 நிமிடங்கள் அலுப்புத்தட்டாமல் சிரித்துச் சிந்தித்திருந்து பார்க்கக்கூடிய இரண்டே காட்சிகளில் அமைந்த ஒரு நல்ல நாடகம் 'சதுரங்கம்.'

-மதன்-

## சினிமா உலகில்

ஆங்கிலப் பாட்டுக்களைக் கேட்டுக்கேட்டு கவலையை மறந்து ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும் ஒரே நடிகர் சந்திரபாபு; அவரிடம் ஆங்கிலஇசைத் தட்டுக்கள் நிறைய இருக்கின்றன. இசை முழங்க, அதற்குத் தக்கவாறு நடனம்ஆடி இன்பம் காண்கின்றார் சந்திரபாபு!

### திருமணயோகம்

திருமணத்துடன் பல நடிகைகளின் கதை முடிந்துவிடும்! அகில இந்திய சிறந்த நடிகையென ஜனாதிபதிப் பரிசுபெற்ற சாரதாவுக்குத் திருமணத்துக்குப் பின்பே யோகம் அடித்திருக்கிறது! அவர் நடித்த படங்கள் 'ஓகோ' என்று ஓடின.

### தனிநாற்காலி

ஸ்ருடியோவுக்கு வந்தால் உட்கார வீட்டிலிருந்தே அலங்கார நாற்காலி கொண்டுவரும்பழக்கம் இப்போது நடிகைகளிடம் வேகமாகப் பரவி வருகிறது!

அந்த நாற்காலியைத் தூக்கிக்கொண்டு நடிகைகைகள் போகும் இடமெல்லாம் கூடவே வருவதற்கு வேலைஆட்களை ஏவுகிறார்களே, அதுதான் பார்க்க நல்ல வேடிக்கை!

### வெள்ளிவிழா

நடிகர் ரவிச்சந்திரனின் அப்பா மலேஷியாவிலிருந்துவரும் 'தமிழ் நேசன்' தினசரிப் பத்திரிகையில் 25 ஆண்டுகள் துணைஆசிரியராக வேலை பார்த்து தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றவர். அவர்போல், ரவிச்சந்திரனும் பத்திரிகைத் துறையிலேயே ஈடுபட விரும்பினாராம். ஆனால் காற்று திசைமாறியது. பிரபல நடிகரானார்!

## பலதும் பத்தும்







ஈழத்து நாட்டிய உலகுக்குக் கிடைத்த மற்றொரு முத்து செல்வி அன்னபூரணி முத்துக்குமாரன்! யாழ்ப்பாணம் ப்ரஹ்தீஸ்வர நாட்டியாலய இயக்குனர் திருமதி பவானி இராஜசிங்கத்தின் மாணவியான இவரின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது. பிரதம விருந்தினராக நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டரை ஆண்டுகால மனிதனின் விண்வெளிப் பயணம்



அம்புலித்தரையில் வீரர்கள்

## 1969 நவம்பர் 14

அப்பலோ - 12 கென்னடி முனையிலிருந்து புறப்பட்டது. சார்ல்ஸ் கொன்ராட், அலன்பீன், றிச்சார்ட்கோர்டன் ஆகிய மூவரும் இதில் பிரயாணம் செய்தனர்.

அப்பலோ - 12 பூமியிலிருந்து கிளம்பிய சந்தைக்கெல்லாம் கலத்தை மின்னல் தாக்கியது. இதனால் பூமியுடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டன. ஆனால் பின்னர் எல்லாம் சரியாக இயங்கி கலம் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மனிதன் விண்வெளியில் உலாவத்தொடங்கி எட்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த எட்டரை ஆண்டுகளிலே 44 பேர் வாயு மண்டலத்தைக் கடந்து பயணம் செய்திருக்கின்றனர். இவர்களில் 23 பேர் அமெரிக்க விண்வெளி வீரர்கள், 21 பேர் ரஷ்ய விண்வெளி வீரர்கள்.

அப்பலோ - 12 தலைமை விமானிசார்ல்ஸ் கொன்ராட் 39 வயதான இந்த அமெரிக்க விண்வெளி வீரர் இரண்டுதடவை விண்வெளிப் பயணம் செய்திருக்கிறார். 1965, 1966 ஆண்டுகளில் ஜெமினிக் கப்பலில் பயணம் செய்தவர். அப்பலோ-12 பயணம் முடிந்ததும் மூன்று தடவை விண்வெளிப் பயணம் செய்த ஐந்தாவது விண்வெளி வீரரானார்.

— பேறு —

இவருடைய சகா றிச்சர்ட் எஃப். கோர்டன். 40 வயதான இவர்தான் அப்பலோ 12-ன் தாய்க்கப்பல் விமானியாகவிருந்தார். 1966-ல் இவர் ஜெமினிக் கப்பலில் விண்வெளிப் பயணம் செய்திருக்கிறார். அப்பலோ-12 பயணத்தை முடித்ததும் இரண்டு விண்வெளிப் பயணம் செய்து 14-வது வீரரானார்.

அப்பலோ - 12ன் மூன்றாவது விமானி அலன் எல். பீன் 37 வயதானவர். இதுதான் இவருக்கு முதல் விண்வெளிப்பயணம். இதற்கு முன் ஒருதடவை விண்வெளிப்பயணம் செய்த 27 பேர்களின் பட்டியலில் இவருடைய பெயர் இடம் பெறும்.

அப்பலோ - 12 விண்வெளி விமானிகளாள சார்ல்ஸ் கொன்ராட், அலன்பீன் ஆகிய இருவரும் அம்புலியில் நவம்பர் 19-ந் திகதி இந்திய நேரப்படி பகல் 12 மணி 24 நிமிடம் 29 வினாடிக்கு இறங்கினர்.

அப்பலோ - 12 அம்புலியில் இறங்கி நான்குமணி நேரம் கழித்துச் சற்று நேரத்திற்கெல்லாம் அம்புலியின் பள்ளங்களும் விமானிகள் வந்திறங்கிய நிலாவாகனமும் பின்னணியில் இருக்க, கொன்ராட், பீன் ஆகிய இருவரும், இதற்குமுன் யாருமே அடியெடுத்துவைத்திராத புயல் கடல்தரையில் உலாவினர். பழங்கால வானியல் வல்லுநர்கள் வைத்த பெயர் இது. செம்மையாக இல்லாத தொலை நோக்காடிகள் வழியாக அவர்கள் பார்த்தபோது இது ஒரு நீர்நிலைபோல் அவர்களுக்கு தோன்றியது.

நிலா வாகனத்துஏணியின் படிக்கட்டுகள் வழியாக அம்புலி வீரர்கள் இறங்கிவந்ததை பூமியிலே கோடிக்கணக்கான மக்கள் ரெலிவிஷனில் கண்டனர். அம்புலியின் மேற்பரப்பிலிருந்துவந்த முதலாவது வண்ண ரெலிவிஷன் படம் அது.

ஏணிவழியாக அவர்கள் இறங்கியபின்னர் சிறுநேரத்திற்கெல்லாம் ரெலிவிஷன் காமரா இயங்கத் தவறியது. எனவே கோடிககணக்கான மக்கள்அம்புலியிலிருந்து ஒலிபரப்பாகிய பேச்சுக் குரலைக் கேட்டுவந்தனர்.

நடப்புப் பத்தாண்டு காலத்தின் துவக்கத்திலேயே அனுப்பப்பெற்ற ஆளில்லா முதல் விண்கோள் அம்புலியில் மெதுவாக இறங்கியது. அதுவரை புகழ்பெற்ற விஞ்ஞானிகள் பலர், அம்புலிக்குச் செல்லும் விண்வெளி விமானிகள் அவர்களுடைய கப்பலுடன் அம்புலியின் தூசிக்குள் புதை மணலில் புதைந்து போவதுபோல் புதையுண்டு போய்விடுவர். அவர்கள் திரும்பி வரமாட்டார்கள் என்று வாதித்து வந்தனர்.

## அப்பலோ - 12 வீரர்கள் அம்புலியில் செய்தது என்ன?

விண்வெளிக் கப்பல் ஒன்று உண்டுபண்ணும் நிலை மின்விசை அம்புலித் தூசிகளை ஈர்க்கும் என்றும் அந்தத் தூசி கப்பலை மூடிவிடும் என்றும், அம்புலியிலிருந்து ஒருக்காலும் அக்கப்பல் கிளம்பாது என்றும் வேறு சிலர் வாதிட்டனர்.

இவையனைத்தும் தவறு என்பதை நான்கு மாதங்களுக்குமுன்னர் அப்பலோ-11 விண்வெளி விமானிகள் நிரூபித்தனர். அதுவரை சில விஞ்ஞானிகள் வேறு பூச்சாண்டி காட்டி வந்தனர். அதாவது அம்புலி கற்கள் விண்வெளிக் கப்பலுக்குள் வரும்போதோ பூமியின் வாயு மண்டலத்துக்குள் வரும்போதோ தானே தீப்பற்றிக்கொள்ளும் அல்லது வெடித்துவிடும் என்றும் அவர்கள் அச்சுறுத்தினர். அதுமட்டுமல்ல, அம்புலிக் கிருமிகள், பூமியில் இல்லாதநோய்களையும்கொள்ளை நோய்களையும்கூட உண்டு பண்ணி, பூமியில் உயிரினங்கள் அனைத்தையும் அழித்துவிடும்என்றும்கூறிவந்தனர்.

அம்புலியின் சூழ்நிலை மனிதனுக்குப் பகையாக இருப்பதுபோல் தோன்றினாலும் அம்புலியை மனிதனின் நண்பனுக்கலாம். ஏன் ஊழியனுக்கக்கூட ஆக்கலாம். இதனை அப்பலோ - 11 வீரர்கள் காட்டினர். அப்பலோ-12 வீரர்கள் உறுதிப்படுத்திவிட்டனர்.

கான்ராடு, பீன் ஆகிய இருவரும் அம்புலியின் விஞ்ஞானப் பணியில்தான் முழுக்க ஈடுபட்டிருந்தனர்.

அமெரிக்க கொடியொன்றை நாட்டுவதற்கு அவர்களுக்கு ஆறு நிமிடம் பிடித்தது. வண்ண டெலிவிஷன் காமரா அமைக்க எட்டு நிமிடம் வேண்டி வந்தது. பூமியின் ஈர்ப்புவிசையில் ஆறில் ஒருபங்கு ஈர்ப்பு விசையுடைய அம்புலிச் சூழ்நிலையில் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ள ஒரு சில நிமிடங்கள் அவர்களுக்கு தேவைப்பட்டன.

பின்னர் அவர்கள் மாதிரி கற்களைச் சேகரிக்கத் தொடங்கினர், புகைப்படங்கள் பிடித்தனர்; விஞ்ஞானக் கருவிகளை அமைத்தனர்.

பூமியிலே கல்விகேள்வியில் சிறந்தவர்கள்கூட வியப்பு மேலிட்டு இந்த இரண்டு வீரர்களும் தன்னந்தனியாக வேறுஒரு கோளில் பணியாற்றுவதை திறந்தவாய் மூடாமல் கவனித்து வருகின்றனர்,

அப்பலோ-11 வீரர்களை விட அப்பலோ-12 விண்வெளி விமானிகள் அம்புலி அருகில் செல்லும் தம் பயணத்திற்கு ஏழுமணிநேரம் அதிகம் எடுத்தனர். திரும்பி வரும் பயணத்துக்கும் 12 மணிநேரம் அதிகம் பிடித்தது.

இதற்குக் கூறப்படும் காரணங்கள் பெரும்பாலும் விஞ்ஞான நுட்ப சம்பந்தமானவை. அப்பலோ-12 விண்வெளி விமானிகள் அம்புலியில் தாம் இறங்கவேண்டிய இடத்தை அடைவதற்குத் தேவையான குறிப்பிட்ட அம்புலிப் பாதைக்குள் நுழைய அவர்கள் அம்புலியை நோக்கி சற்று மெதுவாகத்தான் செல்லவேண்டியிருந்தது. அப்பலோ-12ல் எரிபொருள் அப்பலோ-11ஐ விட அதிகமாகத் தேவைப்பட்டது. (அதிகநேரம் அம்புலியில் தங்கியிருந்தது ஒரு காரணம்) எரிபொருளைச் சிக்கனம் செய்ய என்ஜின் இயங்குவதும் குறைக்கப்பட்டது. இதனால் திரும்பி வரும் பயணநேரம் அதிகமாயிற்று.

அப்பலோ- 11 அம்புலியைச் சுற்றி 30 தடவை வட்டமிட்டது. இதற்கு 59 மணி 43 நிமிடம் ஆயிற்று. அப்பலோ-12 அம்புலியை 45 தடவை வட்டமிட்டது. இதற்கு 88மணி 56 நிமிடம் பிடித்தது.

அம்புலியை வட்டமிடுவதில் ஆகும் அதிக நேரம் விஞ்ஞானச் சோதனைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக இனி வரப்போகும் அப்பலோ பயணங்களின் விமானிகள் இறங்குவதற்குத் தகுதியான இடங்களைப் புகைப்படம் பிடிப்பது முக்கியமான பணியாக அமைந்தது.

அம்புலியில் பணியாற்றிவிட்டுத் திரும்பி வந்த அம்புலி வீரர்கள் இருவரும் 'யாங்கி கிளிப்பர்' என்ற தாய்க்கப்பலில் அம்புலியை வட்டமிட்டுக் கொண்டிருந்த மூன்றும் வீரருடன் சேர்ந்துகொண்டனர். இம்மூவரும் பத்திரமாக தாய்க்கப்பலில் இருக்கையில் காலியாகிவிட்ட அவர்களுடைய நிலாவாகனம் 'இன்ரபிட்' அம்புலியில் விழுந்து நொருங்கியதை இந்த மூன்று வீரர்களும் வியாழக்கிழமை பார்த்தனர்.

புயல் கடலில் அவர்கள் இறங்கிய இடத்திலிருந்து 24மைல்கள் தள்ளி, கைவிடப்பட்ட இந்த நிலாவாகனம் அம்புலியின் தரையில் மோதியது.

'யாங்கி கிளிப்பர்' தாய்க் கப்பலுக்குள் அம்புலி வீரர்கள் இருவரும் நுழைந்த பின்னர், 'இன்ட்ரபிட்' நிலா ஊர்தியை காலியாகிவிட்ட மூவரும் துண்டித்துவிட்டனர். அவர்கள் பத்திரமாகத் தொலைதூரம் சென்றபின்னர் ஹுஸ்டனிலிருக்கும் பயணக் கட்டுப்பாட்டதிகாரிகள் பூமியிலிருந்து வானொலி வழியாக, 'இன்ட்ரபிட்' என்ஜினை இயக்கி அம்புலியில் சென்றுமோதும்படி செய்தனர்.

அம்புலியின் புயல்கடலில் 32 மணிநேரம் தங்கியிருந்த பின்னர் இரண்டு விண்வெளி வீரர்களும் இன்ட்ரபிட் நிலா ஊர்தியில் ஏறி வந்து தாய்க்கப்பலுடன் சேர்ந்து கொண்டனர் அம்புலியிலிருந்து கிட்டத்தட்ட 90 ருத்தல் அம்புலிக் கற்கள் பொறுக்கி எடுத்து வந்திருக்கின்றனர். அணுவிசையால் இயங்கும் பூபௌதிக ஆய்வுக்கூடம் ஒன்றை அவர்கள் அம்புலியில் அமைத்தனர். இரண்டுதடவை அம்புலியில் உலாவினர். உலாவிய மொத்தநேரம் 8 மணி.

அவர்கள் கொண்டு வந்திருக்கும் மிகச் சிறந்த பரிசு யு. எஸ். சர்வேயர் டெலிவிஷன் கோளிலிருந்து பெயர்த்தெடுககப்பெற்ற பகுதிகளாகும் இரண்டரை ஆண்டுகளாக சர்வேயர் கோள் அம்புலியில் இருந்து வருகிறது. இந்தக் கோள் இருக்கும் பள்ளத்துக்கு அருகில் அவர்கள் இறங்கினர். அதிலிருந்து கமரா, இடுக்கி, ஆகியவற்றையும் இன்னும் இரண்டு பகுதிகளையும் பெயர்த்து எடுத்துக் கொண்டனர்.

கேலிப்பேச்சும் வேடிக்கைப் பேச்சும் இந்த விண்வெளிப் பயணத்தில் குறிப்பிடத்தக்கவையாகும். அப்பலோ-12 தலைமை விமானி கொன்ராட், பசிபிக்பெருங்கடலில் இவர்களை மீட்கக் காத்துக் கொண்டிருக்கும் ஹார்னட் என்ற கப்பலின் தலைவருக்கு ஒரு செய்தி யனுப்பினார். விண்வெளிக் கப்பல் குறித்த இலக்கில் வந்திறங்கப்போவதால் அந்த இடத்தில் துல்லியமாக வந்திருக்கும்படி வேடிக்கையாக அந்த செய்தியில் கூறினார். ''ஒரு தடவை வந்துஇறங்குவதற்குத்தான் எங்களிடம் வலு இருக்கிறது'' என்றார்.

பயணக்கட்டுப்பாட்டுநிலையமும் விமானிகளைக் கிண்டல் செய்தது. சண்டித்தனம் செய்த ரெலிவிஷன் ... ராவை அம்புலியி... விண்வெளி வீரர்கள் ... எளிதில் பெண் ... கொண்டை ஊசி ஒன் ... பயன்படுத்திப் பழுது ... திருக்கலாமே என்று ... டம் யோசனை ஒன் ... துள்ளதாக அவர்கள் ... களிடம் தெரிவித்தன ...

சிரிப் பொலிக் கி... கொன்ராட், நிலையத் ... காரிகளுக்கு நினைப்பு ... தாவது: ''இங்கு எ ... மத்தியில் பெண்கள் ... இல்லையே''.

சில சில்லறைத் தொ... களை அம்புலி வீரர்கள் ... வித்தனர். கோர்டன், ... உடலில், உணர் கரு... பொருத்தப்பட்டுள்ள ... களில் வெடிப்புகள்கா... கிறதாகக் கூறினார். ... டைய நாடித்துடிப்பு ... ஆகியவற்றை பூமிக்... சமி செய்யும் உணர் ... கள் இவை.

அம்புலியில் விண்... வீரர்கள் கொன்ராட் ... ஆகிய இருவரும் ... கையி... அவர் ... உடுப்புகளில் அம்புலி ... நிறைய ஒட்டிக்கொண் ... அவர்கள் விண்வெளிக் ... லுக்குள் நுழைந்த ... தூசியும் கூடவே ... சூழ்நிலையைக் கெடுத் ... இதனால் அம்புலிவீரர்க... மூச்சு வலிப்பு ஏற்பட... அவர்கள் மருந்து சா... டனர். அடிக்கடி க... சுத்தம் செய்யும் அ... பின் வடிகட்டியை ... செய்தனர். ஆனால் ... கடுமை என்று அவ... கருதவில்லை.

விண்வெளிக் கப்பலு... ஈரம் உறையத் தொ... யது. ஈரம் இவ்வா... லுக்குள் மிதப்பதைத் ... விமானிகள் அவ்வப்... விமானத்தைத் து... வருகிறதாக கொன்ரா... வித்தார்.

விண்வெளி விமா... தந்த விஞ்ஞான அ... கள் எல்லாம், பய... யத்திலுள்ள நிலஉ... யல் வல்லுநர்கள் ... குறிப்பிட்ட கேள்வி... விடைகளாகவே இரு...

விண்வெளி விமா... அம்புலியில் செய்த ஆ... சிகள் அவர்களுடை... வில் இருக்கையிலேயே ... வல்பெற விரும்பி... ஞானிகள். அம்புலிப் ... களை நகர்த்தி உரு... போது அவை எத்... தடங்களை உண்டுப... என்பதை விஞ்ஞா... அறிய விரும்பினர்; ... யின் மேல்பரப்பு ... இன்னும் விரிவான ... கள் விபரங்களும் அ... கோரினர்.

1970-ம்ஆண்டுக்கு... விண்வெளி ஆராய்ச்... படி இருக்கும்?

அப்பலோ-12 அ... பயணம் அதனைக் க... றது.

விண்வெளி யுக... அதிகவயதாகவில்லை. ... சிறுவயதிலேயே மிக... லான அம்புலிப்பயண... தேறியிருக்கிறது; ... வண்டியாகக் கிடை... கும் விஞ்ஞான, ... நுட்பத் தகவல் ... கொண்டு பார்த்தா... ரிக்காவின் விண்வெளி... சியிலே பலன்மிக்க... பணி இந்த அப்ப...

## சந்திரப் பயணம்-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிவிஷன் கம
வ அம்புலியிலேயே
வளி வீரர்கள் வெகு
ல் பெண்ணின்
டை ஊசி ஒன்றைப்
படுத்திப் பழுதுபார்த்
லாமே என்று தங்களி
பாசனை ஒன்று வந்
தாக அவர்கள்விமானி
தெரிவித்தனர்.
ப் பொலிக் கிண்டியே
ராட், நிலையத்து அதி
ளுக்கு நினைப்பூட்டிய
: ''இங்கு எங்கள்
பில் பெண்கள் யாரும்
யே''.
சில்லறைத் தொல்லை
அம்புலி வீரர்கள் தெரி
னர். கோர்டன், தமது
ல், உணர் கருவிகள்
த்தப்பட்டுள்ள இடங்
வெடிப்புகள்கண்டிருக்
கக் கூறினர். அவரு
நாடித்துடிப்பு, மூச்சு
வற்றை பூமிக்கு அஞ்
சய்யும் உணர்க்கருவி
வை.
புலியில் விண்வெளி
ள் கொன்ராட், பீன்
இருவரும் நடமாடு
அவர் டைய
களில் அம்புலித்தூசி
ப ஒட்டிக்கொண்டது.
கள் விண்வெளிக் கப்ப
ள் நுழைந்தபோது
ம் கூடவே சென்று
லையைக் கெடுத்தது;
ல்அம்புலிவீரர்களுக்கு
வலிப்பு ஏற்பட்டது.
கள் மருந்து சாப்பிட்
அடிக்கடி காற்று
ம் செய்யும் அமைப்
வடிகட்டியை சுத்தம்
தனர். ஆனல் பிரச்னை
ம என்று அவர்கள்
வில்லை.
ண்வெளிக் கப்பலுக்குள்
உறையத் தொடங்கி
ரம் இவ்வாறு கப்ப
ள் மிதப்பதைத்தடுக்க
னிகள் அவ்வப்போது
னத்தைத் துடைத்து
றதாகக்கொன்ராட்அறி
ார்.
ண்வெளி விமானிகள்
விஞ்ஞான அறிவிப்பு
எல்லாம், பயணநிலை
லுள்ள நிலஉட்கூற்றி
வல்லுநர்கள் கேட்ட
பிட்ட கேள்விகளுக்கு
களாகவே இருந்தன.
ண்வெளி விமானிகள்
புலியில் செய்த ஆராய்ச்
அவர்களுடைய நினை
இருக்கையிலேயே தக்
பெற விரும்பினர் விஞ்
ரிகள். அம்புலிப்பாறை
நகர்த்தி உருட்டிய
து அவை எத்தகைய
களை உண்டுபண்ணின
பதை விஞ்ஞானிகள்
ப விரும்பினர்; அம்புலி
மேல்பரப்பு குறித்து
னும் விரிவான தகவல்
விபரங்களும் அவர்கள்
ரினர்.
70-ம்ஆண்டுக்குப்பிறகு
வெளி ஆராய்ச்சி எப்
இருக்கும்?
ப்பலோ-12 அம்புலிப்
னம் அதனைக் காட்டுகி
ண்வெளி யுகத்துக்கு
கவயதாகவில்லை. இந்தச்
வயதிலேயே மிகச் சிக்க
அம்புலிப்பயணம்நடந்
யிருக்கிறது; வண்டி
டியாகக் கிடைத்திருக்
விஞ்ஞான, தொழில்
பத் தகவல்களைக்
ண்டு பார்த்தால் அமெ
ாவின் விண்வெளி முயற்
லே பலன்மிக்கதொரு
இந்த அப்பலோ-12

அம்புலிப் பயணம் என்று கூறலாம்.

அம்புலியில்உலாவிப் பணி செய்துகொண்டிருக்கும் போதே விமானிகள் கொன்ராட், அலன் பீன் ஆகிய இரு வீரர்களும் அதனைக் கூறிக்கொண்டு வந்தனர். இதனுல் தகவல்கள் அனைத்தும் உடனேயேவிஞ்ஞானிகளுக்குக் கிடைத்தன.

**மிகத்துல்லியமாக குறித்த இடத்தில் அம்புலியில் அவர்கள் இறங்கியதும், முன்பின் சென்றிராத முற்றிலும் புதுமையான சூழ்நிலையில் அவர்கள் உடனே பணியாற்றத் தொடங்கியதும், இந்தப் பயணத்தின் சிறப்புகளாகும். அம்புலியில் வாயுமண்டலம் இல்லை; எனவே காற்று இல்லை. ஒலி இல்லை, மழை இல்லை, மூடு பனி இல்லை.**

அவர்கள் நன்ருக இருந்தனர், ஆரோக்கியமாக இருந்தனர் என்பதற்குச் சான்று அவர்கள்பயணத்தின்போது பெரும் மகிழ்ச்சியுடன்இருந்ததுதான். அவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசினர். கிண்டல் செய்தனர்,வேடிக்கையாகப் பேசினர்.

வருங்கால அம்புலிப் பயணிகள் இவர்களைப்பின்பற்றலாம்.

சிரிப்பும் வேடிக்கைப்பேச்சும் இருந்தாலும், தம்பணியில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அதனை அவர்கள் செவ்வனே செய்துமுடித்தனர்.

அப்பலோ-12 பத்து நாள் பயணம். அம்புலியின்பாதையில் அவர்கள் 3 நாள் 17 மணித்தியாலம் இருந்திருக்கின்றனர். 38 மணி நேரம் கான்ராட், பீன் ஆகிய இருவரும் அம்புலியில் இருக்கையில், தாய்க்கப்பலில்றிச்சர்ட் கோர்டன் அம்புலியைத் தன்னந்தனியாக வட்டமிட்டுக்கொண்டிருந்தார். ஸ்டீரியோ காமராவை வைத்துக் கொண்டுஅவர்அம்புலியைப் படமெடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தார். வருங்கால அம்புலி விமானிகள் இறங்குவதற்குத் தகுந்த இடங்களைத் தெரிந்தெடுக்க இந்தப் படங்கள் உதவும் தாய்க்கப்பலுக்கு இந்த இரண்டு விமானிகளும்வந்து சேர்ந்த பின்னர் மூவரும் அம்புலியைப் படமெடுத்தனர்.

அம்புலியில் விண்வெளி வீரர்கள் அமைத்துவிட்டு வந்த கருவிகள் தானுகவே தகவல்கள் அஞ்சல் செய்யத் தொடங்கிவிட்டன. ஓராண்டு அல்லது அதற்கு மேலும் இது தொடர்ந்து நடக்கும்.

''இந்தப் பாறைகள் கற்கள் எல்லாம் 450 கோடி ஆண்டுகளாக இங்கு காத்திருக்கின்றன. எதற்காக? யாராவது வந்து எடுத்துப் போவார்கள் என்பதற்குத்தான்'' என்றுர் பீன், அம்புலியில் இறங்கி ஒரு நோட்டம் விட்டவுடன்.

(வளரும்)

# பொருளாதார அபிவிருத்தியில் மகாவலித் திட்டம்

— மு. சின்னத்துரை பி. ஏ. —

நீண்டகாலத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ள மகாவலிகங்கை அபிவிருத்தித் திட்டம் ஒரு பல நோக்குத் திட்டமாகும் உள்ளார்ந்த வளனை (Potential) வெளிக் கொணர்ந்து நாட்டின் அபிவிருத்தியை ஸ்திரப்படுத்தும் இத்திட்டத்தினுல் விவசாயத்திற்கு நீர்ப்பாசனமும், கைத்தொழிலுக்கு நீர் மின்சக்தியும் கிடைக்கின்றது.

இத்திட்டத்தை அமுல் நடத்துவதுபற்றி யாருக்கும் கருத்துவேற்றுமை கிடையாது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் முக்கிய சர்ச்சையை ஏற்படுத்தவிருக்கும் மகாவலித் திட்டம்பற்றிய விவாதம், அது அமுல் நடத்தப்படும் நடைமுறை பற்றியதேயன்றி கொள்கை பற்றியது அல்ல. அதே நேரம் பேராசிரியர் கா. குலரத்தினம் போன்றோரின் சந்தேகங்களையும் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். மகாவலி அபிவிருத்தித்திட்டத்தை நோக்கம், திட்டத்தின் அம்சம், நடைமுறை என்ற மூன்று நிலைகளில் நோக்கலாம்.

**பொருளாதார அபிவிருத்தியின் முதல் கட்டம் விவசாய அபிவிருத்தி**

இத்திட்டத்திற்கு பெருந்தொகையான பணம் செலவிடவேண்டியுள்ளது. இத்தகைய பெருமுதலீட்டை கைத்தொழிலில் ஈடுபடுத்தினுல் அதிக லாபம் அடையலாம் என்பது உண்மையாயினும் நீண்டகால நலன் என்ற அடிப்படையில் பார்க்கும்போது விவசாய விருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தித் திட்டம் தவிர்க்க முடியாததொன்ருகக் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தியின் முதல் கட்டம் விவசாயவிருத்தியிலேயே தங்கியுள்ளது என்பதை பொருளியல் வரலாறு கூறுகின்றது. பிரித்தானியா. யப்பான், சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளின் பொருளாதார எழுச்சியின் முதற்கட்டம் விவசாய அபிவிருத்தியாக அமைந்திருத்தலைக் காணலாம்.

விவசாயப் பெருக்கத்தால் உணவுப் பொருட்களின் இறக்குமதி குறைக்கப்பட அந்நியச் செலவாணிச் சேமிப்பு ஏற்படுகின்றது. தற்போதைய 12.5 மில்லியன் சனத்தொகை 1995 ம் ஆண்டு 25 மில்லியனுக அதிகரிக்கும்போது உணவுக்கு 500 கோடி ரூபா தேவைப்படும். ஆகவே உள் நாட்டு உணவு உற்பத்திப்பெருக்கம் உள்நாட்டுச் சேமிப்பை அதிகரிக்கச் செய்யும். சேமிப்பு அதிகரிகரும்போது மூலதனமும் அதிகரிகரும். ஆகவே கைத்தொழில் விருத்திககு ஏற்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே கைத்தொழில் விருத்தியின் அடிப்படை குறைவிருத்தி நாடுகளுககு விவசாய விருத்தியிலேயே தங்கியுள்ளது. பெருமூலதனத்தையிட்டுகுறைவிருத்தி நாடுகளின் பொருளாதார விருத்திக்குத் தடையாக விளங்கும் விசைச் சுழற்சி (Vicious circle) வட்டத்தை விவசாயத்துறையிலேயே முதலில் உடைககவேண்டும்.

**மகாவலி கஙகையின் புவியியல் தன்மை**

தென் மேற்குப் பகுதியில் மகாவலி கங்கை உற்பத்தியாகி மத்தியமலை நாடடிற் கூடாகச் சென்று வடகிழக்கில் கடலைச் சேருகின்றது. மகாவலிகங்கையின் போக்கு புவிச்சரித வரலாற்றுககு ஒரு புறநடையாக அமைகின்றது. மகாவலி வடிநிலத்தின் தோற்றத்தை ஆராய்வது இலங்கையின் புவிச்சரித காலங்களில் ஏற்பட்ட நிலத் தோற்ற மாறுதல்களை ஆராய்வதற்குச் சமன் ஆகும். 8000 அடி உயரம் கொண்ட சிவனொளிபாதத்தில் உற்பத்தியாகி திருகோணமலைக்கு அருகே கடலில் கலககின்ற மகாவலியின் உற்பத்திப் பிரதேசம் 200'' ''மழையையும் கழிமுகம் 50'' மழையும் பெறுகின்றது. இன்னோர்விதமாகக கூறினல் தென்மேல் மொன்சூன் காற்றுல் மழை [illegible] த்தில் உற்பத்தியாகி வடகீழ் மொன்சூன் காற்றுல் மழை வெறும் பிரதேசத்தில் கடலில் சங்கமமாகின்றது எனலாம். ஏறக்குறைய 4034 ச. மைல் பரப்பை உள்ளடககிய மகாவலி வடிநிலத்தில் 2500 ச. மைல் காடாகக காணப்படுகின்றது. இந்நதி வருடாந்தம் 7200.000 அடி ஏககர் நீரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

**அபிவிருத்தித்திட்டத்தின் அம்சங்கள்**

மகாவலிகங்கை அபிவிருத்தித்திட்டம், நீர்ப்பாசனம், வடிகால்முறை. வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாடு, நில அபிவிருத்தி, குடியிருப்பு, சக்திஉற்பத்தி ஆகிய அம்சங்களைக் கொண்டதாகும். நடைமுறைக்குக் கொண்டுவரும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் மேற்கூறிய அம்சங்கள் காரிய சித்தி அடைய எத்தகைய சாத்தியமான வழிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை ஆராயுமுன் திட்டத்தின் அம்சங்களைச்சுருக்கமாக ஆராய்தல் அவசியமாகும்.

இத்திட்டத்தை அமுல் நடாத்துவதன் மூலம் 5,800,000 ஏக்கர் அடி நீரைக் கட்டுப்படுத்தி 900,000 ஏக்கர் பரப்பை நீர்ப்பாசனத்திற்குஉட்படுத்தலாம். இதில் மகாவலிபள்ளத்தாக்கில் 365,000 ஏக்கரும், மதுறுஓயா வடிநிலத்தில் 110 ஏக்கரும், வடமத்தியபகுதியில் 427,000 ஏக்கரும் இந்நீர்ப்பாசனத் திட்டத்தில் பயனடையும். மொத்தப் பரப்பில் ஏற்கனவே 246,000 ஏக்கர் விருத்தி செய்யப்பட்டது. 654,000 ஏக்கர் இன்னமும் விருத்திசெய்யப்படாது பிரதேசமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு விவசாயத்திற்கான நீர்ப்பாசனத்துடன் அமையாது நீர்த்தேக்கத்தையுங் கால்வாய்களையும் அமைத்தும், இணைத்தும் 507 MW சக்தியை கொள்ளவாகக் கொண்டதும் சராசரி வருடாந்த வெளியீடு 2600 KWh கில்லோவாட் குதிரைச்சக்தி கொண்டதுமான மின்திட்டமும் அபிவிருத்தி செய்யப்படும். இத்திட்டத்தை அமுல் நடாத்த ஏறக்குறைய 30 வருடம் எடுப்பதுடன் 6700 மில்லியன் செலவினத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இத்திட்டம் 3 கட்டங்களில் நிறைவேற்றப்படும். முதற் கட்டம் மூன்று நிலைகளில் அமுல் நடாத்தப்பட உள்ளது.

**முதலாவது கட்டம்**

**முதலாவதுநிலை**

பத்து வருடத்தில் மகாவலித்திட்டமும் இடம்பெற்றுள்ளது. அத்திட்டத்தின் அடிப்படையில் பிறிம்றேஸ் இடத்திலிருந்து திசை திருப்ப ஆலோசிக்கப்பட்டு அதனைக் கைவிட்டுவிட்டு தற்போது பொல்கொலவிலிருந்து திசைதிருப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதன்படி பொல்கொல இடத்திலிருந்து 5 1/2 மைல் நீளமான 19 1/2 அடி கொண்ட சுரங்கம் அமைக்கப்படுவ [illegible] அமைக்கப்படும். பிரதான மகாவலிகங்கையிலிருந்து நிமிடத்திற்கு 2500 கன அடி விகிதம் சுதுகங்கைக்கு நீர் அனுப்பப்படும். அம்பன் கங்கைப் பிரதேசத்தில் போவற்றனு இடத்தில் 5 மைல் நீளமான சுரங்கம் அமைத்து காலஓயாவுடன் இணைக்கப்படும். காலஓயா வடிநிலத்தில் 56,900ஏக்கர் புதியநிலமும்56,200 ஏக்கர் விரிவுபடுத்தப்பட்ட நிலமும் நீர்ப்பாசன வசதியைப்பெற வசதி உண்டு. எலகராக் கால்வாய் மூலம் நுவரகலாவியாநீர் பெறும்போது எலகரா கோடுல கந்தளாய் பராக்கிரம சமுத்திரம், இராட்சதக்குளம் அனுரதபுர நகர்ப்பகுதி குளங்கள் ஆகிய பகுதிகளில் 71,000 ஏக்கர் விரிவுபடுத்தப்பட்ட நிலமும், 4,4,500 புதியநிலமும் நீர்ப்பாசன வசதியைப் பெறும். இந்த வகையில் மகா, யால ஆகிய பருவத்தில் குறித்த பகுதிகளில் 90 வீத நீர்ப்பாசன வசதி பெற முடியும். தொகுத்து முதலாவது கட்டத்தின் முதலாவதுநிலை தொகுத்துப் பார்க்கும்போது நீர்ப்பரசனவசதி பெறும். 2,28,000 ஏக்கரில் 1,01,400 ஏக்கர் புதிய நிலமாகும். நீர்மின்சக்தியைப் பொறுத்து 202 மில்லியன் கில்லோவாட் குதிரைச்சக்தி உற்பத்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முதலாவது நிலையை நிறைவேற்ற 625 மில்லியன் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினத்தை விவசாயத்திலிருந்து வருடத்திற்கு 118 மில்லியனும், மின்சக்தியிலிருந்து 12 மில்லியனும் மொத்தமாக 130 மில்லியன் வருமானம் ஆண்டுக்கு பெறும் பட்சத்தில் 5ஆண்டில் மொத்த செலவினத்தை பெறும் லாபத்திலிருந்து ஈடு செய்துகொள்ளலாம்.

**இரண்டாம்நிலை**

முதலாவது கட்டத்தின் இரண்டாவதுநிலை விக்டோறியா-மினிப்பே பகுதி திருப்பமாக அமையும். இவ்வற்றுல் மினிப்பே பகுதி முழுவதும் நீர்ப்பாசனம் பெறுவதுடன் அப்பாலும் நீர்ப்பாசன வசதி பெறக்கூடியதாக இருக்கும். தற்போது விவசாயத்தின்கீழ் உள்ள பகுதியுடன் 73600 ஏக்கர் புதிதாக நீர்ப்பாசனத்திற் உட்படுத்த முடிவதுடன் 469 மில்லியன் கில்லோவாட் குதிரைச் சக்தியும் உற்பத்தி செய்யமுடியும். இவ்வபிவிருத்தியையும், குடியிருப்டையும் செயல்படுத்த 680 மில்லியன் தேவைபடுகின்றது. ஆண்டுக்கு விவசாயத்தின் முலம் 92 மில்லியனும் மின்சக்திமூலம் 26 மில்லியனுமாக மொத்தம் 118 மில்லியன் ஆண்டுக்கு லாபம் பெறும் பட்சத்தில் மொத்த செலவினமாகிய 680 மில்லியனை 6 வருடத்தில் பெறலாம். 1973-77 காலப்பகுதியை இத் திட்டம் கொண்டது.

**மூன்றும்நிலை**

மொறக்காககந்த நீர்த்தேக்கத்தினைத் தொடுப்பதுடன் மூன்றுவது நிலை விருத்தி செய்யப்படும். இத்திட்டத்தால் எலகரா, கந்தளாய், கோடுவா முழுமையான நீர்ப்பாசன வசதியைப் பெறுவதுடன் 9,000 ஏக்கர் புதிதாக விவசாயத்தின்கீழ் கொண்டுவரப்படும்போது மொத்தம் 27,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதியைப் பெறும். வருட வருமானம் 42 மில்லியனுக எதிர்பார்க்கும்போது மொத்த செலவினமாகிய 300 மில்லியனை 7 வருடத்தில் திரும்பப் பெறலாம்.

**இரண்டாம் கட்டம்**

இக்கட்டத்தில் 23000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெறுவதுடன் 109000 ஏக்கர் மதுறுஓயா வடிநிலம், காலுகங்கை, கீழ்மகாவலி, குறுளுவீவா, மல்வத்தோயா, யன் ஓயா பதவியா ஆகிய பகுதிகளில் புதிதாக விவசாயத்தின்கீழ் கொண்டுவரப்படும் அத்துடன் 100 மொக்கவாட் மின்சக்தியும் உற்பத்தி செய்ய வசதி உண்டு.

**மூன்றும்கட்டம்**

வடமத்திய மாகாணப் பகுதியில் அதிக நிலம் நீர்ப்பாசன வசதியைப்பெறும். நீர்ப்பாசன வசதியைப் பெறும் 32400 ஏக்கரில் 261000 ஏக்கர் புதிய நிலமாக அமையும். மகா ஓயா, கனகராயன்ஆறு பாலிஆறு பறங்கி ஆற்று வடிநிலம் ஆகிய பகுதிகள் நன்மை அடையும். அதேநேரம் 102 மொக்கவாட் சக்தியை உற்பத்தி செய்யும் மின்சக்தி நிலைகளும் அமைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

6700 மில்லியனை செலவினமாகக் கொண்ட மகாவலித் திட்டம் 9000000 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதியையும் 500000 பேருக்கு குடியிருப்பு வசதியையும் 507 மொக்கவாட் சக்தி கொள்வனவு கொண்ட வருடாந்தம் 2600 மில்லியன் கில்லோவாட் குதிரைச் சக்தியையும் உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டமாகும். இலங்கையின் ஒரு வருடத்தின் மொத்த வருமானத்தில் 75/வீதம் இதற்குச் செலவிடப்படவுள்ளது. அபிவிருத்தித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் நிலப்பரப்பில் 29வீதம் நெல்லிற்கும் 15வீதம் கலப்புப் பயிருக்கும், 50 வீதம் சூழற்சிபணப் பயிருக்கும், 3வீதம் புல் நிலத்திற்கும் 2வீதம் கரும்புக்கும் ஒதுக்கப்படும்.

திட்டத்தின் முடிவில் 2007600 ஏக்கர்நிலம் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தி 1264200 தொன் நெல் உட்பட மொத்தம் 38400800 தொன் தானியவகைகள் உற்பத்தி செய்யும்போது அவை உலகச் சந்தையின் விலைப்படி 15638 மில்லியன் பெறுமதி கொண்டதாக அமையும்.

கல்லோயா, உடவளவை ஆகிய திட்டங்கள் தோல்வி அடைந்தநேரத்தில் அத்திட்டங்களிலும் பல மடங்கு பெரிய பாரிய திட்டமான மகாவலித்திட்டத்தின் வெற்றி தோல்வி மிகவும் அவதானத்துடன் அணுக வேண்டியதொன்று. முன்னைய திட்டங்க தோல்வி அடையக் காரணமென்ன? அவை இத் திட்டத்தில் எவ்வளவுதூரம் தவிர்க்கப்பட்டுள்ளன. விஞ்ஞான தொழில் நுட்பமுறை எந்தளவு சிக்கனமாகக் கையாளப்பட்டுள்ளது? ஆகிய கேள்விகளைக் கேட்பதுதவருகாது. இத்திட்டத்தை நன்கு ஆராயாது அமுல் நடாத்தித் தோல்வி அடையும் பட்சத்தில் அடுத்த தலைமுறையினர் இதன்விளைவால் நன்கு பாதிக்கப்படுவார்கள்.

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழைப்பழம்

வாழையில் சுமார் முப்பது இனங்களும் அவற்றில் வெவ்வேறுவிதமான இருநூற்றுக்கு மேற்பட்ட வகையினங்களும் இருக்கின்றன. சிலவாழைப்பழங்கள் ஓர் அடி நீளம்கூட இருக்கும். வாழைப்பழத்தை உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள், வாழைஇனம் பயிரிடப்படாத நாடுகளுக்கு இவை தகுந்த பாதுகாப்புடன் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது. உடலுக்குப் போஷாக்களிக்கும் சத்துக்கள் அடங்கியதும், சுலபமாக சீரணிக்கத்தகுந்ததுமானது வாழைப்பழம்,

வாழைப்பழத்தில் நீர் 75 பாகமும் சர்க்கரை 20 பாகமும், புரதம் 2 பாகமும், கொழுப்பு 1.5 பாகமும் செலுலோசு 1 பாகமும் அடங்கியிருக்கின்றன இவைகளைத் தவிர கனி உப்புக்களான சோடியம். கல்சியம், பொஸ்பரசு இரும்பு, கந்தகம், மக்னீசியம், குளோறின். விட்டமின்கள் 'ஏ. பி. சி. ஆகியனவும் வாழைப்பழத்தில் காணப்படுகின்றன.

சிலபிரதேசங்களில் வாழைக்காயைக் காயவைத்து அதிலிருந்து, 'மா' தயாரிக்கிறார்கள்' சிலவகை வாழைகளின் பட்டையிலிருந்து உறுதியான நார்கிடைக்கிறது. இந்த நாரினால் உடைகள்கூடத் தயாரிக்கிறார்கள். உறுதியான கயிறு தயாரிக்கிறார்கள். ஆபிரிக்காவின் சில பகுதிகளில் வாழைஇலையைக் குடிசைகளுக்குக் கூரையாகவும்பயன்படுத்துகிறார்கள்.

இன்னும் பாம்புக்கடி வைத்தியத்துக்கு இளம் வாழைத்தண்டின்சாறு சிறந்த மருந்தாகப் பயன்படுகின்றது. உடன் பாம்புகடித்த ஒருவருக்கு ஒருகிளாஸ் வாழைத் தண்டின் சாறு கொடுத்தால் உயிர் தப்பிவிடுவார்என்று பழம்பெரும் இந்திய வைத்திய அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார்.

நமதுநாட்டிலும் இந்திய நாட்டிலும் இப்பொழுதுங்கூட உணவு அருந்தும் பாத்திரமாக வாழையிலையையும் காய்ந்த வாழைத்தடலையும் உபயோகிக்கிறார்கள்.

உலகத்திலேயேவாழையை அதிகமாக உற்பத்தி செய்தும் ஏற்றுமதி செய்கின்றதுமான நாடு ஈக்வடார்தான். சிலவருடங்களுக்கு முன்னைய கணித்தலின்படி வருடத்தில் 8,90,000 தொனகள் வாழையை ஏற்றுமதி செய்கிறது ஈக்வடார்.

நமது தீவிலும் இப்போ வாழையின் உற்பத்திபெருகிவருவதுடன் பாவனையும்பன் மடங்கு அதிகரித்து வருகின்றது.

எதற்கும் பயனற்று குப்பையிலேவீசப்படும்வாழைத் தண்டைப்பற்றி (எமது நாட்டு) வேலையில்லாமல் திண்டாடும் விஞ்ஞான மாணவர்கள் அக்கறைஎடுப்பின் அதாவது ஆராயப்படின் அநேக நன்மைகள் கிட்டுவதுடன் புகழும்மதிப்பும் பெறுவதுடன் வேலையில்லாப் பிரச்னையும் ஓரளவு ஒழிந்துபோகும். இதையிட்டு மாணவர்கள் சிரத்தை எடுப்பார்களா?

கி அல்பேட் பங்கிராஸ்

## பட்டாம் பூச்சி

பட்டாம் பூச்சி பறக்குதடா
பலபல நிறமும் காட்டுதடா
சிட்டாப் பறந்து போகுதடா
சிறுசிறு வட்டங்கள் போடுதடா. (பட்டாம்)

எட்டா உயரம் ஏகுதடா
எட்டியும் பிடிக்க ஆகுதடா
முட்டா முட்டி மலர்களிலே
மோதியும் ஓதியும் போகுதடா. (பட்டாம்)

கட்டா அழகின் கவின்வனப்பைக்
கண்களும் கண்டிடத் துடிக்குதடா.
தொட்டா வண்ணம் தனைவிட்டுத்
தோற்றத்தை மாற்றியும் காட்டுதடா
(பட்டாம்)

கட்டா மலரில் கள்ளுண்டு
கதைகளும் சொல்லியே கேட்குதடா
மொட்டா இருந்த போதெல்லாம்
முழுமலர் ஆனபின் சுற்றுதடா (பட்டாம்)

தட்டாதட்டிக் கைதன்னைத்
தேடியே கண்களும் சிமிட்டுதடா
ஒட்டா உலகில் ஒட்டுமுறை
பட்டாம் பூச்சியோ தந்ததடா (பட்டாம்)

—மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி

## தெரியுமா?

### திருட்டு 65 லட்சம் செலவு 80 லட்சம்

ஜப்பானில் ஓர் இளைஞன் வங்கி ஒன்றில் 65 லட்சம் ரூபாய் திருடிவிட்டான். ஆனால் இவனைப் பிடிப்பதற்கு ஜப்பான் பொலீசார் முயற்சி எடுத்து 80 லட்சம் செலவாகிவிட்டது. ஆனால் இளைஞன் இன்னும் அகப்படவில்லை.

### டெலிவிஷனுக்குக்கிராக்கி

அமெரிக்காவில் தற்போது சினிமாவிற்கு கிராக்கி குறைந்துவிட்டது. டெலிவிஷனுக்குத்தான் மதிப்பு. சினிமாவில் மக்களை நாட்டம்கொள்ளச்செய்ய இப்போது அதிக அளவில் ஆபாசக்காட்சிகளைச் சேர்க்கின்றனர். ஆனால் இந்தியாவில் சினிமாவுக்கு வரும் கூட்டம்போல் அமெரிக்காவில் வராது.

### எலியின் மாமிசம்

எலிகளின் மாமிசத்திலிருந்து கோழிகளுக்கும் நாய்களுக்கும் வேண்டிய உணவுகளைத் தயாரிக்கின்றனர். எனவே உயிருடன்எலிகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு காஷ்மீரில் அதிக பணம் கிடைக்கிறது.

### தண்ணீருக்கு றேஷன்

தென் அமெரிக்காவில் சில இடங்களில்மழைஇல்லை. இதனால் அங்குதண்ணீருக்கு றேஷன்!

### குதிரை லாடம்

பிரிட்டிஷ் மக்கள் யாராவது தெருவில் குதிரை லாடத்தைக் கண்டெடுத்தால் அதை வீட்டின் முன்புறத்தில் மாட்டிவிடுவர். அதை அதிர்ஷ்டம் என்று நம்புகின்றனர்.

### பச்சோந்தி மீன்

ரஷ்யாவுக்கு அருகேயுள்ள கடலில் ஒருவகை மீன் இருக்கிறது. இது எந்தப் பொருளின் கிட்ட இருக்கிறதோ அப்பொருளின் நிறமாக மாறிவிடுகிறது. இதனால் இதைப்பிடிப்பதுமிகவும் கஷ்டம். இதற்குப் பச்சோந்தி மீன் என்று பெயர்.

### 10:1

அமெரிக்காவில் கார்களாலும் விமானங்களாலும் ஓசை அதிகமாக இருந்துவருகிறது. இதனால் அங்கு பலருக்கு காது செவிடாகிறது. பத்துப்பேருக்கு ஒருவர் வீதம் செவிடராக இருக்கின்றனர் அமெரிக்காவில்.

சேகரிப்பு: இ. பேர்ணை.

# கானகத்துத் தேவதை [10]

— க. கனகலிங்கம் —

அப்பொழுது வழமைபோல் ராட்சதகூட்டம் பேசும் மரத்தடிக்கு வந்து கனிகளை உண்டுவிட்டு மீண்டும் திரும்பிச் சென்றன. ராட்சதகூட்டம் அவ்விடத்தைவிட்டுச் சென்றதும் பேசும் மரத்தடிக்குச் சென்றான் கண்ணன் ''தம்பி அன்றொருநாள் ஐயோ அம்மாவென்று யாரோ அழும் குரல் கேட்டு நீ திடுக்குற்றதும் நாங்கள் உம்மை அத்திசைக்குச் செல்லவேண்டாமென்று எச்சரித்ததும் உமக்கு ஞாபகமிருக்கலாம். அங்குதான் தம்பிபால்மணம் மாறாப் பச்சிளங்குழவிகள் பலியிடப்படுகின்றன. அத்துடன் அங்குதான் அனேகம் பேர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்றன கனிகள். இதைக்கேட்ட கண்ணன் ஒருவேளை தனது தந்தையும் அங்கு சிறைப்பட்டிருக்கலாம் என எண்ணியவனாய் ஆச்சரியத்துடன் அவர்களையெல்லாம் நீங்கள் பார்த்தீர்களா எனக்கேட்டான். இல்லை, இல்லை, அவர்களை யாருமே பார்க்கமுடியாது. அவர்கள் சிறைவைக்கப்பட்டிக்கும் இடம்ஒருபெருங்கோட்டை. அங்கு மந்திர சக்திகளுக்குட்பட்ட அனேகம் பொருட்கள் இருக்கின்றன என்றன கனிகள். மந்திரசக்தியென்று கனிகள் கூறியதும் தனக்குஇதுவரை ஏற்பட்ட இன்னல்களிடையே பாதுகாப்பாக இதுவரையும் கொண்டுதிரியும் மந்திரச்சக்திவாய்ந்த வெள்ளிப்பூண் பொருத்தப்பட்ட பிரம்பின் ஞாபகம்வரவே அப்பிரம்பை ஒருமுறை எடுத்துப் பார்த்துக்கொண்டான். அதைக்கண்ணுற்ற கனிகள் இது என்ன தம்பி பிரம்பு என்று கேட்டன. இப்பிரம்பு எனது ஆன்றோர் வழித்தோன்றலாகபாவித்துவந்த மந்திர சக்தி வாய்ந்த பிரம்பு. இப்பிரம்பை நான் வரும்பொழுது எனது பாதுகாப்புக்காகக் கொண்டுவந்தேன் எனக்கூறினான்.


அப்பொழுது வழமைபோல் ''ஐயோ அம்மா'' என்று யாரோ அலறும்குரல் கேட்டதுதான் தாமதம் கனிகள் கூப்பிடக்கூப்பிட நில்லாதவனாய் அவ்விடத்தை விட்டுநீங்கி சத்தம் வந்த திசையை நோக்கி விரைந்து செல்லலானான்.

அப்பொழுது இரவு பன்னிரண்டு மணியிருக்கும். அங்கொன்று இங்கொன்றாய் தீவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன. ஓசையெழாதவாறு மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து நடந்துகொண்டிருந்தான். இறுதியில்கனிகள் கூறிய கோட்டைக்கு வந்து சேர்ந்தான். கோட்டைவாயிலில் தீவட்டியொன்று பலமாக எரிந்துகொண்டிருந்தது. கோட்டைவாயில் திறந்திருந்தமையால் எவ்வித கஷ்டமுமின்றி உட்புகுந்தான். உட்புகுந்தவன் அங்குள்ள பொருட்களைத் துருவித் துருவி ஆராய்ந்தான். அப்பொழுது 'விர்'ரென்று பறந்துவந்த ராட்சதப்பறவையொன்று அவனைத் தூக்கிக் கொண்டுசென்றுஒருமேடைபோலிருந்த இடத்தில் விட்டுவிட்டுப் பறந்து சென்றது.

மேடையில்விடப்பட்ட கண்ணன் அம்மேடையைச் சுற்றிக் கண்ணோட்டமிடலானான். அப்பொழுது ராட்சதனொருவன் கையில் தீவட்டியொன்றைத் தூக்கியவண்ணம் வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்ட கண்ணன் மேடையின்கீழிறங்கி ஒளிந்து கொண்டான்.

(தொடரும்)

# 15கோடி ஆண்டுகளுக்கு முன் உயிர் வாழ்ந்த ராட்சத மிருகம்



'டிப்ளோடக்கஸ்' என்கிற மிருகத்தின் எலும்புக்கூடு பிராங்போர்ட்டில் ஸாங்கர் பேர்க் (ஜெர்மனி சமஷ்டிக் குடியரசு) கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பிராணி 20 மீட்டர் நீளம் 5 மீட்டர் உயரமாக இருந்திருக்கவேண்டும்.

இது இவ்வுலகில்15 கோடி ஆண்டுகளுக்கு முன் உயிர் வாழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதன் எலும்புக்கூடு 300 பகுதிகளைக்கொண்டது.

ஐரோப்பாவிலுள்ள 'ஒறிஜினல்' எலும்புக்கூடு இது ஒன்றுதான். இதன் தலை உடலுக்கடுத்தாற்போலஇல்லாமல் ஒரு குதிரைத்தலை அளவுக்கு இருந்திருக்க வேண்டும். இதன்மூளை ஒரு கோழிமுட்டை அளவுதான் இருந்திருக்குமாம்.

அமெரிக்க இயற்கைப் பொருட்காட்சி மியூசியம் இதை 1907-ல்பிராங்போர்ட் மியூசியத்திற்குப் பரிசாக அளித்தது. இந்த எலும்புக்கூடு பாகங்களைச் சரிவரப் பொருத்தி வைக்கவே நிபுணர்கள் பலதடவைகள் தடுமாறியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பெண்களுக்கு மதிப்புக் கொடாத தேசமும் மக்களும் உயர்வை அடைந்ததில்லை'

## எனக் கூறும் சுவாமி விவேகானந்தர் வேதகால மகளிர் திறனையும் கூறுகிறார்



பெண்களாகிய நாங்கள் இன்று இந்த 20-ம் நூற்றாண்டிலே ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு முன்னேறிவிட்டோம். பிரதமராக அமைச்சராக கவர்னராகப் பல பட்டங்களை ஆள்கிறோம், சட்டங்கள் செய்கிறோமென இறுமாப்புக் கொள்கிறோம். வேதகாலப்பெண்களின் நிலையோடு இதை ஒப்பிட்டு நோக்கினோமானால் இது வியப்பிற்குரிய முன்னேற்றமல்ல. சங்ககாலப் பெண்மணிகளாகிய ஔவை, உப்பை, உறுவை முதலானோர்களின் அறிவுத்திறனுக்கு நாம் அருகில் நிற்க முடியுமா?

இடைக்காலத்திலேதான் பெண்கள்நிலை மோசமடைந்தது. அவர்கள் வீட்டுக்குள்ளே அடைத்துவைக்கப் பட்டிருந்தார்கள். அடுப்படியே அவர்கள் இருப்பிடமாகவிருந்தது. வித்தியாதானம் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆண்களுக்குப் பெண்கள் அடிமை என்ற ஒருநிலை உருவாகியது. இந்தநிலை 19-ம்20-ம் நூற்றாண்டில் படிப்படியாக மாறி பெண்கள் சமுதாயத்தில் ஓரளவு முன்னேற்ற நிலை இன்று காணப்படுகிறது. எனினும் இன்னும் நம்நாட்டிலும் உலகின் பல பாகங்களிலும பெண்களின் முன்னேற்றம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலைமாறி பெண்கள் சேவை நலத்தோடு முன்னேறவேண்டும்' அவர்களது உயர்ச்சியில்தான் நாட்டின் உயர்ச்சி தங்கியுள்ளது. இதை சுவாமி விவேகானந்தர் தனது சிஷ்யர் ஒருவருக்கு விளக்கியுள்ளதை இங்கு நோக்குவாம்:-

'வேதாந்த மார்க்கமானது, ஒரே ஆத்மன் எல்லா ஜீவர்களிடத்தும் வியாபித்திருக்கிறான் என்று முறையிடுகிறது. அப்படியிருந்தும் நம்நாட்டிலே ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் மிகுந்த வேறுபாடு காட்டுவதுஎதனாலோவென்று என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆடவர்களாகிய நீங்கள் பெண்கள்பால்எப்பொழுதும் குற்றம் சுமத்துகிறீர்கள். ஆனால்அவர்களுடைய உயர்ச்சிக்காக என்ன செய்திருக்கிறீர்கள்? கடினமான விதிகளினால் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்மிருதி முதலியவற்றைஎழுதி ஆடவர் பெண்களை இயந்திரங்களாக்கிவிட்டார்கள். உலக மாதாவின் தோற்றமாக விளங்குகின்ற பெண்களை உயர்வடையச் செய்தாலன்றி நீங்கள்உயர்வதற்கு வேறு வழி இருக்கிறதென்று எண்ணவேண்டாம்'

எனக்கூறிய சுவாமி விவேகானந்தரை நோக்கி அவர் சிஷ்யர்களில் ஒருவர் 'பெண்கள் பந்தத்துக்கு ஏதுவாயிருக்கிறார்கள். மனிதரைச் சிக்கச் செய்யும் வலையாயிருக்கிறார்கள். தங்களுடைய மாயையினால் ஆடவர்களுடைய ஞானவைராக்கியத்தை மறைத்துவிடுகிறார்கள். இதனாலன்றோ ஞானத்தையும் பக்தியையும் அடைவது அவர்களுக்கு மிக அரியது என்று சாஸ்திரத்தை எழுதிய பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் எனக் கூறினார்.

இதைச் செவிமடுத்த சுவாமி அவரை நோக்கி - பெண்கள் ஞானத்தையும் பக்தியையும் அடைவதற்குத் தகுதியற்றவர்கள் என்று எந்தச் சாஸ்திரத்திலே கண்டாய்? புரோகிதர்கள் வேதங்களை அத்தியயனம் பண்ணுவதற்கு ஏனையசாதிமக்கள் தகுதியற்றவர்களென்று ஒதுக்கித் தள்ளிய இந்த இழிவான காலத்தில் பெண்களுடைய உரிமைகளையும் நீக்கிவிட்டார்கள்

ஆனால் வேதோபநிடத காலங்களிலே மைத்திரேயி, கார்க்கி முதலிய மகத்துவமிக்க பெண்மணிகள், பிரம்மத்தைப் பற்றி வாதிக்கின்ற சாமர்த்தியத்திலே மஹரிஷிகளுக்கு ஒப்பானவர்களாய் இருந்தார்கள். வேதத்திலே வல்லவர்களாகிய ஆயிரம் பிராமணர்கள் கூடியிருந்த பிராசபையிலே கார்க்கிபிரம்மவாதஞ் செய்யும்படியாக ஞவல்கியரைத் துணிவோடு அறைகூவி அழைத்தாள். அத்தகைய பெருந்தகைமை வாய்ந்த பெண்மணிகள் ஆத்மஞானத்துக்கு உரிமை பூண்டு விளங்கினார்கள் ஆதலினால் இக்காலத்தும் அந்த உரிமை ஏன் பெண்களுக்கு இருக்கக்கூடாது. ஒருமுறை நிகழ்ந்தது நிச்சயமாகவே மறுபடியும் நிகழும். சரித்திர நிகழ்ச்சி மீண்டும் நடக்கும் தகைமையது. பெண்களுக்குத் தக்க மரியாதை கொடுக்கின்ற காரணத்தினால் எல்லாத தேசத்துமக்களும் உயர்நிலையடைந்தார்கள். பெண்களுக்கு மதிப்புக் கொடாத தேசமும் மக்களும் ஒருபொழுதும் உயர்வை அடைந்ததில்லை. இனிமேல் அடையப்போவதும் இல்லை. சக்தியின் உயிருள்ள வடிவங்களாகிய பெண்களுக்கு மதிப்புக கொடுககாத பிரதான காரணத்தினாலே உங்களது சாதியார் மிகவும் இழிவடைந்துள்ளார்கள். எவ்விடத்தில் பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ அவ்விடத்தில் தேவர்களும்உவகை அடைகிறார்கள். எவ்விடத்தில் மதிக்கப்படவில்லையோ அவ்விடத்தில் எல்லாக் கருமங்களும் முயற்சிகளும் வீண்போகின்றன என்று மனுசொல்கிறார். எந்தக குடும்பத்தில் அல்லது நாட்டில் பெண்களுக்கு மதிப்பில்லையோ, எங்கே அவர்கள் மனத் துயரத்தோடு வாழ்கிறார்களோ அங்கு உயர்வெய்துவதற்கு வழியில்லையாகும். ஆதலினாலே முன்னர் அவர்களை உயர்த்தவேண்டும். என எடுத்தியம்பினர்.

சுவாமி விவேகானந்தரின் கூற்றிலிருந்து நாம் நல்லறிவு படைத்தவர்களாக வாழவேண்டும் பெண்கள் சமுதாயம் களங்கமற்ற உயர்த்தப்பட்ட ஒரு சமுதாயமாகத் திகழவேண்டும். அப்பொழுதுதான் அவர்களைக்கொண்ட நாடும் வீடும் சிறப்பாயமையும் என்பது தெளிவாகிறது. நம்மிடமுள்ள தன்னம்பிக்கை நமக்கு மிகப்பெரிய உதவியாகும். தன்னம்பிக்கையை விரிவாகப் பயின்று செயலாற்றுவதனாலே நம்மிடமிருந்து தீங்கு. துயரம் இவற்றில் பெரும்பகுதி மறைந்துவிடும் என்பது மிகஉறுதி.




தயாரிப்பு:

குணம்

---

சமையல்

### பம்பாய் லட்டு

தேவையான பொருட்கள்;

கடலைப்பருப்பு-1 ருத்தல்
பாசிப்பருப்பு - 1 ,,
ஜிலேபி
பருப்பு - 1 ,,
நெய் - 1/4 போத்தல்
சர்க்கரை - 1 ருத்தல்
அல்லதுசீனி 1 ருத்.

செய்முறை

பருப்புகளைத் தனித்தனியே ஊறவைத்து ஆட்டுக்கல்லில் அரைகுறையாக அரைத்தெடுத்து வாணலியில் சிறிது நெய்விட்டு தனித்தனியே வறுத்து எடுத்துக்கொள்ளவும். சர்க்கரையைப் பாகுகாய்ச்சிக்கொண்டு வறுத்த பருப்புகளைப் போட்டு நன்றாகக் கிளறி இறக்கி ஆறியதும் லட்டுகளாக உருட்டிக்கொள்ளவும்.

### ரவா தேன்குழல்

தேவையான பொருட்கள்

ரவை - 1 ருத்தல்
உப்பு - வேண்டிய அளவு
தேங்காய் - 1 பாதி
சீரகம் - 2 தேக்கரண்டி
மிளகு - 1 தேக்கரண்டி
தேங்காய்
எண்ணெய் - வேண்டிய அளவு

செய்முறை

1 1/2 கோப்பை நீரை ஒரு பாத்திரத்தில் கொதிக்கவைத்து அதில் ரவை, தேங்காய்த்துருவல், உப்பைப்போட்டு கிளறி இறக்கவும். மிளகு சீரகத்தைப்பொடிசெய்து போட்டு மாவை நன்றாகப் பிசைந்துகொண்ட பின் தேன்குழல்அச்சில் பிழிந்து எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

---

# மனைவியர் வேலைக்கு சென்றால் குடும்ப நிர்வாகம் குலையும்

இன்றைய பொருளாதார நிலையில் ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் அதாவது கணவனும் மனைவியும் வேலைபார்த்தால்தான் குடும்பச் செலவு கட்டுபடியாகிறது. சந்தோஷத்துக்கு பணம் முட்டுக்கட்டையாக விளங்குகிறது. தாராளமாகப் பணமிருந்துவிட்டால் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழலாம் என்று நினைக்கிறார்கள் அதை நடைமுறையிலும் செய்து வருகிறார்கள். ஆனால் பரிதாபம்- பணத்தின் மூலம் அமைதியைத்தேட முனைந்து அவதியுறுவதுதான்அவர்கள் கண்ட முடிவாகிவிடுகிறது.

இன்றைய வாலிபர்கள் படித்தபெண்ணை திருமணம் செய்துகொண்டால் அவள் உத்தியோகம் பார்ப்பாள். இருவருடைய ஊதியமும் குடும்பச்செலவுக்குப் போதியதாயிருக்கும். எனவே பணக்கஷ்டமில்லாமல்மகிழ்ச்சியோடு வாழலாம் என்று நினைத்து படித்தபெண்ணைத் திருமணம் செய்துகொள்வதுடன் அவளை உத்தியோகம் பார்க்கும்படியும் வற்புறுத்துகிறான். மனைவிக்கு விருப்பமில்லாவிட்டாலும் கணவனுடைய உழைப்புப் போதாமையாலும் கணவனுக்கு கீழ்ப்படிகிறதன்மையைக் கடைப்பிடித்தும் உத்தியோகம் பார்க்கச் செல்கிறாள்.

மனைவி உத்தியோகம் பார்க்கச் செல்வதினால் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகள் மட்டுமல்ல கணவன் மனைவி இருவருமேதான்.

இயற்கை பெண்ணைமெல்லிய தன்மையுடையவளாகப்படைத்துள்ளது. அவள் வீட்டிலேயே இருந்து கணவனையும், குழந்தைகளையும் பராமரிக்கவேண்டிய நிலையில்-வெளியில் சென்று உத்தியோகம் பார்ப்பதென்றால் முடிந்த காரியமா? களைத்து வீட்டுக்குத் திரும்பும் கணவனை உபசரிக்க மனைவியில்லை. அவளும் கணவனைப் போல் உத்தியோகம் பார்த்துவிட்டு வந்து களைப்புற்று நிற்கும்காட்சி கணவனைப்பரிதாபத்துக் குள்ளாக்குகிறது. மனைவி படும் வேதனையைப் பார்த்துக் கணவன் ஒரு வேலைக்காரனை அமர்த்துகிறான். அவனுக்கு மாதம் 50 ரூபா சம்பளம். அத்தோடு சாப்பாடு, உடுப்பு.

காரியாலயத்திலோ வேலை நெருக்கடி. காரியாலதத்துக்கு 5 நிமிடம் பிந்திச்சென்றாலும் மேலிடத்தில் குறை கேட்க நேரிடும். இந்த நிலையில் குழந்தைகளின் சாப்பாட்டையோ படிப்பையோ கவனித்து அவர்களின் [illegible] [illegible] மகிழ்ந்தி[illegible] [illegible] ரன் சுவையற்று அதேவேளையில் சிக்கனமில்லாமல் அதிக நட்டத்தை ஏற்படுத்திச் சமைத்துவைக்கும் சாப்பாட்டை அரை வயிற்றில் நிரப்பிக்கொண்டு எத்தனை நாள் வாழமுடியும்.

அதுவுமல்லாமல் பின்பும் குழந்தைகளைப் பராமரிக்க புதிதாக ஓர் ஆயாவை நியமித்தும், குழந்தைகளின் படிப்பைக்கவனிக்க ரியூஷன்கள் வைத்தும் மனைவியின் உழைப்புக்கு அதிகமாக இப்படியானசெலவுகளில் பணம் விரயமாவதிலும் பார்க்க மனைவி உத்தியோகம் பார்க்காமல் வீட்டில் இருப்பது எவ்வளவோமேல். படித்த பெண்ணாயிற்றே உத்தியோகம் பார்க்காமலிருக்கலாமா என்று கவலையுறவேண்டாம். மனைவி படித்துஉத்தியோகம்பார்க்க அல்ல. குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவும், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கவும், கணவனுக்குத் தக்கசமயத்தில் உடந்தையாக இருந்து நல்லயோசனைகளைச் சொல்லிக்கொடுப்பதற்குமேயாகும். மனைவியானவள் கணவனுக்கு ஆலோசனை கூறுவதில் மந்திரியாகவும் அமுதுபடைப்பதில் அன்னையாகவும் ஆபத்து நேரத்தில் உற்ற நண்பனாகவும் இருப்பதே அவள் உண்மையாகப் படித்ததன் இலட்சியமாகும். [illegible] மணமான பெண்கள் உத்தியோகம் பார்க்க விரும்புவது விரும்பத்தக்கதல்ல.

— விமலா —

---

## தெட்சணாமூர்த்தி

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

நடித்தார்கள். இது பற்றி தங்கள் அபிப்பிராயம்.

ப; நாம் இக்கலையைக் கற்பதற்கு எவ்வளவு முயற்சிகளை எடுத்தோமோ அவர்களும் நாதஸ்வர தவில் வித்துவான்களாக நடிப்பதற்கு அத்தகைய முயற்சிகளைச் செய்து தத்ரூபமாக நடித்தார்கள்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

இங்கும் பார்வையை படர விட்டபடி நடந்து வந்து, பிள்ளையார் வாசலின்முன்னுலுள்ள கேணிக்கட்டில் அமர்ந்து கொண்டார். மத்தியான உணவு பற்றிய சிந்தனை மீண்டும் அவருள்ளத்தில் தலை தூக்கியது.

'இப்ப செல்லையா மடத்துக்குப் போகலாம்தான்...' என எண்ணிய மறுகணமே மனதை மாற்றிக் கொண்டார். மனித மனமல்லவா காலத்துக்குக் காலம் கணத்துக்குக் கணம் அது மாறிக் கொண்டுதானே இருக்கும்.

''வேண்டாம்... ஒரு பன்னிரண்டு மணிக்குக் கொஞ்சம் முன்பின்னுகப் போவம் அவளோடை காலமையும் கதைச்சனுன்தானே! அதிலை போய் தங்கச்சியெண்டால் வடிவாகக் கவனிப்பாள்' என்று யோசிக்கும்போது ஒரு கிழவனும் கேணிக்கட்டில் வந்து குந்தினுன்.

'ஐயா... நேரம் என்னவோ?' எதற்கோ அவசரப்பட்ட கிழவன்தான் நேரத்தை அறியத் துடித்தான்.

'பதினெரு மணி' வேண்டா வெறுப்பாக நேரத்தைச் சொன்ன கந்தசாமி முகத்தை மறுபக்கம் திருப்பினுர். அங்கே பிச்சைக்காரக் குருடனெருவன் நின்று கொண்டிருந்தான்.

கிழவன் கந்தசாமியுடன் கதைக்க ஆரம்பித்தான். 'இன்னும் ஒருமணித்தியாலம் கிடக்கு. மடங்களில் பன்னிரண்டு மணிக்குத்தானே அன்னதானம் குடுப்பினம், என்னய்யா...?

கந்தசாமி ஒன்றும் பேசவில்லை.

பணக்காரர்களோடும் பெரியவர்களோடும் எடுத்த எடுப்பிலேயே சிநேகம் வைத்துக்கொள்ள முயலும் கந்தசாமிக்கு ஏழை எளியவர்களென்ருல் பிடிக்கவே பிடிக்காது. அதனுல்தான் அந்தக் கிழவனுடனும் அவர் ஒன்றும் கதைக்க விரும்பவில்லைப்போலும்

பிச்சைக்காரரை விடக் கேவலமான நிலைக்குத்தான் தள்ளப்பட்டு விட்டதைப் பற்றி கந்தசாமி சிந்தித்ததேயில்லை.

கிழவன் மீண்டும் கதைக்க ஆரம்பித்தான். 'ஐயா வெள்ளிக்கிழமையிலும் திருவிழா நேரத்திலேயும் சோறு குடுக்கிறமாதிரி ஒவ்வொரு நாளும் குடுத்தினமெண்டால் எவ்வளவு நல்லாயிருக்கும்... சும்மா வெள்ளிக்கிழமை வேளையிலே மட்டும் அவிச்சுக் கொட்டுகிறதாலை ஒரு புண்ணியமுமில்லை. வேண்டாம் வேண்டாமெண்ண சொல்லவும்சோத்தைக் கொண்டுவந்து கொட்டுவினம். எவ்வளவு சோறு இண்டைக்கு மண்ணுகப் போகும்... சட்டிபானையளோடைகிடந்துசிந்திச்சீரழியும். எல்லாரும் ஒண்டுமண்டடியாக் கொண்டு வந்து கொடாமல்ஒவ்வொருநாளும் ஒவ்வொருத்தர் வந்து அன்னதானம் குடுத்தினமெண்டால் எவ்வளவு நல்லாயிருக்கும். என்னைப்போலை ஏழை எளியதுகளும் வயிருரத் தின்னுங்கள்' எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து அறிந்தவன்போல அந்தக் கிழவன் பேசிப் பயனென்ன. அன்னதானம் கொடுப்பவர்களல்லவா அதை உணர்ந்து நடக்கவேண்டும்.

எவ்வளவோ கதைத்தும் கந்தசாமி ஒன்றுமே சொல்லாதபோதும் கிழவன் விடுவதாக இல்லை.

''ஐயா... இந்தக் கோவில்களிலே வெடியள், வாணங்கள், சின்னமேளம் பெரிய மேளம், சிகரம், சப்பறம் எண்டு சிலவழிக்கிறகாசெல்லாத்தையும் வறுமைப்பட்டதுகளுக்குக் குடுத்தால் அதுகள் வயிறு நிறையச் சாப்பிடுங்கள்''- சாப்பாட்டைப்பற்றியும் ஏழைகளைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்தான் கிழவன்.

## சிறுகதை

சாப்பாட்டைப்பற்றி கந்தசாமியின் வாய் பேசாவிட்டாலும் உள்ளம் அதைப்பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தது.

மனிதர்களாகிய எல்லோருக்கும் ஆசையிருக்கிறது. சில நேரத்தில் சில பொருட்களின்மேல் நல்ல நாட்டம் ஏற்படுகிறது. கிழவனைப் போல சிலர் வெளிப்படையாகப் பேசுவார்கள். கந்தசாமியைப் போன்றவர்கள் கௌரவத்துக்குப் பயந்து ஆசைகளையெல்லாம் மனதுக்குள்ளேயேமறைத்துவைத்திருப்பார்கள்.

கேணியின் முன்னுல்நின்ற குருட்டுப் பிச்சைக்காரனை சிறுவனெருவன் மோதி விழுத்திவிட்டான். அவன் வேறுயாருமல்ல - தாயுடன் கூட இன்று தீர்த்தம் வாங்கிப் பருகிய அந்தச்சிறுவன் தான்! பலூன்காரன்ஒருவன் அவனைக் கலைத்துக் கொண்டோடிவரும்போதுகுருடனை மோதி விழுத்திவிட்டு, ''மாமா அடிக்கவாருன்'' என்று கந்தசாமியின் பின்னுல் ஓடி ஒளித்துக்கொண்டான். சிறுவனின் கையில் தாராவைப்போன்ற பலூன் ஒன்றிருந்தது.

சிறுவனை கந்தசாமி தன் கைகளில் பிடித்துக்கொண்டு கலைத்து வந்த பலூன்காரனிடம், ''என்னநடந்தது?'' என்று அதிகாரதோரணையில் கேட்டார்.

பலூன்காரன் குழைந்த வண்ணம், ''ஐயா...இந்தப் பொடியன் என்னட்டையிருந்த தாராபலூனைஅறுத்துக்கொண்டோடி வந்திடுத்து. அது இருவத்தைஞ்சியாம் விக்கிற பலூன் ஐய்யா...'' என்ருன். கோபத்துடன் சிறுவனைக்கலைத்துக் கொண்டுவந்தபலூன்காரன் குழைந்து நின்றதற்குக் காரணம்-எப்படியாவது கந்தசாமியிடமிருந்து இருபத்தைந்துசதம் வாங்கவேண்டுமென்பதற்கே!

கந்தசாமி இருபத்தைந்து சதம் கொடுத்து பலூன் வாங்கிக்கொடுப்பதற்கு எங்கே போவார்?-

''தம்பி! அந்த பலூன் வேண்டாம். அதைக்குடுத்திடுங்கோ'' கந்தசாமியின் வேண்டுகோளுக்கு சிறுவன் பணியவில்லை.

''நான் மாட்டன். எனக்கு இந்த பலூன்தான்வேணும். அம்மாவிட்டைக் கேட்டனுன். அவவேண்டித்தரமாட்டன் எண்டு சொன்னவ. நீங்க வேண்டித் தாங்கோ மாமா''-சிறுவன் கெஞ்சினுன்.

சிறுவனின் கெஞ்சுதல் அழுகையாகமாற கந்தசாமி பலூனைப் பறித்து பலூன்காரனிடம்கொடுத்துவிட்டு பின்வருமாறு சொன்னுர்: ''தம்பி அம்மாவிடம் சொல்லி உங்களுக்கு பெரிய தாராபலூன் வாங்கித் தாறன். இதுக்கெல்லாம் அழக்கூடாது. நீங்கள் நல்ல பிள்ளையெல்லா...! ஏன் அந்த பலூனை அறுத்துக் கொண்டு வந்தனீங்கள்? களவெடுக்கிறது மற்ற ஆக்களெட்டையிருக்கிற சாமானைப் பறிக்கிறது கூடாத பழக்கம். இனிமேல்அப்பிடிச் செய்யக்கூடாது. அழாதையுங்கோ.''

அழுகைக்கிடையே, ''அம்மாவிட்டை கேட்டனுன். அவ வேண்டித்தரமாட்டன் எண்டு சொன்னவ. அதுதான் [illegible]தனுன். அவன் அடிக்கவர நான் ஓடியந்தனுன்'' என்ருன் சிறுவன்.

இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த கிழவன் சொன்னுன்: 'ஐயா அந்தப் பிள்ளைக்கு ஒரு பலூன் வாங்கிக் குடுங்கோ. அது அழாது. குழந்தைப்பிள்ளையள்பலூனையும்இனிப்பையும் கண்டால் ஆசைப்படுங்கள். நாங்களும் அந்தப்பருவத்திலை அப்பிடித்தானே இருந்திருப்பம். அதுகள் ஆசைப்படுகிறதை வேண்டிக்குடுத்தால் குழந்தைகள் களவெடுக்காது; பொய்சொல்லாது-சின்னப்பிள்ளையள் ஏதும் கேட்க வேண்டிக் குடுக்கா விட்டால்தான் - தாங்கள் விரும்பினபொருளைக்களவெடுக்கத் துணிகின்றன பிறகு அந்தப்பொருளைக்கண்டிட்டு தாய்தகப்பன் 'எங்கை எடுத்தனி? எப்படி வந்தது?' எண்டு வெருட்டினுல் குழந்தையள் பொய் சொல்லுங்கள்

கந்தசாமி தனக்கு வந்த கோபத்தை கிழவன்மீது காட்டமுடியாமல் தவித்தார். அந்த பலூனை எப்படியாவது விற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில்கேணிப் பக்கத்தில் இன்னமும் வட்டமிட்டுக்கொண்டிருந்தான், பலூன்காரன்.

''மாமா... ஒரு பலூன்... நான் பிறகு கேக்கயில்லை'' சிறுவன் மீண்டும் கெஞ்சினுன்.

''பலூனே வேண்டும்... நல்லஉதைதான் தரவேணும் இனி பலூன் எண்டு கேட்டால்...'' பல்லைக்கடித்து, கிழவன்மீகி வந்த கோபத்தைச் சிறுவன்மீது தீர்த்துக் கொண்டார் கந்தசாமி.

கிழவன் வேட்டியில் செருகிவைத்திருந்த கடுதாசிச் சரையை எடுத்து விரித்தபோது, கந்தசாமி நன்ருக உற்றுப் பார்த்தார். கடுதாசிச்சரையினுள் சில்லறைக் காசுகளோடு இரண்டு பத்துரூபா நோட்டுகளும் இருந்ததைக் கவனிக்கத் தவறவில்லை, கந்தசாமியின் கண்கள்.

அவர் ஒரு நிமிடம் யோசிப்பதற்குள்-

இருபத்தைந்து சதக்குத்தியொன்றை சிறுவனிடம் கொடுத்தான் கிழவன். உடனே காசு கைமாறியது. சிறுவன் தாரா பலூனை வாங்கிவிட்டான்.

கந்தசாமிக்கு என்னசொல்வதென்றே தெரியவில்லை. ஆனுல் கதைகாரக்கிழவன் மீண்டும் கதைத்தான்.

''குழந்தைப்பிள்ளையள் இருக்கிறபக்கமாக வலூன்காரரும் முட்டாசுக்காரரும் வரக்கூடாதெண்டு ஒரு சட்டம் வைக்கவேணுமய்யா... குழந்தைப்பிள்ளையள் கண்டால் ''அதைவேண்டித்தா, இதைவேண்டித்தா'' எண்டு கரைச்சல்படுத்துங்கள் தான். எல்லாத் தகப்பனுக்கும் வாங்கிக் குடுக்க வசதியிருக்குமோ? வேண்டிக்குடுக்காமல் குழந்தையளைக் கோவிச்சால் கோவிலுக்கு வந்து கும்பிட்டபலன் போச்சுதே!''

''எல்லாத் தாய் தகப்பனுக்கும்வாங்கிக்குடுக்கவசதியிருக்குமோ'' - கிழவன் சொன்னது செவிகளில் எதிரொலித்து கந்தசாமியை மனம் நோகவைத்தது. ''யாரோ பெற்றபிள்ளையோடுஉறவுமுறை கொண்டாடப்போய் - கிழவன்கூட தன்னைக் குத்திக்காட்டுகிறேனே!'

தாரா பலூனை வைத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சி, கிழவனின் உள்ளத்திலும் பிரதிபலித்தது.

'தம்பி, இது நல்ல பலூன் என்ன உடையாமல்வைச்சு விளையாட வேண்டும் இனிமேல் பலூன் வேண்டித்தரச் சொல்லி கரைச்சல்படுத்தக் கூடாது' யாரோ பெற்ற [illegible] சொன்னுன் கிழவன்.

மகனைத் தேடிக்கொண்டு வந்ததாயும் கேணியடிக்கு வந்து சேர்ந்தாள். கந்தசாமியை நோக்கி மெல்லிய சிரிப்பொன்றை உதிர்த்தவள் மகனைப் பார்த்ததும் முகத்தில் சிறிது கோபத்தை வரவழைத்துக் கொண்டே கேட்டாள். 'சுகுமார் உனக்கு இந்த பலூன் எங்கே கிடைத்தது.

பதில் சொல்லப் பயந்த சுகுமாரன் கிழவனைப் பார்த்து கையைக் காட்டினுன்.

'அது நான்தான் வாங்கிக் குடுத்தனுன் அம்மா...' கிழவன் சொல்லியதும் தாயைப் பார்த்த சுகுமாரனுக்குத் துணிவு வந்துவிட்டது.

'இந்த மாமாவட்டைக் கேட்டனுன். அவர் வேண்டித்தரமாட்டன் எண்டு சொன்னவர் உடனே இந்த அப்பா வேண்டித்தந்தவா' என்ருன் சுகுமாரன்.

தாய் குழந்தையைத் தடவி விட்டு 'அப்படியெல்லாய் வாங்கக்கூடாது ராசா. இந்தாங்கோ... இந்த இருபத்தைந்து சதத்தை அந்த அப்பாவட்டைக் குடுங்கோ' என்று சொல்லிமுடிக்கவில்லை

'அம்மா எனக்குக் காசு வேண்டாம்' குழந்தை ஆசைப்பட்டுது. வாங்கிக் குடுத்தனுன். நானும் பிள்ளை குட்டிக்காரன். எங்கடை பிள்ளையளும் எங்கையெங்கே என்னத்திற்கு அந்தரிக்குதுகளோ— அதுகளுக்கும் ஆரும் உதவி செய்ய வேணும்' காசை வாங்க மறுத்தான் கிழவன்.

'பரவாயில்லை என்று சொல்லி நன்றிப்பார்வையோடு காசைக் கொடுத்த பின்பு சொன்னுள். 'நல்ல வேளையப்பா... நான் சமையலிலை இருந்தாற்போலை பிள்ளையைக் கவனிக்கவே இல்லை சமைச்சப்பிறகு பார்த்தால் காணயில்லை.... ம்...முருகன்தான்'

'அம்மா... சனசந்தடியுள்ள இடங்களுக்குச் சின்னஞ்சிறுசுகளைக் கூட்டிக் கொண்டு போனுல் நீங்கள்தான் கவனிக்க வேணும். பிராக்கு கண்ட இடத்திலை பிள்ளையள் நிண்டிடும்' கிழவன் சொல்லிவிட்டு, சாப்பிடப் போவதற்காக வேட்டியை இறுக்கிக் கட்டினுன்.

'அப்பா! செல்லையா மடத்திலை நாங்கள்தான் அன்னதானம் குடுக்கிறம். நீங்கள் வாருங்கோ...' என்று சொன்னவள் கந்தசாமியையும் பார்த்து 'அண்ணை நீங்களும் வாருங்கோ' என்று அழைப்பு விடுத்தாள்.

அழைப்பை ஏற்ற கந்தசாமியும் கிழவனும் தாயையும் மகனும் பின் தொடர்ந்து செல்லையா மடத்தினுள் புகுந்தனர்.

எதிர்பாராதவிதமாக பந்தியிலும் கந்தசாமிக்குப் பக்கத்திலேயே குந்திக்கொண்டான் கிழவன். சோறும் கறிகளும் பரிமாறப்பட்டது.

''அய்யா ... ... பார்த்திங்களே! பூசனிக்காய் புடலங்காய் எண்டு ஏழெட்டுக் கறி போடுற காசுக்கு, கோவா பீற்றூட் எண்டு ரெண்டு மூன்று நல்ல கறியள் போட்டாலும் காணும்...'' கிழவன் சொல்லி முடிப்பதற்குள் -

'சும்மா சத்தம் போடாமல் சாப்பிடு' - கந்தசாமியின் குரலில் கண்டிப்பு நிறைந்திருந்தது. கிழவனிடமிருந்த இருபது ரூபா தான் அவன்மீது கந்தசாமிக்குப் பொறுமையை ஏற்படுத்தியது.

மனிதனின் ஆசைக்கு எல்லையில்லை, ஒருபொருளை அடையவேண்டுமென்றுதுடியாய்த் துடிக்கிருன்: படாத பாடுபடுகிருன். அந்தப் பொருளை அடைந்தபின் இன்னெரு பொருள்மீது ஆசை வைக்கிருன் மத்தியான உணவுப்பிரச்னைமுடிந்ததும் பணப்பிரச்னை எழுகிறது. கிழவனின் பணத்தை எப்படியாவது கவர்ந்துவிட வேண்டுமென்ற கெட்ட சிந்தனையுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த கந்தசாமி இலையிலிருந்த சோற்றை முடிக்குமுன் - கிழவன் எழுந்துவிட்டான்.

கிழவனின் மடியிலிருந்த கடுதாசிச்சரை கீழே விழுந்ததை ஒருவருமே கவனிக்கவில்லை - கந்தசாமியைத் தவிர.

'அவங்க எழும்பினுலும் பரவாயில்லை. நீங்க ஆறுதலாகச் சாப்பிடுங்கோ'' சுகுமாரனின் தாய் கந்தசாமிக்குச் சொன்னுள்.

கையைக் கழுவிவிட்டு, காசைத் தேடிக்கொண்டு வந்த கிழவன் கண்டகாட்சி-

-''கந்தசாமி கிழவனின் கடுதாசிச் சரையை காலால் இழுத்து, கைகளுக்கு மாற்றி அதிலிருந்த இரண்டு பத்து ரூபா நோட்டுகளை எடுத்துக் கொண்டு, சரையை அப்படியே நழுவவிட்டார்''-

''அய்யா... உங்களுக்குக் காசு தேவையெண்டு கேட்டிருந்தால் நானே தந்திருப்பேன். 'களவெடுக்கிறது கூடாத பழக்க'மெண்டு அந்தக் குழந்தைக்குச் சொன்ன நீங்களே களவெடுத்திட்டியள்-பரவாயில்லை...'' சொன்னதும் சொல்லாததுமாக மடத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தான் கிழவன்.

கந்தசாமியின் முகம் அவமானத்தால் வெளுத்தது. நிலத்தில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் கிழவனின் கடுதாசிச் சரையைப் பார்க்கிருர். சில்லறைக்காசுகளைச் சுற்றியிருந்த கடதாசியில் அச்சிட்டிருந்த, ''மற்றவரை மன்னிக்கும்போது மனிதன் தெய்வமாகிருன். மன்னிக்காதவன் மனிதனுகவே இருக்கிருன்'' என்ற மணிமொழியைத் தவிர மற்ற எழுத்துக்களை கந்தசாமியால் வாசிக்க முடியவில்லை.

(யாவும் சிந்தனையே)


''லேடன்'' LEYDEN

தயாரிப்புகள்

★ பெனியன்

★ ஸ்போட் சேட்

★ ரி சேட்

★ ரெறி சேட்

★ ரெறி பிளவுஸ்

★ பேபி வெஸ்ட்

★ கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 330


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### லெனின் நூற்றாண்டை நோக்கி . . .

# மரணப் படுக்கையில் மாவீரன் லெனின் கேட்டு ரசித்த கதை

[விலாதிமிர் இலிமிச் லெனின் துணைவியார் நதாஷா குருப்கயா எழுதியுள்ள லெனின் நினைவுகள் என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை]

நதாஷா குருப்கயா

"லெனின் பெரிய அறிவாளி. அவர் பாண்டித்தியம் நிறைந்த புத்தகங்கள் தவிர வேறு எதையும் படிக்கமாட்டார். அவர் வாழ்நாளில் ஒரு நாவல் கூடப் படித்ததில்லை. கவிதையைத் தொட்டதுகூடக் கிடையாது" என்று லெனினை எனக்கு முதலில் அறிமுகப் படுத்திய தோழர் என்னிடம் சொன்னார். நான் திகைத்துப்போனேன். என் இளமைப் பருவத்தில் நான் இலக்கியங்கள் அனைத்தையும் படித்து இருந்தேன். லெர்மந்தோவ் கவிதைகளில் ஏறக்குறைய எல்லாமும், இதர கவிஞர்களின் படைப்புகளும் எனக்கு மனப்பாடம். செர்னிஷெவ்ஸ்கி, லியோடால்ஸ்டாய், உஸ்பென்ஸ்சி ஆகியோரின் நூல்கள் என் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்தன. இவற்றிலெல்லாம் சிறிதளவு கூட அக்கறைகாட்டாத ஒரு மனிதர் இதோ இருக்கிறார் என்ற விஷயம் எனக்கு விசித்திரமாகத் தோன்றியது.

அவருடன் நான் பணியாற்றும்போது அவரைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. மக்களைப்பற்றி அவர் கொண்ட தவிப்புகளை நான் தெரிந்து கொண்டேன். மக்களிடமும் வாழ்க்கையிலும் அவர் காட்டிய ஆர்வம் நிறைந்த அக்கறையை நான் கவனித்தேன். மனிதர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைக் கூறும் புத்தகங்களை ஒரு வேளை ஒரு தடவைக்கும் மேலாகப் படித்தார்; படித்திருந்தார். நான் என்னோடு புஷ்கின், லெர்மந்தோவ், நெக்ரஸோவ் படைப்புகளைச் சைபீரியாவுக்கு எடுத்துவந்திருந்தேன். லெனின் அவற்றைத் போதும் கையில் எடுக்காத மனிதர் என்று என் மனதில் தோன்றியிருந்த கற்பனையை லெனின் அகற்றிவிட்டார்.

**படித்திருந்தார்**

ஆனாலும், அந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விஷயம்பற்றிப் பேச எங்களுக்கு ஏனோ வாய்ப்பும் நேரமும் கிடைக்கவில்லை. பிறகு சைபீரியாவில் நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் படித்திருந்ததுபோலவே லெனினும் இலக்கியங்களைப் படித்திருந்தார். ஒரு தரம் படித்தது மட்டுமல்ல; துர்க தமது படுக்கை அருகில் ஹெகல் நூலோடு சேர்த்து வைத்தார். மாலை நேரங்களில் அவர் அவற்றைத் திரும்பத் திரும்பப் படித்தார். அவர் அனைத்திலும் அதிகமாகப் புஷ்கினை விரும்பினார் ஆனால் உருவத்தை மட்டும்தான் அவர் பாராட்டினார் என்பதில்லை. உதாரணமாக, செர்லிஷெவ்ஸ்கியின் "என்ன செய்யப்பட வேண்டும்" என்கிற நாவலை அது கலைத்தன்மை குறைந்து சாதாரண உருவம் பெற்றிருந்த போதிலும், அவர் விரும்பினார். அவர் இந்த நாவலை எவ்வளவு கவனத்தோடு வாசித்தார், அதில் கண்ட நேர்த்தியான விவரங்களைக் குறித்துக்கொண்டார் என்பதைக் கண்டு நான் வியப்படைந்தேன். செர்லிஷெவ்ஸ்கி சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றையும் அவர் நேசித்தார். அவருடைய சைபீரி ஆல்பத்தில் இந்த எழுத்தாளரின் சிறு அளவுப் படங்கள் இரண்டு இருந்தன. அவற்றில் ஒன்றில், அந்த எழுத்தாளரின் பிறப்பு, இறப்பு ஆண்டுகளை லெனின் தம் கைப்பட எழுதியிருந்தார். அந்த ஆல்பத்தில் பிரெஞ்சு எழுத்தாளர் எமிலி ஜோலா படமும், ரஷ்ய எழுத்தாளர்கள் ஹெர்ஜென், பிஸாரவ் படங்களும் இருந்தன. ஒரு சமயம் லெனின் பிஸாரவ்வின் எழுத்துக்களை அதிகம் படித்து அவரை நேசித்தார். சைபீரியாவில் அவர் கத்தேயன் "ஃபாஸ்ட்" டை ஜெர்மன் மொழியிலும் ஹீன் கவிதைகளின் தொகுதி ஒன்றையும் படித்தார் என்பது எனக்கு நினைவிருக்கிறது.

**கடைசிமாதங்கள்**

லெனின் வாழ்வின்கடைசி மாதங்கள், அவர் வேண்டுகோளின்படி, நான் கற்பனைக்கதைகளை அவருக்கு வாசிப்பேன். வழக்கமாக இது மாலைப்பொழுதில்தான் நிகழும். ஷெட்ரின் கதைகளையும், கார்க்கியின் "எனது பல்கலைக்கழகங்கள்" புத்தகத்தையும் நான் வாசித்தேன். இவை போக, கவிதையை, விசேஷமாக, தெம்யன் பெத்னியின் கவிதைகளை, கேட்க அவர் ஆசைப்பட்டார். ஆனால், [illegible] கவிதைகளைவிட வீரகாவியங்களையே அவர் பெரிதும் விரும்பினார்.

நான் அவருக்குஒருகவிதையைப் படித்துக் காட்டுகிறேன். அவர் சிந்தனை வயப்பட்டு, யன்னல் வழியாக, அஸ்தமன சூரியனை உற்று நோக்குகிறார். "ஒருபோதும் கம்யூனர்கள் அடிமைகள் ஆகமாட்டார்கள்" என்ற சொற்களோடுமுடியும் ஒரு கவிதை எனக்கு நினைவிருக்கிறது.

ஒரு சபதத்தை மீண்டும் லெனினிடம் கூறுவதுபோல் அதை நான் வாசித்தேன். "புரட்சியின் ஒரு சிறு ஆதாயத்தைகூட நாம் ஒருகாலும் விட்டுக்கொடுக்க மாட்டோம்..."

அவரது மரணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், சாயங்காலத்தில், ஜாக் லண்டன் கதைஒன்றைநான் அவருக்கு வாசித்துக்கொண்டிருந்தேன். "உயிராசை" என்கிற அந்தக் கதை இன்னும் அவர் அறையில் உள்ள மேசை மீது கிடக்கிறது. அது மிகச்சக்தி வாய்ந்த படைப்பு. பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் நோயாளி ஒருவன் மனிதச் சுவடுபட்டிராத பனிப்பாலையைத் தன்னந்தனியாகக் கடக்கிறான்; ஒரு மகாநதியில் உள்ள துறைமுகத்துக்கு அவன் போய்ச்சேரவேண்டும். அவன் சோர்ந்துவிடுகிறான்; அவனால் நடக்கமுடியவில்லை. ஊர்ந்துசெல்கிறான். அவனுக்குப் பக்கத்திலேயே ஒரு ஓநாயும் ஊர்ந்து ஊர்ந்து செல்கிறது. அதுவும்பசியினால் செத்துக்கொண்டிருக்கிறது. முடிவில், இந்தப் போராட்டத்தில் மனிதன் வென்றுவிடுகிறான். பாதிச் சாவும் பாதி வெறியுமான நிலையில் அவன் உரிய இடத்தை அடைகிறான். லெனின் இந்தக்கதையை மிகவும் அதிகமாக விரும்பினார். ஜாக் லண்டன் கதைகளை மேலும் வாசிக்கும்படி அவர் மறுநாள் என்னைக் கேட்டுக்கொண்டார். ஆனால் ஜாக் லண்டன் எழுத்தில் வலுவுள்ள விஷயங்கள் நிரம்பவும் இளைத்துப் போன விஷயங்களோடு கலந்தே காணப்படும். அடுத்த கதை முற்றிலும் மாறுபட்ட ரகத்தைச்சேர்ந்ததாக அமைந்துவிட்டது. பூர்ஷ்வா தர்ம நியாயத்தில் முற்ற முழுக்கஆழ்ந்தகதை: கப்பல் தலைவன் ஒருவன். அவன் கப்பல் நிறைய தானியம் ஏற்றப்பட்டிருந்தது. அதை லாபத்தோடு விற்றுவிடுவதாக அவன் அந்தக்கப்பலின் சொந்தக்காரனுக்கு வாக்குறுதி அளிக்கிறான் தன் வார்த்தையைக் காப்பாற்றுவதற்காகவே அவன் தன்உயிரைப் பலியிடுகிறான். அதை நான் படித்துமுடித்ததும் லெனின் சிரித்தார். நன்றாக இல்லை என்னும் பாவனையில் கையை அசைத்தார்.

அதன் பிறகு அவருக்கு நான் வாசிக்க வேண்டிய அவசியமே இல்லாமல்போய் விட்டது....

## குழந்தையுடன் குலாவும் லெனின்



1908ல் இ[illegible]. ஐ. அஸ்குர் என்பவரால் உருவாக்கப்பட்டு 1957ல் சலவைக்கல்லினால் வார்க்கப்பட்ட சிலைவடிவம்

## விஞ்ஞான உலகின் தந்தையர்

தொகுப்பு:- கி. அல்பிறட் பங்கிராஜ்

**யோன் டால்ற்றன்**

சேர்க்கை இல்லாமல் விருத்தியில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால் யோன் டால்ற்றன் இல்லாமல் இரசாயன வளர்ச்சி இல்லை என்றே கூறவேண்டும். இங்கிலாந்தில் பிறந்த டால்ற்றன் இரசாயனச் சேர்க்கை பற்றி விளக்கம்தந்து விதிகளையும் (இப்பொழுதும் டால்ற்றனின் கொள்கை விஞ்ஞான பாடங்களில் முக்கியஇடத்தை வகிக்கிறது) வரையறுத்து இரசாயன உலகில் இன்றும் வாழ்ந்து கொண்டே வருகிறார். அணுவைப் பிரிக்கமுடியாது என்றும், மிகச்சிறிய துகள்களால் அனதுவே அணு என்றும் இன்னும் பல விதிகளை வையத்திற்கு வழங்கினார். இவரது அரிய கண்டுபிடிப்பு உலகின் பல நாடுகளிலும் புகழ்பெற்றதுடன் அரச கௌரவமும் கிடைக்கப் பெற்று அநேக பட்டங்கள் அடுக்கடுக்காகப் பெற்று ஈற்றில் காலமானார்.

**மார்க்கோனி**

**(1874—1937)**

வானொலியைக் கண்டுபிடித்த வல்லுநர் மார்க்கோனி. இத்தாலி நாட்டில் பிறந்தவர். தனது இருபதாவது வயதில் கம்பியில்லாமல் 30 அடி தொலைவிற்கு ஒலியினை அனுப்பி வெற்றி பெற்றார். ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் கம்பியில்லாத் தந்திமூலம் தொடர்பு படுத்தி. உலக வரலாற்றில் சரித்திரம் சமைத்தார். ஆராய்ச்சியின் நடுவில் பல துன்பங்கள் வந்துற்றபோதிலும் 'விடாமுயற்சியும் தளரா உழைப்பும் வெற்றியைத் தேடித்தரும்' என்ற உண்மைக்கேற்ப மார்க்கோனி சிறிதும் தளராது தமது வேலையை மீண்டும் தொடர்ந்து, 1909-ல்நோபல் பரிசும் பெற்றார்.

**லூயிபாஸ்ட்டர்**

**(1822—1895)**

பிரான்சுநாட்டில் பிறந்த லூயிபாஸ்டர் இளமையில் ஓவியத்தில் மிகுந்த ஊக்கம் செலுத்தினார். பிற்காலத்தில் உலகம் போற்றும் விஞ்ஞானமேதையாக விளங்கிய இவரிடம் சிறுவயதில் விஞ்ஞானியாக வருவதற்குரிய ஒரு சிறு குணங்குறிகூடக் காணப்படவில்லை இவரது வாழ்வில் பல துன்பங்கள் குறுக்கிட்ட போதிலும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு விசர்நாய்கடிமருந்தைக் கண்டுபிடித்தார், அத்துடன் வளியிலே நுணுக்குயிர் உள்ளன எனபதையும், 'பாஸ்ட்டர் ரைஸ்' முறையையும்உலகுக்கு அளித்து 1895-ம் ஆண்டு பொன்னுடலை நீத்துப் புகழுடலை அடைந்தார். ஆனால் அவர் அளித்த செல்வங்கள் இன்றும் அழியாது அவர்பெயரைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

[15ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்மூடி விழிப்பதற்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சு இராசரத்தினம் அவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள். சிரித்திருப்பார்களென்றெண்ணுகிறேன். பிரேரணை பத்திரிகையில் வெளிவந்தது; அவ்வளவே.

அந்தப் பிரேரணைக்குப் பின்பு, சில மாசங்களுக்கிடையில் ஒரு பிரேரணையுமில்லாமலே செயல் வீரர் திரு. சு. இராசரத்தினம் அவர்களாலேயே சைவப் பெண் அநாதசாலையும் திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆண்- பெண் அநாதசாலை திரு. இராசரத்தினம் அவர்களின் இருகண்கள். கண்ணை இமை காப்பதுபோல இறுதி மூச்சுவரை அநாதசாலையைப் பாதுகாத்து வந்தவர்கள் திரு. சு. இராசரத்தினம் அவர்கள்.

ஃ

அநாதர்கள் என்றுகொள்ளத்தக்கவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று அரசாங்க விதியுண்டு. அவர்களுக்கே உதவி நன்கொடை. விதிக்கமையாத அநாதர்களையும் அநாதசாலையில் அனுமதிப்பதுண்டு அன்றி வேலைதேடி அலைந்துலைந்து வருபவர்களுக்கும் ஆறுதல் அளிப்பது மேற்படி அநாதசாலை திரு. இராசரத்தினம் அவர்களின் அநாதசாலை ஓர் அன்ன சத்திரம்.

அநாதைப்பிள்ளைகள் குறிப்பிட்டவயசு வந்ததும் வெளியேற்றப்படவேண்டியவர்கள். அரசாங்க உதவி அவர்களுக்கில்லை. சிலர் வெளியே எவ்வித தஞ்சமும் அற்றவர்கள். அப்படிப்பட்டவர்களை வெளியேற்ருது பராமுகமாய் விட்டுவிடுவது இராசரத்தினம் அவர்களின் வழக்கம். சிலர் காசுகட்டுவோம் என்றுகூறித் தங்கிவிடுவதுமுண்டு. இடையிடையே காசுகட்டுவார்கள். ஒழுங்காக அவர்கள் காசுகட்டுவதில்லை என்பதை அறிந்தும் அறியாமலிருப்பார்கள் திரு. சு. இராசரத்தினம் அவர்கள்

**ஆதுலர்சாலை**

திருநெல்வேலிச் சைவ அநாதசாலைக்குஆதுலர்சாலை என்று பெயர் இடலாம். ஆதுலர் என்றவார்த்தைக்கு வசதியற்ற வறியவர்கள் என்று பொருள். சைவ அநாதசாலையில் வசதியற்ருேர் அனைவரையும் திரு. இராசரத்தினமவர்கள் அனுமதித்தார்கள்.

**சைவநீதி**

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்' என்பது சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் மூலமந்திரம்.

அவரவர்க்கு அமைந்தசமயத்தின்வழி அவரவர் ஒழுகிக் கடைத்தேறவேண்டுமென்பது சைவசாத்திரநீதி, மதமாற்றமென்பதைச் சைவசமயம்ஒத்துக்கொள்வதில்லை

எவ்வெச்சமயத்து ஆதுலர்களையும் சைவ அநாதசாலை ஏற்று அவரவர் சமய ஒழுக்கத்தின்வழி ஒழுகவைக்கும் நீதியை அதுமேற்கொண்டுள்ளது. இதனை உலகம் அறியவேண்டும்.

**மும்மொழிக் காவியபாடசாலை**

1936-ல் சைவ அநாதசாலைச் சார்பிலும் சைவாசிரிய கலாசாலைச்சார்பிலும் மும்மொழிக் காவிய பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இது ஆறுவருடகாலம் நன்கு நடந்தது? மும்மொழி தமிழ், சம்ஸ்கிருகம், சிங்களம் என்பன. சம்ஸ்கிருதப் பொறுப்பை வியாகரணசிரோமணி சீதாராமசாஸ்திரிகள் ஏற்று நடத்திஞர்கள். சம்ஸ்கிருத பண்டிதரும் உதயமாயினர். தமிழில் பண்டிதர், பாலபண்டிதர், பிரவேச பண்டிதர் தொகையை மலியச் செய்தது மேற்படி பாடசாலையேயாம்.

சிங்களப்பொறுப்பை ஏற்றவர் ஆரியகுளத்துப் புத்தகோயிற்குரு. அவர் கண்டியைச் சேர்ந்தவர்; பிரபுத்துவம் மிக்கவர். அவர் பலருக்குச் சிங்களப்பயிற்சி அளித்தார். தமிழர் சிங்களம் படித்தற்கேற்ற பாலபாடங்கள் எழுதியவர் அவர். நான் அவற்றுக்கு முகவுரை எழுதியதுண்டு. அக்காலத்தில் புத்தகுருமாருக்குத் தமிழிலே பண்டிதராகவேண்டுமென்ற ஆசையிருந்தது.

**சிங்களப் பிரமுகர்கள் வருகை:**

ஒருநாள் என். எம். பெரேரா கொல்வின் கோஷ்டியினர் ஆண்களும் பெண்களுமாகப் பலர், காலஞ்சென்ற அத்துவக்காத்து சிற்றம்பலம் அவர்களை முன்னிட்டுக்கொண்டு. திருநெல்வேலி மும்மொழிக் காவிய பாடசாலைக்கு வந்துசேர்ந்தனர். சிங்களப் பயிற்சி நடந்தது அவர்களுக்குப் புத்துணர்ச்சியளித்தது. "சின்னஞ் சிறிய இலங்கையில் கிராமந்தோறும் உள்ள வஞ்சகமற்ற மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடி ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து வாழவேண்டியவர்கள்'' என்ற என் கருத்தைச் சிற்றம்பலம் அவர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள் மகிழ்ந்து அன்று திருநெல்வேலியில் தங்கி, சின்னமுத்துத்தம்பியில் கூட்டிய கூட்டத்தில் சிங்களர் தமிழும். தமிழர் சிங்களமும் படிக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். குறிப்பிட்ட காவியப் பாடசாலை முயற்சிக்குத் தம்மாலாவன செய்துவைப்போமென்று வாக்குறுதியும் செய்தனர். அன்று அவர்கள் நகைமுகம் சொல்லுந்தரமன்று.

**சிங்களப் பத்திரிகை:**

ஈழகேசரிப் பொன்னையா, திரு. இராசரத்தினம் அவர்களுக்கு வலக்கரம்; எனக்கு நெருங்கிய நண்பர். பெரேரா கோஷ்டியை வரவேற்றவர்களில் திரு. பொன்னையாவும் ஒருவர். அக்காலத்தில் பொன்னையாவும் நானும் சிங்களத்திலும் ஒரு பத்திரிகை நடத்தவேண்டுமென்று எண்ணியதுண்டு. இவ்வாருய யோசனைகளுக்குத் திரு. இராசரத்தினம் அவர்களின் ஆதரவு கிடைக்குமென்பதை நாம் அறிவோம்.

இன்று திரு. பொன்னையா இருந்திருந்தால் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் அநுசரணையில் திரு. பொன்னையா அவர்களின் பெருமுயற்சியால், ஆதுலர்களாகிய சிங்களப் பிள்ளைகள் நூற்றுக்குக் குறையாதவர்கள் திருநெல்வேலிச் சைவ அநாதசாலையில் சேர்க்கப்பட்டு, அப்பிள்ளைகளின் தாய்மொழியில், அவர்களின் மதாசாரம், அவர்களின் முன்ஞேரின்வழிவந்த குலாசாரம் என்பவைகள் தக்க சிங்கள ஆசிரியர்கள் மூலம் பயிற்சி செய்யப்படும். இதனைப்பார்க்கும் பொருட்டு, மகாவலிகங்கை வவனியாவைக் கடந்து, ஆனையிறவுப்பாலத்துக்கு இப்பால் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிடும். பனைமரங்களில் தேங்காய் விழும்.

தமிழ், தமிழர் என்று எவரும் தொண்டை நோகவேண்டி வராது. தமிழ் தமிழர் என்று கத்துவது முன்னமே இட்டுக்கொண்ட கழுத்துச் சுருக்கை இறுக இறுக்குவதாயிருக்கும்.

(வளரும்)

## எலிகள் உற்பத்தி

மேற்கு ஜெர்மனி நகரமான ஹனேவரில் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படகிருமிகள் இல்லாத எலிகள் உற்பத்தி செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் பிராணி நிபுணர் ஆர், ஹாஸ்லே ஆராய்ச்சிகளுக்குப் பல நாடுகள் சுற்றியவர். இம்முயற்சியை மிகவும் பாராட்டியிருக்கிருர்.

ஜெர்மன் ஆராய்ச்சிக் கழகம் 1957-ல் ஏற்பட்டதிலிருந்து இத்தகைய முக்கிய ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. இந்தக் கழகத்தைச் சேர்ந்த ஆர்ஞல்ட் ஸ்பீஜின்னும் அவர் சகாக்களும் 50,000 சுண்டெலிகளையும் 180,000 எலிகளையும் கிருமிகள் இன்றி உற்பத்தி செய்து ஆராய்ச்சிகளுக்கு அனுப்பிவருகிருர்கள்.

இக்கழகம் எதிர் காலத்தில் நாய், பூனை ஆடுகள் இவைகளை கிருமிகள் இல்லாமல் வளர்க்கத் திட்டமிட்டுள்ளது.

## எதிர்காலப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி

நண்பர்களையெல்லாம் எப்படி நீண்டகாலத்துக்கு மறந்து வாழ முடியும்? சந்திரமண்டலத்துக்குச் சென்றவர்கள்கூட திரும்பிவரும்போது தமது தாய் அகத்துக்குத் திரும்புகின்ருேமென்று தவித்தார்களாம். இந்த நிலையில் எனது சொந்த நாட்டை நான் விரும்பினேன். என்னுடைய குழந்தைகள் மிகவும் சிறியவர்கள் காலப்போக்கில் அவர்கள் வளர்ந்து அந்த நாட்டுப் பயிற்சியிலே ஊறிவிட்டால்தொடர்ந்துஅங்கேயேவாழவேண்டுமென்றுபிடிவாதம் பிடித்தாலும் பிடிப்பார்கள். என்னை உருவாக்கியது இந்த நாடுதான் எனது பிள்ளைகளும என்னைப்போல் அவர்கள் தாமாகவே உருவாகவேண்டும் என்ற காரணங்களே சொந்த நாட்டுக்கு என்னை வரும்படி தூண்டின. என்னுடைய சேவை நான் பிறந்த சமுதாயத்துக்குப் பயன்படுவதையே யான் பெரியமகிழ்ச்சியாகக் கொள்கின்றேன்.

கேள்வி: நீங்கள் லண்டனில் வாழ்ந்த காலங்களில் அயல் நாட்டு களியாட்டங்களில் அதீத மோகமேற்பட்டிருக்கும் அல்லவா?

பதில்: பலர் அந்த நாட்டுப் பண்பாட்டிலேயே ஊறித் தம்மை மறந்துவிடுவதுண்டு. என்னைப் பொறுத்தவரை அமைதியான சூழலையே பெரிதும் விரும்பினேன். வீட்டிலிருந்துகொண்டே டெலிவிஷன் மூலம் பல காட்சிகளையும் நாம் இரசிக்கக்கூடியதாக இருந்தது. வேலை முடிந்து வீட்டிற்கு வந்தால் மனைவி மக்களுடன் சேர்ந்து டெலிவிஷன் காட்சிகளை இரசித்துக்கொண்டிருப்பேன். அவ்வப்போது வெளியேசென்று சினிமாப்படங்களும் பார்ப்பேன். 'ஷெவீல்ட்'என்னும் இடத்தினை அடுத்துள்ள கிராமங்களுக்கும் செல்வதுண்டு. ஐக்கிய ராஜ்யக் கிராமங்களும் இயந்திரமயமாகவே உள்ளன. ஆனல் சுகாதார அமைப்பில் சிறந்து விளங்குகின்றன. இயற்கைக் காட்சிகளை இரசிப்பதிலும், அனுபவிப்பதிலும் அங்குள்ளவர்கள் தீவிர அக்கறை காட்டுகின்றனர்.

டாக்டர் சேனுதிராசா யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த திரு. சண்முகம், திருமதி சண்முகம் ஆகியோரின் மைந்தன். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பயின்று 1954-ம் ஆண்டளவில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் டாக்டராகப் பயிற்சி பெற்று [illegible]

## 2 கிலோகிராம் நிறையுடைய எக்ஸ்ரே இயந்திரம்

எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய எக்ஸ்ரே இயந்திரம் ஒன்றைச் சோவியத்நிபுணர்கள் உருவாக்கியுள்ளனர். இதன் எடை 2 கிலோகிராம்தான்! உலோகக் குழாய்களில் உள்ள கண்ணுக்குத் தெரியாத கோளாறுகளைக் கண்டுபிடிப்பதற்கு இது பயன்படுகிறது.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Poya, Prepoya 4 shows
Christopher Lee
in
RASPUTIN THE MAD MONK
Scope-color

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p m,
Poya, Prepoya 4 shows
Tony Franciosa,
Requel Welch
in
FATHOM


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
ஆனந்தன்-தேவிகா
நடித்த
குபேரதீவு

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
விஜயநிர்மலா - பாலையா
நடித்த
சிரித்த முகம்

யாழ்-வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்—விஜயகுமாரி
நடித்த
செல்வியின் செல்வன்

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனேரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லானு மோகனும்பாள

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணநிதி
நடிந்த
கே. எஸ், கோபாலகிருஷ்ணனின்
சுபதினம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உலக மேடை

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

அமைப்பைஉருவாக்கவேண்டும்.

தேர்தல் பிரசாரம் இப்போது அங்கு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொள்ள சங்கங்களுக்குச் சென்ற புட்டோ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டபோது மற்றொரு தரப்பினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில்தான் புட்டோவை நோக்கி துப்பாக்கிக் குண்டு வந்தது. குறி தவறி மற்றொருவரைப் பலி கொண்டது.

இந்தியாவில், ஜோதிபாசாவும் பாசுவும் பாகிஸ்தானில் புட்டோவும் சென்றவாரம் குண்டுக்குப் பலியாகியிருந்தால் ஆசியாவில் இரு அரசியல் கொலைகள் நிகழ்ந்திருக்கும்.

அரசியல் நாகரிகம் பேசும் அமெரிக்காவில் சமீபகாலத்தில் சரித்திரம் ஆசியாவுக்குத் திரும்பியிருக்கும். அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் முதல் ஜோன்கென்னடி, றொபர்ட் கென்னடி வரையும் இந்தியாவில் மகாத்மா காந்தியும் பாகிஸ்தானில் லியாகத் அலிகானும் பர்மாவில் 9 மந்திரிகளும் நமது நாட்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி: பண்டாரநாயகாவும் அரசியலுக்காக உயிரைப் பலி கொடுத்தவர்கள். இந்தக் கொலைகளினால் அவர்களின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் கொலை செய்ய முடிந்ததா?

மக்களின் உணர்ச்சியைத் தூண்டி விடும் தலைவர்களே இதற்குப் பொறுப்பு என்று சொல்லலாமா?

## வாரசாரம்

(2ம் பக்கத் தொடர்ச்சி]

டுப் பொதுத்தேர்தலின் போது பருத்தித்துறைத் தொகுதியில் இப்படியொரு பொதுமேடை அமைக்கப்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. க. துரைரத்தினம், தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு. என். நடராசா, கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் மோதிலால்நேரு ஆகியோர் ஒரே மேடையில் நின்று தங்கள்கட்சிக்கொள்கைகளையும் தங்கள் திட்டங்களையும் எடுத்துக்கூறினர். கூட்டம் அமைதியாக நடந்து முடிந்தது. பொதுமேடை அமைத்துக் கொள்கைகளையும் திட்டங்களையுமே எடுத்துக்கூறுவதாயின் மேடைக்குமேடை நின்று வசை பாடுவதும் ஒழிந்துவிடும். தேர்தலும் நேர்மையாகவும் அமைதியாகவும் நடைபெறமுடியும்.

## தமிழ்நாடு காட்டும் வழி

வட இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இரண்டு அரசியல் தலைவர்களின் உயிரைப் பலிகொள்ள முயற்சி நடந்த அதேசமயத்தில் தமிழ் நாட்டில் ஜனநாயக முறையில் ஒரு தலைவரை தமிழ் நாடு பலிவாங்கியிருக்கிறது. திருமதி இந்திரா காந்தியின் காங்கிரஸ் பிரமுகரும் முன்னாள் திறமைசாலியெனப் புகழ்பெற்றவருமான திரு. சி. சுப்பிரமணியம் ராஜ்ய சபைக்குப் போட்டியிட்டார். அவர் தோல்வியடைந்தார். தி.மு கழகம் உட்பட எல்லாக் கட்சிகளும் சேர்ந்து தமக்குச் சதி செய்துவிட்டதாக சி. எஸ். கூறுகிறார். கழகம் விரலசைத்திருந்தால் சி.எஸ் ராஜ்யசபைக்குப் போயிருப்பாரென்கிறார் கருணாநிதி. பாவம் சி. எஸ்.

சினிமாவும் கைவிட்டு, அரசியலும் கைவிட்டு, ஆதித்தனுக்கெதிராகப் போராட்டம் என்று குரல்கொடுத்துக் கொண்டிருந்த எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது. சி.எஸ். ஸின் துரதிர்ஷ்டம் எஸ். எஸ். ஆரின் அதிர்ஷ்டம். இதுதான் அரசியல்!

## புகைப்படக்காட்சி

(நமது நிருபர்)

இலங்கை தேசிய புகைப்படக் கலைச்சங்கத்தின் 15வது வருடாந்த புகைப்படக் கண்காட்சி இன்று கொழும்பு கலாபவனத்தில் நடைபெறுகிறது. இப்புகைப்படக் காட்சியினது 10 சிறந்த புகைப்படங்களினது காட்சியும் இடம் பெறுகின்றன.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

கொககுவிற் குளப்பிட்டி-ஆனைக்கோட்டை றேட்டில் உயரப்புலத்தில்4 1/2பரப்பு றேட்டுக்கரைகாணி விற்பனைக்குண்டு. ப. இலங்கநாயகம்,11 ஓடை லேன், ஐயனார்கோவிலடி, வண்ணை பண்ணை. 2005

இராமநாதன் கல்லூரிக்கு அருகாமையில்உடுவில்றேட்டில் கிணறு உள்ள ஆறு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சி. சுப்பிரமணியம், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் போன்: 285 2015

### விற்பனைக்கு

கீரிமலை வாடிவீடு 27 பரப்பு. காங்கேசன்துறை வீதி.கேணி. துறைமுகம், சீமெந்து தொழிற்சாலைக்கு அருகாமையில்- 2 அல்லது 3 பரப்பு துண்டுகளாக வீட்டுடன் அல்லது வீடில்லாமல் பெற்றுக்கொள்ளலாம். பருத்தித்துறை 12 பரப்பு. வி. எம். வீதி வடமராட்சிப் பெண் பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்புத் துண்டுகளாகப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ளவும், நாகநாதன், ஆத்தியடி, பருத்தித்துறை 2012

### தேவை

கொழும்புக்கருகாமையிலுள்ள தொழிற்சாலையொன்றில் சமையல் செய்வதற்கு உதவிச் சமையல் ஆண்பிள்ளை ஒருவர் தேவை:விபரங்கட்கு: ஜபர்ஜீ பிரதர்ஸ், 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்துக்கு நேரில்வரவும். 2011


தெய்வீக சுகமளிக்கும்

ஆராதனைகள்

ஏப்ரல் மாதம் 3-ம் திகதி முதல் 6-ம் திகதி வரை
மாலை 6 மணிக்கு

வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாண பெரிய தபால் கந்தோர் அருகில்)
விசாரணைகள்
இலங்கை பெந்தகோஸ்தே சபை,
111, கண்டி றோட்,
சுண்டிக்குளி. 2206



மாபெரும் புதுவருட

மலிவு - விற்பனை

விரையுங்கள் விரையுங்கள் விரையுங்கள்

எல்லாவிதசேட்களும் விலைகள் மிகமிகக் குறைக்கப்பட்டுள்ளது
சிறந்தனவற்றை இச்சரசவிலைகளில்
வாங்கிச்செல்ல முந்துங்கள்

| | வ. வி. | ம. வி. |
|---|---|---|
| **டெரலின்** | | |
| முர்றெக்ஸ் லக்ஸறிசேட் | 25-50 | 19-00 |
| ஸ்கைவே லக்ஸறி சேட் | 24-50 | 16-00 |
| டிப்ளோமற் டிப்ளோன் சேட் | 18-50 | 17-00 |
| மொட்டெக்ஸ் லக்ஸறி சேட் | 24-50 | 12-00 |
| | வ. வி. | ம வி. |
| **நைலோன்** | | |
| டிப்ளோமற் லக்ஸறி சேட் | 29-50 | 20-00 |
| ஸோடியக் லக்ஸறிசேட் | 22-50 | 11-00 |
| பென்கர் லக்ஸறிசேட் | 30-00 | 26-00 |
| | வ. வி. | ம. வி. |
| **ரெற்றோன் கொட்டன்** | | |
| ஹென்லி சுப்பிறிமோ டிலக்ஸ் | 35-00 | 27-00 |
| டயா றோசானு | 35-00 | 27-00 |
| மான்கற்றன் கோல்டன் நீடில் | 35-00 | 27-00 |
| டிப்ளோமாட் ரெற்றோன் கொட்டன் | 22-50 | 16-00 |
| டிப்ளோமாட் அரஸ்டிகோட் | 17-50 | 11-00 |

இன்னும் ஆயிரக்கணக்கான சேட்டுகள்
மீளப்பெறமுடியாத விலையில் எம்மிடம்பெற்றுக்கொள்ளலாம்
இந்தக் கொள்ளைமலிவை
வேறெங்கும் அனுபவிக்கமாட்டீர்கள்

எந்நாளும் உங்கள் ஆதரவை நாடும்

பொகுமால்ஸ்

சேட் மாளிகை

49, மெயின்வீதி :: யாழ்ப்பாணம்.



நீங்கள் வீடு கட்டும் பொழுது

ஒட்டுப் பலகை

கதவுகளை பாவித்து



விலையை 40% குறைக்கவும்
விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.

☐ ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குன்றநததை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புலரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. இரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92903

THUNDERFLASH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ம ணி மொ ழி க ள்

எந்த மனிதனும் எப்போதும் துன்பத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கமுடியாது. எவனும் ஆயுள் முழுவதும் துயரத்திற்கு ஆளாகமாட்டான். ஒவ்வொரு செயலும் முறையே அதனதன் பயனைத்தருகின்றது. அதற்கேற்பச் சந்தர்ப்பங்களையும் ஒருவற்கும் கொணர்கிறது.

0 0 0

கீழ்நோக்கி ஓடுவதே தண்ணீரின் இயற்கை. ஆனல் கதிரவனின் கிரணங்கள் அதனை ஆவியாக்கி வானில் உயர்த்துகின்றன. அது போன்றே மனமும் இழிந்த பொருள்களான விஷய சுகங்களை நாடிப்போவது இயற்கை. ஆனல் கடவுளின் அருள்மனத்தை உயர்த்த பொருளை நாடிச் செல்லும்படி தூக்கிவிடும்.

— அன்னை சாரதாமணி






# வேகமாக உருவாகி வருகிறது யாழ். நவீன மத்திய சந்தை

## 'மைற்' ஸ்தாபன அதிபர் வெளியிட்ட தகவல்கள்

— நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் —

யாழ். நகரத்துக்கு அழகூட்டப்போகும் யாழ். நவீன மத்திய சந்தை 54 கடைகளையும், 80 மரக்கறிக் கடைகளையும் வைக்கக்கூடிய விதத்தில் வேகமாக உருவாகிக்கொண்டு வருவதாக 'மைற்' ஸ்தாபன அதிபர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா என்னிடம் கூறினர்.



யாழ்ப்பாணத்தில் இப்போது கட்டப்பட்டுவரும் நவீன மத்திய சந்தையை கொந்தராத்தாகப் பொறுப்பேற்றுள்ள 'மைற்' ஸ்தாபனத்தின் அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது அவர் பலதகவல்களை வெளியிட்டார்.

அரசாங்க கைத்தொழில் அபிவிருத்திச்சபை அதிபராகவும், வங்கிகளுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் தொழில்நுட்ப ஆலோசகராகவுமிருக்கும் டாக்டர் மகாதேவா இங்கிலாந்தில் பலதுறையில் பட்டம்பெற்றவர். ஏற்கனவே மட்டக்களப்பு விமான நிலையத்தை அமைத்த பெருமைக்குரியவர் இவர் எந்திர பொறியியல் துறையில் விசேஷ தகைமை பெற்றவர்.

'நவீன விஞ்ஞானம்' மூலம் நகரை அழகு படுத்தலாம் என்ற நோக்கம் கொண்ட கலாநிதி அவர்கள் முப்பத்தெட்டுவயதுக் கலைஞராவர்.

'வடமாகாணத்தைப் பொறியியல் துறைமூலம் வளம் செய்யவேண்டும். இதுவே என்நோக்கம். யாழ். நவீனசந்தை இதற்கானஒரு சந்தர்ப்பத்தை எனக்களித்துள்ளது' என்று மகிழ்ச்சியோடு டாக்டர் கோபாலபிள்ளைமகாதேவா சொன்னர்.

உருவாகிக்கொண்டு வரும் யாழ். நவீன சந்தையைப் பற்றி அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

கிணறு, மலசலகூடம் முதலியனவுடன் நடுவே 'டச்சு' கழிவுத் தண்ணீர் பாயும் வாய்க்காலும் அமைகிறது. சுமார் 60 வேலையாட்கள் சராசரி இப்போது எம்மிடம் வேலை செய்கின்றனர்கள். வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் நல்லவர்கள். கட்டுப்பாடும், கண்ணியமும், ஊக்கமும் உடையவர்கள். பல கஷ்டமான காலங்களிலும் ஒத்தாசை புரிந்தார்கள். உதாரணமாக மழைக்காலங்களில் வெட்டிய அஸ்திவாரங்கள் தண்ணீர் நிறைந்து தூர்ந்து போனதால் பின்பும் வெட்ட நேர்ந்தது.

எனக்குப் பல சந்தர்ப்பங்களில் இந்தச் சந்தை கட்டும் வேலைமூலம் சோதனை ஏற்பட்டது.

மத்திய நவீன சந்தை அநேகமாக எங்கள் ஒப்பந்தத்தின்படி இவ்வாண்டு நவம்பரில் பூர்த்தியடையும். மாணவர்கள் தொழில்நுட்ப அறிவு பெற்று அதன் மூலம் நன்மை பெறவேண்டும். குமாஸ்தா வேலை மோகம் மாறவேண்டும். பல மேலைநாடுகள் மிகவேகமாக கைத்தொழில் மூலம் அபிவிருத்தியடைந்துள்ளன. நாமும் இன்று சற்றே விவசாயத்தில் அபிவிருத்தியடைந்துள்ளோம். வேலைத்தகவல்களை அவ்வப்போது காலாகாலத்தில் தந்து சேவை மனதோடு இச்சந்தைகட்டி முடியமாநகரசபை உதவ வேண்டும். இந்த [illegible] வேலைகளைச்சரிவர முடிப்பதற்கு மாநகர சபை தட்டிக் கழித்துத் தாமதம் செய்யாமல் உடனுக்குடன் நிதிகளையும் தந்துதவ வேண்டுமென எதிர்பார்க்கின்றேம். நிதி உதவி தாமதித்தால் அபிவிருத்தி நோக்கம் யாவும் கெட்டுவிடும். எனவே பரஸ்பரம்பேசிதொழில்வேலைகளை அறிந்துகூட்டுமனப்பான்மையோடு ஒத்துழைக்கும்படி சபையைக் கேட்டுக்கொள்ளுகின்றேம். எமது வேலையாட்கள் அன்றட சம்பளத்தையே நம்பி வாழ்கிறர்கள்.

அரைவாசி சந்தை கட்டிட வேலைகள் முடிந்தும் ரூபா 3 லட்சம்வரை பணம் பெற்றுள்ளோம்.

யாழ். மாநகரசபைமேயர் திரு. ரி. எஸ். துரைராசா அவர்கள்அண்மையில் வேலை நடைபெறும் இடத்துக்கு வந்து பல்வேறு விடயமாக கலந்துகொண்டார். காய்கறி, பழச்சந்தை, மீன் சந்தை இவற்றை எப்படி எங்கு அமைப்பது என்பன போன்ற முக்கியவிடயங்கள் ஆராயப்பட்டன.

சந்தை முகப்பு 40 சிற்பத் தூண்களுடன் கட்டி சிறப்பாக அமையும்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## பொலிசாரால் தேடப்பட்டவர் கைதானர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பெண் டாக்டர்களின் விடுதியில் புகுந்து திருடியது சம்பந்தமாகப் பல நாட்களாகப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த வண்ணர் பண்ணையைச் சேர்ந்த சண்முகம் கிருஷ்ணபாலன் என்பவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பரமகுரு நேற்று கைது செய்தார்

சண்முகம்கிருஷ்ணபாலனை மேல் விசாரணை செய்த கான்ஸ்டபிள் என். ஈ. இரத்தினம் அவரிடமிருந்து சொனி ''ட்ரான்சிஸ்டர்'' வானெலிப் பெட்டியையும், ரெலிஸ்கோப் மூன்றையும் கைப்பற்றியுள்ளார். பொலிசார் இன்று அவரை யாழ் [illegible] நீதிபதி திரு. [illegible]

## எம் எஸ். சுப்புலட்சுமி இங்குவர அனுமதி மறுப்பு?

நமது சிறப்பு நிருபர்)

சங்கீதவாணி பத்மஸ்ரீ திருமதி எம் எஸ். சுப்புலட்சுமி இலங்கைக்கு வருவதற்கு தேசிய அரசாங்கம் அனுமதி மறுத்தது உண்மையா?

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி நிதிக்காக இலங்கையில் நான்கு இடங்களில் திருமதி சுப்புலட்சுமியின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். ஆனல் திருமதி சுப்புலட்சுமி இங்கு வந்து கச்சேரி செய்வதற்கு அனுமதியளிக்க அரசாங்கம் மறுத்துவிட்டதாம்.

இது சம்பந்தமாக முன்னள் நல்லூர் எம். பி டாக்டர் இ. எம். வி. நகநாதன் பிரதமரைச் சந்தித்து திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி சிறந்த சங்கீத மேதையென்றும் ஐ. நா. சபையிலேயே அவர் இசைவிருந்தளித்திருக்கிறரென்றும் யார்யாரெல்லாம் இங்கு வந்து நிகழ்ச்சிகளை நடந்த அனுமதியளிக்கும்போது எம். எஸ். சுப்புலட்சுமிக்கு மட்டும் ஏன் அனுமதியளிக்கக்கூடாதுஎன்றும் கேட்டாராம்

ஆயினும் இதுவரை எம். எஸ். சுப்புலட்சுமி இங்கு வருவதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

---


### விற்பனைக்கு

3 பரப்பு குடியிருக்கும் நிலம் சிவப்பிரகாசம் ரேட்டில் விலைக்கு இருக்கிறது. 35, சிவப்பிரகாசம் ரேட்டில் வசிக்கும் ப. இராசரத்தினம், பிறக்டருடன் தொடர்புகொள்ளவும். 2020

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டைக்கு அருகாமையில் இருக்கும் திக்கிராய்க் குளத்தடியில் இருக்கும் பனையடைப்பும், நெற்காணியும் சேர்ந்த பரப்பு 24. அடைக்கலந் தோட்டம்கந்தசுவாமிகோவிலுக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தோடுகிணறும்அடங்கிய 4 பரப்பு, சங்கரத்தை சங்கத்தாபுலம் பரப்பு 13 1/4 பனையடைப்பு, சங்கரத்தை புதவயல் பரப்பு 12 1/2 நெற்காணி, சங்கரத்தை குதிரைப்பிட்டி 12 நெற்காணி, யாழ்ப்பாணம் கே. கே. எஸ், ரேட், தட்டா தெருச் சந்தியிலிருந்து உள்ளுக்குள் 25 யாரில், உள்ள வளவு 4 பரப்பும், 6 குழியும். கிணறும், வான்பயிரும் உள்ள காணி. தொடர்பு கொள்ளவும். திருமதி என். நடராசா, 49, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 12-4-70 மேல் திருமதி என். நடராசா, 16, அல்பிறட் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. 2019

---

டயஸ் முன்னிலையில் ஆஜர் செய்வார்கள்


### புதுவருடத்துககு பென்சன் முன்பணம்

கோட்டை. சனி

அறுபதாயிரம்ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள் புதுவருடத்திற்கு முன்னர் புதிய திட்டத்தின்படி அதிகரிக்கப்பட்ட பென்சன்பணத்தைப் பெற இருக்கிறர்கள். எல். பி. டி. சில்வா கமிஷனின் சிபார்சின்படி அதிகரிக்கப்பட்ட இந்தப் பென்ஷன் பணம் கிடைக்கவிருக்கிறது.

---


### மரண அறிவித்தல்

சோமநாதர் - கதிரவேலு

பண்ணுகம் தெற்கைச் சேர்ந்த மலாயன்பென்சனர் சோ கதிரவேலு காலமானர். இவர் திருமதி க பொன்னம்மாவின் அருமைக் கணவரும், சோ க வேலாயுதர் (கல்வி இலாகா கொழும்பு), க சனகலிங்கம் (P W D) மேற்பார்வையாளர் மலாயா], க சுந்தரலிங்கம், அன்னலட்சுமி, மகாலட்சுமி, ஜெயலட்சுமி, பரமலட்சுமி ஆகியோரின் அருமைத்தந்தையும், திரு இ அப்பாத்துரை (உபஅதிபர் பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், காலஞ்சென்ற ஆ சீனிமுத்து (ஆசிரியர் மலாயா), ச கைலாயபிள்ளை (மனேச்சர்கூட்டுறவு பண்டசாலை). திருமதி அன்னபூரணம், திருமதி க கனகாம்பிகை ஆகியோரின் மாமனுமாவர். அன்னரின் பூதவுடல் இன்று (6-4-70) பிற்பகல் 3 மணியளவில் திருவடிநிலையில்தகனம் செய்யப்படும், 2103


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org